
KALKI 25.8.85 ரூ. 1.50.





கல்கி

கர்நாடகா சிறப்பிதழ்-2



ஆதரவற்றோருக்கு "அந்த்யோதயா": இது ஹெக்டேயின் மூளையில் உதித்த திட்டம்

ஏழு வருடங்களுக்கு முன்னர் ஐந்து குழந்தைகளை விட்டுவிட்டு நாகவ்வாவின் கணவர் மறைந்ததும் ஊரே 'ஐயோ பாவம்' என்று கோரஸ் பாடிற்று. ஆனால் யாரும் அவளுக்கு உதவ முன் வரவில்லை. வருடத்துக்கு ஆறு மாதம் மட்டுமே வேலை தரக் கூடியவிவசாயக்கூலியாகச் சென்றுகுழந்தைகளுக்கு கஞ்சியோ, களியோ கொடுத்து வளர்த்து வந்தாள். வேலையில்லாத நாட்களில், குழந்தைகளுக்கு அரை வயிறு கஞ்சி கூடக் கொடுக்க முடியாத அவலநிலை. சில சமயம் மூலையில் உட்கார்ந்து 'ஓ'வென்று அழுவாள்.

1983ம் ஆண்டு ஜனதா அரசு பதவிக்கு வந்தது. ஒரு நாள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஜீப்கள் நாகவ்வாவின் கிராமமான சித்தவல்லிபுரத்துக்கு வந்தன. அரசு அதிகாரிகள், பாங்கு அதிகாரிகள் என்று பலர் இறங்கினார்கள். கிராமமே, 'எதற்கு இவர்கள் வந்திருக்கிறார்கள்?' என்று வியப்புடன் நோக்கியது. கிராமக் கணக்கு பிள்ளையும், மணியக்காரரும் ஓடி வந்தார்கள். ஜீப்பில் வந்த பி. டி. ஓ. சொன்னார்: "எல்லாரெனு கரது கொண்டு பா".

கிராமமே திரண்டது. வாழ வசதியில்லாதவர்கள் யார்; ஏழ்மை கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் யார் என்று கணக்கெடுக்கப் பட்டது. நாகவ்வா அதிகாரிகளின் கண்ணில் பட்டாள்.

"உனக்கு என்ன தொழில் தெரியும்?"

'விழித்தாள் நாகவ்வா.

"இட்டிலி தோசையாவது பண்ணத் தெரியுமா?"

"ம்.

"பாத்திரங்களும், பணமும் கொடுத்தால் சின்ன ஹோட்டல் வைத்துக் கொள்வாயா?"

"சரி."

கிராம வங்கி நாகவ்வாவுக்கு 2000 ரூபாய் கடனுதவி வழங்கியது. இந்த ரூபாயில், ஓட்டல் நடத்துவதற்கு வேண்டிய பாத்திரங்களையும் வங்கியே வாங்கித் தந்தது.

நன்றியுடன் தொழிலைத் துவக்கினாள் நாகவ்வா.

* * * * *



* "சாப்பாட்டுப் பிரச்னை சுத்தமா இல்லீங்க!"

"தினமும் எத்தனை ரூபாய்க்கு பிஸினஸ் நடக்குது?"

"70 ரூபாய்க்கு பிஸினஸ் ஆவுது."

"எவ்வளவு லாபம் வரும்?"

"தினமும் 15 ரூபாய் நிக்கும்."

"இப்போது சாப்பாட்டுக்கு ஒண்ணும் பிரச்னை இல்லையே?"

"சுத்தமா இல்லீங்க."

நாங்கள் நாகவ்வாவுடன் நடத்திய உரையாடல் இது.

2000 ரூபாய் கடன் பெற்றதில் நாகவ்வா 50 சதவீத பணத்தைத் திருப்பித் தந்தால் போதுமானது; அதுவும் ஐந்து வருடங்களில். இன்னொரு 50 சதவீதத்தை கர்நாடக அரசே வங்கிக்குக் கட்டிவிடுகிறது. இந்தத் திட்டத்தின் பெயர்தான் "அந்த்யோதயா."

இன்று கர்நாடகாவில் 45 தாலுகாக்களில், உள்ள கிராமங்களில் கிராமத்துக்கு ஐந்து ஏழைக் குடும்பங்கள் வீதம் இந்தத் திட்டத்தால் பயனடைந்து வருகின்றனர். இதுவரை பத்தாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் 'அந்த்யோர்தயா' திட்டத்தால் பயனடைந்து இருக்கின்றன. இந்தத் திட்டம் முழுக்க முழுக்க மாநில அரசும், அரசுடமையாக்கப் பட்ட வங்கிகளும் இணைந்து நடத்தும் திட்டம். ஹெக்டேயின் மூளையில் உதித்த திட்டம். இந்தத் திட்டத்துக்காக இதுவரை 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிந்து இருக்கிறது.

பொட்டிக்கடை வைத்துக் கொள்ள, கோழி, வாத்து, வளர்க்க, ஆடு வளர்க்க, என்று பல்வேறு தொழில்களுக்கு 'அந்த்யோதயா' மூலம் கடன் வழங்கப்படுகிறது. இன்று கர்நாடகாவின் கிராமப்புறங்களில் இந்தத்திட்டத்தைப்பாராட்டாதவரே இல்லை!

—தில்லப்பா.

படம்: யோகா.

அன்று: மூலையில் உட்கார்ந்து அழுதவள் இன்று: லாபக் கணக்குப் பார்க்கிறாள்!

ஒன்றுக்கும் உதவாதவர்கள் உயர் சாதனை புரிகிறார்கள்!

உலகப் புகழ்பெற்ற இந்த மனநோய்ச் சிகிச்சைக் கேந்திரம் பெங்களூரிலிருந்து 10 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. இந்தியாவிலேயே இது போன்ற நிலையம் இது ஒன்றுதான்!

"இனிமேல் நான் விளையாடப் போகலை... ஐயையோ.... பெல்ட்டை உருவாதீங்க.... அந்த மூலையிலே நீங்க சொல்றபடி உட்கார்ந்துக்கிறேன்.... அடிக்காதீங்க." கைகளைக் கட்டிக் கொண்டு எங்கேயோ வெறிக்கப் பார்த்தவாறே உட்கார்ந்து கொள்கிறான் அந்தப் பதினாறு வயது இளைஞன்.

"ஏன் சார்.... நான் சினிமா ஸ்டார் மாதிரி இல்லை... என்னை அழகில்லேன்னு அடிச்சு விரட்டிட்டான் சார் அவன்...." தேம்பி தேம்பி அழும் அந்தப் பெண் திடீரென்று சிரிக்க ஆரம்பிக்கிறாள். உள்ளங்கையை கண்ணாடி போல் வைத்துக் கொண்டு, ஒயிலாக டிரஸ் செய்து கொள்வது போல் பாவனை செய்கிறாள்....

இவர்கள் சமூகத்தைப் பொறுத்தவரை எதற்கும் உதவாத பைத்தியங்கள்.... ஆனால், எங்களைப் பொறுத்தவரை இவர்கள் வெறும் நோயாளிகளே....: இவர்கள் மன நோய் குணமாகி, சமூகத்தில் மீண்டும் சாதாரணமாக வாழ முடியும்." என்று கூறுகிறார் **'NIMHANS' (National Institute of Mental Health and Neuro Sciences)** டைரக்டர் டாக்டர் ஜி. என். நாராயணரெட்டி.

மனநோய் மருத்துவத்தில் உலகப் புகழ் பெற்ற இந்த 'தேசிய மனநோய் மருத்துவக் கழகம்' பெங்களூர் நகருக்கு சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில், நூற்று அறுபது ஏக்கர் நிலப்பரப்பில் நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கிறது. மனநோய் மருத்துவத் துறையில், சிகிச்சை, ஆராய்ச்சி, பயிற்சி ஆகிய மூன்று பிரிவுகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் நிலையம் இந்தியாவிலேயே இது ஒன்றுதான்.

மனநோய்க்கு மூல காரணங்களான உடற்கூற்றில் மாற்றம், மனநிலை வேறுபாடுகள், சூழ்நிலை பாதிப்புக்கள் ஆகிய மூன்றினையும் ஒருங்கிணைத்த சிகிச்சை முறையே இந்நிலையத்தின் தனிச் சிறப்பாகும்.

மத்திய மாநில அரசாங்கங்களின் கூட்டு முயற்சியில் செயல்பட்டு வரும் இந்நிலையத்தில் மனநோய் மருத்துவத்திற்குத் தேவையான எல்லா நவீன வசதிகளும் இருக்கின்றன. மன இயல்புகளுக்கு நெருங்கிய உறவினரான "நரம்பு மண்டல" சிகிச்சையிலும்



• டாக்டர் நாராயணரெட்டி.



• நிமிர்ந்து நிற்கும் நிம்ஹான்ஸ்.



* கிராமப்புறப் பணி.

ஆராய்ச்சியிலும் இந்நிலையத்தில் பிரத்தியேக கவனம் செலுத்துகிறார்கள்.

எங்கும் ஓங்கி வளர்ந்த மரங்கள், மனதிற்கு குளிமை தருமை பச்சைப் புல்வெளிகள், பல வண்ணப் பூக்கள், சிட்டுக் குருவிகளின் சின்ன சத்தங்களுடன் பூங்காங்கள்.... இந்த சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கும் **'NIMHANS'** க்குள் நுழையும்போதே தவறுதலாக ஏதோ நந்தவனத்துக்குள் நுழைந்து விட்டோமோ என்ற மனப் பிரமை நமக்கு ஏற்படுகிறது.

மனநோய் மருத்துவமனை என்பது சிறை போல் நான்கு சுவர்களுக்குள் இருக்க வேண்டும்; நோயாளிகள் கைதிகள் போல் அறைகளில் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்ற நெடுங்கால நியதியைத் தகர்த்தெறிந்து இம்மாதிரி நிம்மதியான திறந்தவெளி சுதந்திர சூழ்நிலையில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது இக்கேந்திரத்தின் சிறப்பம்சம் என்று விளக்கினார் டாக்டர் நாராயண ரெட்டி.

''சோம்பித் திரியும் மனிதனின் மனம் 'சாத்தானின்' தலைமைச் செயலகமாகி விடுகிறது... மனநோய் உள்ளவர்களின் விஷயத்தில் இது நூற்றுக்கு நூறு பொருந்துகிறது. நோயின் தீவிரத்தைக் குறைக்க, நோயாளிகளை அவர்களுக்கேற்ற சிறு தொழில்களில் ஈடுபடுத்தி, அவர்களின் எண்ண அலைகளை ஆக்கபூர்வமான வேலைகளில் திசை திருப்பவே இந்த நிறுவனத்தில் 'புனர் வாழ்வுத் திட்ட மையம்' இயங்கி வருகிறது'' என்று விளக்குகிறார் இத்துறையில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் மனநிலைத் துறை விரிவுரையாளர் ரங்கநாதன்.

குணமடைந்து வரும் நோயாளிகள் சமூகத்தில் மீண்டும் கௌரவமாக வாழ வழிவகை செய்யவும் இம்மாதிரி சிகிச்சை முறை உதவுகிறது. ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டு செல்வதால் அவர்களின் வருமானத்திற்கு வழிவகை செய்யப்பட்டுவிடுகிறது.

வேலையில் ஈடுபட்டிருக்கும் நூற்றுக் கணக்கான நோயாளிகளின் ஆழ்ந்த ஈடுபாடு நம்மை அதிசயிக்க வைக்கிறது. அச்சமயத்தில் அவர்களிடம் எந்தவிதமான அசாதாரணப் போக்கையும் காண முடியவில்லை. நாம் வந்ததைக் கூட கவனிக்காமல் அச்சு வேலை, மெழுகுவர்த்தி செய்தல், இயந்திர வேலைகள், துணி நெய்தல் ஆகிய வேலைகளில் யாவரும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ''இவர்களில் யார் மன நோயாளிகள், யார் நிலைய மேற்பார்வையாளர்கள் என்று கண்டு பிடியுங்கள் பார்ப்போம்'' என்று நமக்கு ஒரு புதிர் போடுகிறார் ரங்கநாதன். சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு நாம் தோல்வியை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ''எங்கள் சிகிச்சை முறையின் வெற்றியே உங்கள் தோல்வியில்தான் இருக்கிறது.'' என்று சிரிக்கிறார் ரங்கநாதன்.

''**NIMHANS** இன் மனநோய்த்துறை மருத்துவர்கள் பல கிராமங்களில் முகாமிட்டு மன

நோய் உள்ளவர்களைக் கண்டு பிடித்து சிகிச்சைக்கு உதவுகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவர்களுக்கு மனநோய்த்துறையில் பிரத்யேகப்பயிற்சி அளித்து அவர்களையும் எங்களுக்கு உதவத்தயார் படுத்துகிறோம்'' என்று சொல்கிறார் டாக்டர் ஐசக்.

மனநோய்களின் மூல காரணங்களைப் பல பிரிவுகளாக நமக்குப்பிரித்துக்காட்டி விளக்குகிறார் டாக்டர் ரகுராமன். ''மனநிலை பாதிப்புக்கள் உடலில் ஏற்படும் நோய்களால் உண்டாகலாம். உடல்நோய் இல்லாமலே மனநோய் தனித்தும் நிற்கலாம். PSYCHOSIS என்ற பிரிவில் ஏற்படும் மனநிலை பாதிப்புக்களில் நோயாளி வெளி உலகிலிருந்து விலகி நிற்க ஆரம்பித்துவிடுகிறார். தன்னுடைய விபரீத செயல்களின் விளைவுகளை புரிந்து கொள்ள முடியாதவராகிவிடுகிறார். NEUROSIS வகையில் நோயாளி கற்பனைகள் செய்து கொண்டு பயமெனும்படகில்மிதந்து கொண்டிருப்பார். பலவீன மனமுடையவர்கள் இம்மாதிரி நோய்க்கு எளிதில் பலியாகிவிடுகிறார்கள். இதைத் தவிர சுற்றுப்புற சூழ்நிலைகளும், போதை மருந்துகளும் மனநோய்களுக்கு வித்திட்டு உரமிட்டு வளர்ச்சியடையச் செய்துவிடுகின்றன.''

'NIMHANS'லிருந்து சிகிச்சை பெற்று வெளியேறுபவர்களுக்கு வேலை கொடுத்து ஆதரிக்கும் நிறுவனங்களில் ஒன்றான, 'பங்கஜ் இண்டஸ்ட்ரியல் என்டர்பிரைஸின் இயக்குநர் திருமதி கல்யாணி சொல்கிறார்: ''இவர்கள் சமூகத்தால் மென்மையாக நடத்தப்பட வேண்டியவர்கள். இவர்களின் திறமை மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல. உபயோகமாக இருக்கிறோம் என்று அறிய ஆரம்பித்தவுடன் இவர்களின் திறமை அதிகரிக்கிறது''.

மனநோய்த்துறையில் தியானம், யோகம் ஆகியவைகளின் பங்கைப் பற்றி 'NIMHANS' இல் நடந்து வரும் தீவிர ஆராய்ச்சிகளைப் பற்றி அதன் பொறுப்பாளர் டாக்டர் டி. தேசிராஜு விவரிக்கிறார்.

''வேகமான நவீன நாகரிக வாழ்க்கையில் 'Mental Tension, Mental Depression' போன்ற பாதிப்புக்கள் சர்வ சாதாரணமாகிவிட்டன. எல்லோருமே எல்லா சமயத்திலும் பைத்தியங்களில்லை. மனநோய்களின் அறிகுறி தெரிந்தவுடனேயே மனநோய் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றால் வியாதி முற்றாமல் இருக்கும்'' என்று அறிவுரை கூறுகிறார் டாக்டர் ரெட்டி.

இந்த மனநோய் மருத்துவக் கேந்திரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பிறகு எனக்கு எந்தவிதமான மனச் சோர்வும் உண்டாகவில்லை. மாறாக உற்சாகமும் மனநோயாளிகளைப் பற்றிய நம்பிக்கையுமே ஏற்பட்டன. இந்தக் கேந்திரத்தின் சிறப்புக்கு இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்?

—மங்கா.

அடுத்த இதழில்...

Cover Story: ஹெக்டே



கர்நாடகாசிறப்பிதழ்—3

கௌரவ ஆலோசகர்: சுஜாதா.



அறிமுகம்
ஸூப்பர்ஹீரோ
க்ளுகோன்-டி ®
அம்மாவுக்கு
அன்பான
ஸூப்பர்ஹீரோ!
Glaxo
Glucon-D
Glucose-D
High-grade, finely powdered glucose enriched with vitamin D and calcium phosphates
200 GRAMS NET
GLAXO LABORATORIES (INDIA) LTD
Dr. Annie Besant Road, Bombay 400 025, India.
Maximum Price Rs.
Local Taxes Extra
உங்கள் குழந்தைபற்றி ஆயிரம் கனவுகள் உங்களுக்கு. அவற்றின் உண்மை வடிவமே க்ளுகோன்-டி ஸூப்பர்ஹீரோ—துடிப்பும், சுறுசுறுப்பும் மிகுந்த உங்கள் குழந்தை. வேறு எந்த குழந்தை இப்படி இருக்க முடியும்!
உங்கள் குழந்தைக்கும் ஸூப்பர்ஹீரோ மிக விரும்பும் பானத்தையே கொடுங்கள். அதுவே க்ளுகோன்-டி.
க்ளுகோன்-டி, இதில், உங்கள் குழந்தை மேலும் நன்கு படித்திடவும், விளையாடவும் தேவையான உடனடி சக்திதரும் க்ளுகோஸ், விட்டமின்-D மற்றும் கால்ஸியம் ஃபாஸ்ஃபேட்டுகள் உள்ளன.
இப்போது, உங்கள் வீட்டிலும் உங்களுக்கே உரிய ஸூப்பர்ஹீரோ உலாவரட்டும். க்ளாக்ஸோ வழங்கும் க்ளுகோன்-டி மூலம்.
இப்புதிய, அசல் பேக்கெட்டைப் பார்த்து வாங்கவும்.
க்ளுகோன்-டி ®
ஸூப்பர்ஹீரோ மிக விரும்பும் உடனடி சக்தி பானம்.
GLL 1842



"என் தாய் நான்கு ஆண்டுகளுக்கு முன் கோபியைக் கொடுத்து, சமையல் செய்யும் ஆசையைத் தூண்டினுள். இந்தக் குறுகிய காலத்தில் நான் சமையலில் கைதேர்ந்தவளாகி விட்டேன். இந்த சாதனைக்கு கோபிக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்."



[illegible]

GOPI
Kitchen Machine

கோபி கிட்சன் மெஷின்
அருமையான தோற்றம்,
பெருமைதரும் டிசைன்,
5 ஆண்டு உத்தரவாதம்.

கோபி என்று கேளுங்கள்.
அதிகாரம்பெற்ற டீலர்களிடமிருந்தே வாங்குங்கள்.

வேண்டுமானல்
வாங்கக்கூடிய இணைப்புகள்.

Marketed & Serviced by: **M/s. Tripta Marketing Pvt. Ltd.,**
139, Bharathi Salai (Pycrofts Road), Royapettah, Madras — 600 014.

Head Office: Bangalore
Branch Office: Hyderabad

Adhiti

தலித், பண்டாயா, இலக்கிய இயக்கங்கள்



தலித் சாகித்ய அகாடமி தலைவர் வி. டி. ராஜசேகர்

சாகித்ய பரிஷத் என்பது கன்னட அறிஞர்களின் கௌரவமிக்க அமைப்பு. இதற்கு அரசாங்க மான்யம் நிறையவே உண்டு. ஒவ்வொரு ஆண்டும் இந்த அமைப்பு மாநாடுகள் நடத்துவதோடு ஓர் இலக்கியவாதியை அந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்க அழைக்கும். அந்த இலக்கியவாதி கன்னடப் பத்திரிகைகளின் அட்டைப்பட கௌரவத்தைப் பெறுவார்.

இந்த சாகித்ய பரிஷத் 1979—ஆம் ஆண்டு தனது 51—ஆவது மாநாட்டை தர்மஸ்தலாவில் நடத்திய போதுதான் 'பண்டாய சாகித்யா' என்ற எதிர்ப்பு இலக்கியம் தோன்றியது. தர்மஸ்தலாவில் நடப்பது அரசாங்க அரவணைப்புடன் நடப்பதென்றும் பிற்போக்கானவர்களின் மாநாடு என்றும், ஸ்ரீ. ஸ்ரீ, கோதாவரி பாருமலேக்கர் போன்றோரை அழைத்து நடத்தும் தங்கள் மாநாடு இதனை எதிர்த்து நடக்கும் கன்னட மக்களின் மாநாடு என்றும் பண்டாய சாகித்யக்காரர்கள் பிரகடனம் செய்தார்கள்.

இந்தக் கட்டத்தில் கன்னடத்தில் ஏற்கெனவே ஓர் இலக்கிய இயக்கம் இருந்ததையும் மறக்கக் கூடாது. அதுதான் தலித் இலக்கிய இயக்கம். இது ஹரிஜன இலக்கியவாதிகளின் இயக்கம். இந்த இயக்கம் மகாராஷ்டிராவிலிருந்து கன்னடத்திற்கு வந்தது. மகாராஷ்டிராவில் ஹரிஜன இயக்கம், **Black Panther,** என்ற அமெரிக்க நீக்ரோ புரட்சியாளர்களின், எழுத்தாளர்களின் இயக்கத்திலிருந்து உத்வேகம் பெற்றிருந்தது அப்போது.

கன்னட தலித் இயக்கத்தின் பிறப்பு சுவாரஸ்யமானது. பசவலிங்கப்பா என்ற ஹரிஜனத் தலைவர் தேவராஜ் அர்ஸ் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த போது கன்னட மொழியை 'பூசா' மொழி (கச்சடா மொழி) என்று கூறிவிட்டார். உடனே கன்னட மொழி ஆதரவாளர்கள் பசவலிங்கப்பாவை ராஜினாமா செய்ய வற்புறுத்தினர். அப்போது ஒரு கல்லூரி மாணவர் ஹரிஜன இளைஞர்களை ஒருங்கிணைத்து பசவலிங்கப்பாவிற்கு ஆதரவான இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தினார். அவர் அப்போது பாடிய ஹரிஜன எழுச்சிப் பாடல்களை இலக்கிய விமர்சகர்களால் தலித் கவிதைகள் என்று பாராட்டப்பட்டன.

இவ்வாறு தலித் இலக்கியம், முக்கியமாகக் கவிதை, கன்னடத்தில் பிறக்கக் காரணமானவர் தற்சமயம் 31 வயது இளைஞராக பெங்களூர் பல்கலைக் கழகக் கன்னடத்துறையில் பணியாற்றும் சித்தலிங்கையா ஆவார்.

மேல்நாட்டு இலக்கிய இயக்கங்களைக் காப்பியடித்து இலக்கிய இயக்கம் உருவாகுவதைவிட சுய பாஷையிலிருந்து இலக்கிய இயக்கங்கள் வளர வேண்டும் என்ற கோட்பாடும் இந்த இயக்கத்தின் கோட்பாடு என்று முன் வைக்கப்படுகிறது. இந்த கோட்பாடு நவ்யா என்ற கன்னடப் புதுக்கவிதை இயக்கத்தினரான முந்திய தலைமுறையினரைத் தாக்கும் உத்தேசத்தோடு வைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் இலக்கிய வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

இந்த இலக்கிய இயக்கங்களை நோக்கிப் பல தாக்குதல்கள் நடக்கின்றன. இலக்கியத் தரத்தை இவர்கள் பார்ப்பதில்லை என்பது ஒன்று. அக்குற்றச்சாட்டுக்குப் பதிலாக தலித் இலக்கியவாதிகள் கசங்கிய சட்டையுடனும், தாடியுடனும் தோற்றம் தரும் தேவனூர் மகாதேவையா என்ற இளம் மைசூர் கன்னட விரிவுரையாளரைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அவரது சிறுகதைத் தொகுப்பொன்றும் ஒரு குறுநாவலும் எல்லாத் தரப்பாராலும் பாராட்டப்பெறும் எழுத்தாகும். தலித் இலக்கியத்தின் சக்தியைக் குறைத்து மதிப்பிட முடியாது.

— தமிழவன்


அஸ்ஸாம் பிரச்னை
நான் ஒண்ணும் தோப்புக்கரணம் போடலியே!.. பஸ்கிதான் எடுக்கறேன்!.. நூத்தி தொண்ணூறு..
தொண்ணூற்றெட்டு....
வாங்க..சார்!.. பெரிய எழுத்து விக்கிர மாதித்தன் கதை!.. பெரிய எழுத்து மதன காமராஜன் கதை.. பெரிய எழுத்து வீரப்பன் கதை!..
எடு சார்!.. பெரிய எழுத்து புரட்சித் தலைவர் கதை!
இந்தா புடி சார்!.. பெரிய எழுத்து நவரத்ன ஒப்பாரி!



1985 ஆகஸ்டு 25
மலர்: 44 இதழ்: 4
குரோதன ஆவணி 9

கல்கி



சரித்திர புருஷர் ராஜீவ் அரசியல் ஞானியாக உயர்கிறார்!

பாரதத்தின் பிரச்னைகளையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகத் தீர்த்துக்கட்டியே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயலாற்றி வருகிறார் ராஜீவ். பஞ்சாப் பிரச்னையையடுத்து அஸ்ஸாம் பிரச்னையையும் சுமுகமாகத் தீர்த்து வைத்துப் பாரத மக்களின் நன்றிக்கும் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் பாத்திரராகியிருக்கிறார் பிரதமர். அன்புடன் அணுகி, எதிர்த் தரப்பினரையும் மதித்து, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வளர்த்துக் கொண்டால் எப்பேற்பட்ட சிக்கலான பிரச்னைக்கும் தீர்வு காணலாம் என்பதை நிரூபித்திருக்கிறார். விட்டுக் கொடுப்பது என்பது கௌரவப் பிரச்னையல்ல, தோல்வியும் அல்ல. எதிர்த்தரப்பினரையும் விட்டுக் கொடுக்கச் செய்கிற சாணக்கியம். மேலும் யாருக்கு விட்டுக் கொடுத்து விடுகிறோம்? அயல் நாட்டு எதிரிகளுக்கா? இல்லையே! நம் சகோதரர்களுக்குத்தானே!

காஷ்மீர், இலங்கைப் பிரச்னைகளும் ராஜீவின் கவனத்தைக் கவர்ந்து வருகின்றன. காஷ்மீரில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறாத ஓர் ஆட்சி தொடர்வது சரியல்ல என்ற முடிவுக்கு ராஜீவ் வந்துவிட்டதாகவே தோன்றுகிறது... ஃபரூக் அப்துல்லாவுக்குச் சீக்கிரமே நியாயம் வழங்கப்படும் என்று நம்ப இடமிருக்கிறது. இலங்கைப் பிரச்னையில் ராஜீவ் நேரடியாக ஈடுபட முடியாதென்றாலும் அவரது முயற்சி, செல்வாக்கு காரணமாகத்தான் இந்த அளவுக்கேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. திம்பு பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறாது போனால் அது ராஜீவின் தவறாகாது. அவரளவுக்குப் பரந்த மனப்பான்மையைச் சம்பந்தப்பட்டவர்கள் பெற்றிராததே குற்றமாகும்.

நாட்டில் அமைதி நிலவினால்தான் துரிதமான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு மக்கள் மேம்பாடு அடைவார்கள். இதை உணர்த்தி, அஸ்ஸாம் பிரச்னையும் சுமுகமாகத் தீர்ந்ததில் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார் ராஜீவ், தமது சுதந்திரதினச் சொற்பொழிவில். அதோடு, முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக விளங்கும் இன்னொரு பிரச்னை குறித்தும் அவர் பேசியிருக்கிறார். அது இந்தியா பாகிஸ்தானிடையே நிலவும் விரோத **பா**வம். பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதில் முழுமூச்சுடன் இறங்கியிருப்பதாக நாம் கருத இடமிருக்கிறது. அதோடு அமெரிக்காவிடமிருந்து ஏராளமான யுத்த தளவாடங்களையும் பாகிஸ்தான் பெற்று வருகிறது. எனவே நாமும் அயல்நாடுகளில் நவீன ஆயுதங்களை விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள நேர்கிறது. இவற்றுக்குச் செலவாகும் கோடிக்கணக்கான பணத்தை ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த முடியாது போகிறது.

ராஜீவின் அடுத்த முக்கிய குறிக்கோள் பாகிஸ்தானுடன் சிநேக **பா**வத்தை வளர்த்துக் கொள்வதாக இருக்க வேண்டும். அணுகுண்டு சோதனை, உற்பத்திக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தமும் போர் மறுப்பு ஒப்பந்தமும் கையெழுத்தாக வேண்டும்.

இந்த உலகத்துக்கு ஒரு முறை அடைந்த ஹிரோஷிமா நாகஸாகி அனுபவங்களே போதும்! போதும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.





* சிந்தனைச் சிரிப்பு.

* ஆபத்தான கோரிக்கை.

* என். உலகநாதன், லால்குடி.

? பொன், பெண் எது பிடிக்கும்?

! பொன்னை விரும்பாத பெண்ணைப் பிடிக்கும்.

* எஸ். ஆரோன்பிரபு, திருச்சி.

? அன்பு பூர்வமான நட்பு, அறிவு பூர்வமான நட்பு — எது சிறந்தது?

! நட்பு என்ற சொல்லிலேயே அன்பு தொக்கி நிற்கிறது. அன்பு மட்டும் செயல்பட்டால் அது அறிவைப் பல சமயம் மறைத்து விடும். அன்புடன் அறிவும் செயல்படுவதே சிறந்தது.

* கி. ரமேஷ், சென்னை.

? எம். ஜி. ஆர். பிணியுற்றிருந்த நேரத்தில் தற்கொலை செய்து கொண்டவர்களின் குடும்பத்துக்கு ஆளும் கட்சி சார்பில் நடந்த நிதியளிப்பு விழாவில் அவர்களைத் 'தியாகிகள்' என்று அழைக்கும் நியூஸ் ரீல்களைத் தியேட்டர்களில் காட்டுகிறார்களே, 'தியாகி' என்ற சொல் எப்படி கேவலப்படுத்தப்படுகிறது பார்த்தீரா?

! எம். ஜி. ஆர். மீது கொண்ட பேரன்பாலும் மதிப்பாலும் தற்கொலை செய்து கொண்டவர்களைக் கூடத் தியாகி என்று ஒப்புக் கொண்டு விடலாம். மூட நம்பிக்கையோ அல்லது அளவற்ற துயரைத் தாங்க முடியாததாலோ ஏதோ ஒரு விதத்தில் அதை உயிர்த் தியாகம் என்று கூடக் கருதலாம். ஆனால் அந்தத் தியாகத்துக்கு வெகுமதி அளித்து அதைக் கேவலப்படுத்தியதுடன் அரசுச் செலவில் அதைப் படமெடுத்து அரசுச்செலவில்கட்சிப்பிரசாரமும்நடத்திக் கொள்கிறவர்கள் நிச்சயம் தியாகிகள் அல்ல: படு சுயநலமிகளே!

* எஸ். தங்கராஜு, சென்னை.

? சைக்கிள் ஓட்டுகிறவரும் தலைக்கவசம் அணிந்தே ஆக வேண்டும் என்று சட்டம் வந்தால் எப்படி இருக்கும்?

! கன ஜோராயிருக்கும் பார்க்க. தலைக்கனமாக இருக்கும் அணிய. கன லாபமாயிருக்கும் ஹெல்மெட் தயாரிப்பாளருக்கு. அப்படி சட்டம் கொண்டு வருமுன் அரசியல்வாதிகள் ஹெல்மெட் தயாரிப்பாளரிடமிருந்து 'கிக் பாக்' பெற்று விடுவார்களாதலால் அவர்கள் பிரீஃப் கேஸும் கனக்கும்.

* ஷோபா கல்யாணி, ஈரோடு.

? ஸீரியஸ் பாத்திரங்களில் மிளிர்பவர்கள், லட்சுமி, சரிதா, சுஜாதா — யார்?

! நடிக்கிறார் என்ற உணர்வே இல்லாமல் இயல்பாகச் செய்துவிடுவார் லக்ஷ்மி. அந்த ஆற்றல் அவரிடம் மட்டுமே இருக்கிறது. சுஜாதா கொஞ்சம் முயன்றால் லக்ஷ்மியின் இடத்தை எட்டிப்பிடிக்க முயலலாம்.



* மிளிர்பவர்.



* எட்டிப் பிடிப்பவர்.

* வி. ரவிகுமார், லால்குடி.

? இந்தியாவின் எதிர்காலம் யார் கையில்?

! 71 × 2 கோடி கரங்களில்.

* வி. ரவிகுமார், லால்குடி.

? சிரிப்பு சிந்தனையாவது எப்போது?

! கலைவாணர், கல்கி போன்றோர் சிரிக்க வைக்கும் போது.

* அன்பு மதியழகன், கொப்பம்பட்டி.

? மக்களுக்குப் படிப்பறிவு கிடைத்தால் எல்லா வசதிகளும் சீக்கிரம் கிடைத்து விடுமா?

! என்னவெல்லாம் கிடைக்க வேண்டும் என்று அவர்களுக்குப் புரிந்து போகும். மக்கள் உரிமைகளை உணர்ந்து விட்டால் பிறகு அவர்களை அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ ஏமாற்ற முடியாது. ஆக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை கிடைப்பதில் அதிகத் தாமதமாகாது. எனவேதான் கல்வியை அரசியல் சாசனம் எழுதிய அறிஞர்கள் மிக முக்கியமாகக் கருதினார்கள். சாசனத்தை அமுல்படுத்த வேண்டிய அர

தமிழக அமைச்சர்களிடையே மோதல் ஏற்படக்

ியல்வாதிகள் அதை மிக முக்கியமானதாகக் கருதாததற்கும் காரணம் இதுவேதான்!

* ஆர். ஆனந்த், குடந்தை.

? தமிழ்நாட்டில் இ. காங்கிரஸ் ஆட்சிக்கு வர நேரிட்டால் சிவாஜி முதல்வர் ஆவாரா?


! அத்தைக்கு முதலில் மீசை முளைக்கட்டும். சித்தப்பா ஆவாரா என்பதை அப்புறம் பார்க்கலாம்!

* ரமேஷ்குமார், திருப்பூர்.

? அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி நடத்தியதன் மூலம் ஏற்பட்ட இனிய அனுபவம்?



* முதல்வர் ஆவாரா?



* இவரின் வெற்றியா?

! முதல் பரிசுக் கதை வாசகர்களின் ஏக மனதான பாராட்டைப்பெற்றதைவிட இனிய அனுபவம் வேறு என்ன இருக்க முடியும்?

* ஏ. எம். பி. எழிலி, கோவை.

? தமிழக அமைச்சர்களிடையே அடிக்கடி மோதல் ஏற்படக் காரணம்?

! எம். ஜி. ஆரின் உடல்நலக் குறைவு தான்!

* மனோபாரதி, பாண்டிச்சேரி.

? இப்போதும் திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றனவா?

! இல்லை, வரதட்சணை என்னும் நரகத்தில் தான் பெரும்பாலான திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன.

* வி. ஜெயகுமார், கோவை.

? பால்ராஜுக்கு வழங்கப்பட்டது போன்ற தண்டனை சோவுக்கும் வழங்கப்பட்டால் வரவேற்பீர்களா?

! இங்கு பால்ராஜ், சோ என்பதல்ல பிரச்னை. பத்திரிகை சுதந்திரத்துக்கும் மக்கள் பிரதிநிதிகளின் உரிமைகளுக்கும் இடையில் எழுந்துள்ள பூசல். யார் பலசாலி என்று மல்லுக்கு நிற்பதைவிட, இடையில் நீதிமன்றத்தையும் இழுத்து வம்பு வளர்ப்பதை விட, ஆண்டாண்டு காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஜனநாயக மரபுகளை இருதரப்பிலும் காத்து, பேணி வளர்ப்பதுதான் நல்லது. சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஒரு— Code — விதிமுறை உருவாக்க வேண்டும் என்று சோ கேட்பது ஆபத்து. அப்படி செய்தால் ஏதாவது முக்கியமான ஒரு விஷயம் பற்றி மக்கள் பிரதிநிதி பேச முடியாமல் போகக் கூடும். அது மட்டுமல்ல, பத்திரிகைகளுக்கும் ஒரு Code உருவாக வேண்டும் என்று எம். எல். ஏ., எம். பிக்கள் கேட்பார்கள். சட்டசபை, பத்திரிகைகள் இரண்டின் பரிபூரண சுதந்திரங்களையும் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்துவது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. இருதரப்பிலும் மோசமாக நடந்து கொள்பவர்கள் சிலர் இருக்கவே செய்வார்கள். அவர்களைப் பொறுத்துக் கொண்டு போவதுடன் கண்ணியத்தையும் சுயகட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்குமாறு அவர்களை வற்புறுத்துவதுதான் வழி.

* சலீம் தமீஜுதீன் நெல்லிக்குப்பம்.

? உயர்ந்த உள்ளத்தின் வெற்றி, கமலின் வெற்றியா, ஏ. வி. எம்.மின் வெற்றியா, எஸ். பி. எம். மின் வெற்றியா?

! முதலில் உயர்ந்த உள்ளம் வெற்றியா என்பது தீர்மானமாகட்டும்!


* ஆர். அப்துல் சலாம், திருச்சி.*

? இந்திரா — ராஜீவ் இவர்களின் அணுகுமுறைகள் பற்றி?

! தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதித்தவர் இந்திரா. 'நீர் சொல்வது போல் ஒருவேளை நாலு காலும் இருக்கலாம். எதற்கும் இன்னொரு தடவை எண்ணிப் பார்க்கிறேன்' என்று கூறுகிறவர் ராஜீவ். இந்த அணுகுமுறை வித்தியாசம் காரணமாகத்தான், 'இயங்குகிற அரசை நான் கொடுக்கிறேன்' என்று இந்திரா கூறியும் அது நொண்டிக் கொண்டிருந்தது. 'துரிதமாக இயங்கும் ஓர் அரசைக் கொடுக்கிறேன்' என்று ராஜீவ் கூறவும் இந்த அரசு ஜெட் வேகத்தில் செயல்படுகிறது.

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
ஆர். அப்துல் சலாம்,
12, தெற்கு 2—வது தெரு,
திருச்சி—20.

* ஜெட் வேகம்.



* மூன்றே கால்.



காரணம் என்ன?

நீங்கள் கேட்டவை — தராசு



• ''மந்திரிகளுக்குள் மோதல் என்று செய்தி போடுவார்கள்!''

ஃபைல்கள் தம்மிடம் வரக் காத்திராமல் அவற்றைத் தேடிப் போகிறார் இந்த அமைச்சர்!

வீட்டு வாசலில் ஜேஜே என்று கூட்டம். ஹெக்டேக்கு அடுத்தபடியாக, அதிக விசிட்டர்கள் வருவது இவர் வீட்டிற்குத்தான். ஒவ்வொருவருக்கும் ஒரு நிமிட நேரம் கொடுக்கிறார். பொதுமக்களைப் பார்க்கும் நேரம் முடிவடையும் தருவாயில் இருந்தால், பார்க்கக் காத்திருக்கும் நபர்களை மொத்தமாக உள்ளே கூப்பிடுகிறார். ஒவ்வொருவரிடமும் கட, கடவென, பேசி முடிக்கிறார். உதவியாளர்கள் பாடு 'பெண்டு' கழன்று விடுகிறது. சுறுசுறுப்புக்குப் பெயர் போனவர்தான் டாக்டர் ஜீவராஜ் ஆல்வா. கர்நாடகா அரசின் செய்தி, சுற்றுலா, விளையாட்டு, இளைஞர் நல அமைச்சர்.

''பல்வேறு பொறுப்புகள் வந்து சேர்ந்து விட்டனவே! எப்படிச் சமாளிக்கிறீர்கள்?''

''என் துறைகள் சம்பந்தப்பட்ட எந்த ஃபைலும் என்னிடத்தில் காத்திருக்காது. காரணம், ஃபைல்கள் என்னிடத்தில் வர நான் காத்திருப்பதில்லை! நானே சம்பந்தப்பட்ட துறை இயக்குனர் அலுவலகத்துக்குச் சென்று அங்கேயே உட்கார்ந்து ஃபைல்களை டிஸ்போஸ் செய்து விடுகிறேன். ஆகவே விதான் சௌதாவுக்கு என்னிடம் வரும் ஃபைல்களின் எண்ணிக்கை மிகக் குறைவு!''

''சமீபத்தில் உங்கள் சக மந்திரி சிந்தியா 'காலைக் காட்சி' சினிமா, பல கோடி மனித மணி நேரத்தை (**Man hours**) சாப்பிட்டுவிடுகிறதென்றும், ஆகவே காலைக் காட்சிகளை ஒழிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளாரே!''

''சொல்லியிருக்கிறார். இது பற்றிய என் கருத்தைச் சொன்னால், 'மந்திரிகளுக்குள் மோதல்' என்று செய்தி போடுவார்கள். ஆனால் பெங்களூரைப் பொறுத்தமட்டில் நடுத்தர, ஏழை மக்களின் பொழுதுபோக்கு சினிமாதான். காலைக்காட்சிக்கு வருபவர்கள் பெரும்பாலும் பிற்பகல் ஷிப்டில் வேலை செய்பவர்களாய் இருப்பார்கள் இவர்கள் மாலைக் காட்சிக்குப் போக முடியாது. இது ஒருபுறமிருந்தாலும் பொதுவாக சினிமா தியேட்டர்களைப் பற்றி எனக்கு வருத்தம் உண்டு. (மந்திரி அப்போதுதான் கோலாரில் ஒரு சினிமா தியேட்டரைத் திறந்து வைத்து விட்டு வந்திருந்தார்). டிக்கெட் விலை ஒரு பக்கம் எக்கச்சக்கமாக உயர்ந்து கொண்டு போகிறது. தியேட்டர் கேண்டீனில் விற்கப்படும் பொருட்கள் வெளியில் விற்பதைவிட மூன்று மடங்கு அதிகவிலை விற்கிறது. கார், ஸ்கூட்டர், சைக்கிள் ஸ்டாண்டு கட்டணங்களையும் உயர்த்தியிருக்கிறார்கள். தியேட்டர் ஓனர்கள் இதிலேயே சம்பாதித்து விடுவார்கள் போலிருக்கிறது. இதைத் தடுக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று மனம் துடித்துக் கொண்டிருக்கிறது.''

''சுற்றுலாத் துறையில் ஜனதா அரசின் சாதனை என்ன?''

''ஒவ்வொரு வருடமும் டூரிஸ்ட்டுகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. மாநிலத்தில் 260 இடங்களைச் சுற்றுலா இடங்களாக மாற்ற அரசு முயற்சி எடுத்து வருகிறது. கடற்கரை ஓரமாக மங்களூருக்கு அருகே மால்பே என்னும் இடத்தில் கடற்கரை வாசஸ்தலங்களை அமைக்கத் துரித ஏற்பாடுகள் நடந்து

''இடிந்த கோட்டை இளைஞர் மையமாகியது!''

—அமைச்சர் ஆல்வா

வருகின்றன. தவிர பெங்களூரிலேயே அல்சூர் ஏரியைச் சுற்றியுள்ள இடங்களை டிஸ்னி லாண்டு பாணியில் உருவாக்க எண்ணியிருக்கிறோம். எங்களுக்கு இருக்கும் பண நெருக்கடியை மீறிக் கொண்டு இந்தத் திட்டங்கள் வளர்ந்தாக வேண்டும்.

''கன்னட மொழியின் வளர்ச்சிக்கும் நீங்கள்தான் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். பள்ளிகளில் கன்னட மொழியைக் கட்டாயப் படுத்தித் திணிப்பது நியாயமா?''

''மொழி மக்களுக்கும் அரசுக்கும் ஒரு பாலமாக இருக்க வேண்டுமே தவிர, அதுவே பள்ளமாக மாறி, இடைவெளியை ஏற்படுத்தக் கூடாது. இந்த மாநிலத்தில் பெரும்பான்மை மக்களுக்குத் தெரிந்த, கன்னட மொழியை, அரசு மொழியாக வைத்திருக்கிறோம். இந்த மாநிலத்தில் பிழைக்க, உழைக்க விரும்புகிறவர்கள் கன்னட மொழியைத் தெரிந்து கொள்வது நல்லதுதானே. ஆனால் பெங்களூரைப் பொறுத்தமட்டில் 40 லட்சம் பேரில், 10 லட்சத்திற்கும் குறைவானவர்களே கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதையும் நாங்கள் மறக்கவில்லை. கன்னட மொழியின் வளர்ச்சியை மனத்தில் கொண்டே, கன்னடத்திரைப்படங்களுக்கும், கன்னட மொழி ஆராய்ச்சிக்கும், மானியங்கள் வழங்குகிறோம்.''

''இந்த ஆண்டு இளைஞர் ஆண்டாயிற்றே. உங்கள் அரசு இளைஞர்களுக்கு என்ன செய்து இருக்கிறது?''

''பெங்களூருக்கு அருகில் வித்யா நகர் என்ற இடத்தில் பழைய கோட்டை ஒன்று இருந்தது. 500 இளைஞர்களை அந்த இடத்தில் கொண்டு போய் விட்டு, 'இந்த இடிந்த கோட்டையைச் சரி செய்து, ஒரு இளைஞர் மையமாக உருவாக்குங்கள்' என்றோம். இப்போது போய்ப் பாருங்கள், இடிந்த கோட்டை சிறந்த வகையில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது! இளைஞர்கள் கூடவும், கருத்தரங்கங்கள் நடத்தவும் சரியான இடமாக விளங்குகிறது.''

ஏதோ முக்கிய காரியம் ஞாபகம் வந்துவிட்டவராக எழுந்தார் அமைச்சர். ''உங்களுக்கு ஒதுக்கிய நேரம் போதுமா? இல்லையென்றால் நாளை வாருங்களேன்'' என்று அவசரப்பட்டார்.

''கடைசியாக ஒரு கேள்வி'' என்று செய்தித் துறை பற்றிக் கேட்டவுடன் அமைச்சர் சொன்னார்:

''இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செயல்படாத திட்டம் ஒன்று இங்கு அமுலில் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் பத்திரிகை துவங்கினால் 5000 ரூபாய் உதவித் தொகை தருகிறோம். ஹரிஜன இளைஞர்களை (ஒவ்வொரு ஆண்டும் 25 பேர்) தேர்ந்தெடுத்து பத்திரிகைத் துறையில் பயிற்சி கொடுக்கிறோம்''- சொல்லிக் கொண்டே அமைச்சர் கடிகாரத்தைப் பார்த்தார், வெளியே விரைந்தார். 'நிஜமாகவே பரபரப்பான பேட்டி தான்' என்று புன்னகையுடன் நானும் புறப்பட்டேன்.

பேட்டி: **ப்ரியன்.**
படம்: **யோகா.**



* ''ஹல்லோ! இதோ வந்துவிட்டேன்!''



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள், சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்!!

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப் படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் கால கட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாது காப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு.. போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு. இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடி துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி, நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்
தவிரவும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/5070/R2/TAM

குழப்பிவிட்டார் ராஜேந்தர்.

* எம். ஜி. ஆருக்குப் பயந்து ஜால்ரா போடும் சினிமாக்காரர்களுக்கு மத்தியில் ராஜேந்தர் துணிந்து பேசியிருப்பது பாராட்டுக்குரியது.

நெல்லிக்குப்பம், ஜெ. முகமது பாரூக்.

* டி. ராஜேந்தருடன் கலந்துரையாடியவர்கள் கேட்ட கேள்விகள் அத்தனையும் அருமை! மிஸ்டர் **T. R.** பதில் சொல்ல முடியாமல் திணறி, தானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பி விட்டார்!

செம்பனார்கோவில், ஆர். நாகராஜன்.

* திரு. . ராஜேந்தர் பேட்டி படித்தேன். "சினிமா உலகில் எல்லாம் காசுக்காகத்தான்" என்று தொடங்குகிறார். பணம் சம்பாதித்த பிறகு, கருத்துள்ள படங்களை எடுத்து மக்கள் அறியாமையைப் போக்கி விடுவது, முடிந்தால் இந்த சாதனைக்காக அவார்டும் வாங்குவது! — இவருடைய இந்த அருமையான திட்டம் எப்படி இருக்கிறது என்றால்,

"சாராயக் கடைகளைத் தெருக்கள் தோறும் திறப்பது என்றும் அதன் மூலம் கிடைக்கும் பல கோடி ரூபாய் வருமானத்தை முதலீடு செய்து, 'மது குடிப்பது எவ்வளவு தீமையானது' என்பதை விளக்கும் சில திரைப்படங்களைத் தயாரிப்பது என்றும், பிறகு அவைகளை ஒவ்வொரு சாராயக் கடையிலும் இலவசமாகப் போட்டுக் காட்டி, "குடி மக்களை" நல்வழிப் படுத்துவது என்றும், தமிழக அரசு முடிவெடுத்தால் அது எவ்வளவு அபத்தமாய் இருக்குமோ அப்படி இருக்கிறது திரு. டி. ஆர். அவர்களின் மக்களைத் திருத்தும் பணியும்.

புதுச்சேரி—8, ஆர். கலைவாணன்.

ஐயய்யோ, இதுவா நகைச்சுவை?

* யானையை அடக்கிய காமராஜர் பற்றி டாகுமென்டரி வந்திருப்பது மிகவும் பெருமையாய் உள்ளது.

தேரழுந்தூர், சி. சுப்பு.

பெண்மை வாழ்க என்று...

* தேவிபாலா 'பெண் எனும் அடிமை' சிறுகதையை 'மற்றும் ஒரு ராம்' உருவாவதாகக் கூறி முடித்துள்ளார். வசுமதி தன் பிள்ளையையும் ஏன் 'மற்றொரு ராம்' ஆக வளர்க்க வேண்டும்? நம் நாட்டில் பெரும்பாலான பெண்களே ஆண் ஆதிக்கம் நிலைபெறக் காரணமாயிருக்கிறார்கள். இதுதான் நமது சாபக்கேடு!

திருநெல்வேலி; எஸ். ராமநாதன்.

* பெண்ணைப் போற்றும் ஒரு சிறுகதைக்கு (பெண்மையின் பரிணாமங்கள்) முதல் பரிசும், பெண்ணைச் சந்தேகித்து அவள் வாழ்வை நரகமாக்கும் ஓர் ஆணை வைத்துப் பின்னப்பட்ட மற்றொரு சிறுகதைக்கு இரண்டாம் பரிசும் வழங்கியிருப்பது மிகப் பொருத்தமே.

தரங்கம்பாடி, ஜி. பாலகிருஷ்ணன்.



வட்ட மேஜை

* கடையநல்லூர் பஞ்சாயத்து யூனியனில் நடந்த 'செட் அப் செய்த' குடிநீர்த் தேக்கத் தொட்டி திறப்பு விழா பற்றி கல்கி 11.8.85 வட்டமேஜையில் எழுதிய முகூர்த்தம் இப்போது குழாயில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

பொய்கை, பெ. சங்கரபாண்டியன்

சட்டங்கள் மட்டுமே சாதித்துவிட முடியாது

* அரசு இட ஒதுக்கீடு மட்டும் அளித்து என்ன பயன்? மனிதர்கள் மனத்தில் அல்லவா 'இட ஒதுக்கீடு' செய்ய வேண்டும். ஆக்ரபாளையத்து அக்கிரமங்களைப் பற்றிப் படித்த பிறகு நம் சமுதாயம் வளர்ந்து கொண்டிருக்கிறதா என்றே ஐயம் ஏற்படுகிறது.

கவுந்தப்பாடி, செல்வி ரமணி.


* டில்லியிலிருந்து டெலிவிஷனில் ஒளிபரப்பாகும் தேசிய நிகழ்ச்சிகளில் அடிக்கடி தென்னிந்தியர்களை கேலிக்குரிய கதாபாத்திரங்களாகச் சித்திரிக்கிறார்கள். டில்லிவாசிகளான எங்களுக்கென்றே வழங்கப்படும் நிகழ்ச்சிகளில் கூட அவசியமிருக்கிறதோ இல்லையோ தமிழர் என்று ஏதாவது ஒரு கதாபாத்திரத்தைப் புகுத்தி அவர் அரைகுறை ஹிந்தியில் பேசுவதையும், திரும்பத் திரும்ப "அய்யய்யோ அம்மம்மா" என்று சொல்வதையும் நகைச்சுவை என்று வழங்குகிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகளை மற்ற மொழி பேசும் நபர்களோடு சேர்ந்து பார்க்கும் பொழுது தமிழர் என்ற காரணத்தால் எங்களுக்கு மிகவும் வேதனை உண்டாவதோடு தாழ்வு உணர்ச்சியும் ஏற்படுகிறது; பார்க்கும் மற்றவர்களோ இதைப் பற்றி யோசிக்காமல் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

ஏதோ தென்னிந்தியர்கள் பேசும் ஹிந்தியே இப்படித்தான் என்பது போலவும், கொச்சையாக "அய்யய்யோ — அம்மம்மா" என்று சொல்வதை விட்டால் தமிழில் பேச வேறு ஒன்றும் இல்லை என்பது போலவும் ஒரு கருத்தை இதுவரை ஹிந்தித் திரைப்படங்கள் மட்டும்தான் பரப்பி வந்தன. இப்பொழுது இந்த வியாபாரத்தில் தூர்தர்சனும் சேர்ந்து கொண்டு விட்டது. தென்னிந்தியர்கள் மனம் புண்படும் வகையில் அமைந்த இந்நிகழ்ச்சிகளால் தேசிய ஒருமைப்பாட்டு எண்ணம் வளருமா, தேயுமா?

புதுதில்லி, கணேஷ்மணி.

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது.)

வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் சமபலமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.



884.55 Tam

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !

காரிருள் எங்கும் சூழ்ந்திருந்த நிலையில், கால்களுக்கும் தளைகள் பூட்டப்பட்டதாக ஏற்பட்ட பிரமையில், கழுத்தையும் யாரோ இறுகப் பிடித்த சமயத்திலும் சிறிது சிந்தனையை ஓட்டிய கௌதமிபுத்ரன், கழுத்தைப் பிடித்த கைகளின் மெல்லிய விரல்கள் ஓரளவுக்குமேல் நெரிக்க முயலாததையும், மெல்லிய விரல்களில் வலுவிருந்தும், அந்த வலுவோடு ஒரு மென்மையும் கலந்திருந்ததையும் எண்ணிப் பார்த்து, கழுத்தைப் பிடித்தது யாராயிருந்தாலும் தன்னைக் கொல்ல இஷ்டப்படவில்லையென்பதைப் புரிந்து கொண்டதால் சற்று நிதானப்பட்டு மூச்சை மட்டும் நன்ருக இழுத்துப் பிடித்துக் கொண்டான். அத்துடன் கால்களுக்குத் தளையிட்டவர்கள் தனது கைகளைக் கட்டாததையும் நினைத்துப் பார்த்து, தன்னைப் பயமுறுத்தி ஓடச் செய்வதே அவர்கள் நோக்கமென்பதையும் நிர்ணயித்துக் கொண்டதால் தனது கைகளைச் சட்டென்று இருபுறத்திலும் செயலற்று விழும்படி செய்தான். அப்படி அவன் கைகள் செயலற்று விழுந்தவுடன் — கழுத்தைப் பிடித்த கைகளிலொன்று கழுத்தைவிட்டு அவன் நாசியில் நிலைத்தது ஒரு விநாடி. மூச்சு எதுவும் வராதிருக்கவே சட்டென்று எழுந்த அந்த உருவம் அவன் கால் தளைகளையும் நீக்கிவிட்டு அவனை ஒருமுறை சுற்றி வந்தது. அப்படி அது சுற்றி வந்த சமயத்தில் விசிறிய அதன் ஆடையிலிருந்து மனேகரமான சுகந்தமொன்று நாசியில் புகுந்ததையும் கவனித்த கௌதமிபுத்ரன் அடுத்து நடப்பதை அறிய அசைவற்றே கிடந்த வண்ணம் ஒரு கண்ணையும் அரைவாசி திறந்து பக்கவாட்டில் பார்வையை ஓடவிட்டான்.

முதல் நாளிரவில் பார்த்த அதே பெண்ணுருவந்தான் கோவில் வாயில் தூணைப் பிடித்துக் கொண்டு சிறிதுநேரம் நின்றது. பிறகு படிகளில் இறங்கிச் சென்று அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டது சில விநாடிகள். கௌதமிபுத்ரனைத் தவிர வேறு யாராவது அந்த நிலையில் இருந்தால் உடனடியாக வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்து அந்தப் பெண்ணைத் தொடர முற்பட்டிருப்பார்கள். ஆனல் அவசரப்பட்டு எதையுமே செய்யாதவனும், நிதானத்தாலும் மிகுந்த சூக்ஷ்மத்தாலும் பெரிய காரியங்களைச் சாதித்திருப்பவனுமான கௌதமிபுத்ரன் இருந்த இடத்தை விட்டுச் சிறிதும் நகராமலும் அசையாமலும் அப்படியே கிடந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே யாரோ இரண்டு மூன்று பேர் நடமாடும் சத்தம் கேட்கவே, தனது பக்கத்தில் இருந்த வாளைச் சிறிது தடவிப் பார்த்துக் கொண்டதன்றித் தனது கச்சையிலிருந்த சிறு கோடாரியையும் சிறிது தளர்த்திக் கொண்டான், அவசியமானல்வேகமாகஎடுத்துவீச. ஆனல் எந்தவித அவசியமும் ஏற்படவில்லையென்பதை நீண்ட நேர நிசப்தத்தால் உணர்ந்த கௌதமிபுத்ரன் மெள்ள எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் நோக்கினன். வாயிலில் நடமாட்ட சத்தம் நின்ருலும் இருவர் பேசும் ஒலிகள் மட்டும் கேட்டன.

தடித்த ஆண் குரலொன்று கேட்டது: "அவன் இறந்துவிட்டாஞ, இல்லையா?" என்று.

"இல்லை." பெண் குரல் பதிலளித்தது.

"எப்படித் தெரியும் உங்களுக்கு?" இன்னெரு ஆண் குரல் கேட்டது.

சாண்டில்யன்



''மூக்கில் கைவைத்துப் பார்த்தேன், மூச்சு வரவில்லை.'' பெண் குரல் ஒலித்தது இன்பமாக.

''அப்படியானால் இறந்துதானே இருக்க வேண்டும்?''

''இல்லை. அவனை நான் சுற்றி வந்தபோது கால்களில் லேசாக அசைவிருந்தது. மூச்சை இழுத்துப் பிடித்ததால் அவன் என்னை ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறான்.''

''அப்படியானால் நாங்கள் அவனை வெட்டிப் போடட்டுமா?''

''அப்படிச் செய்தால் நம்மைப் பற்றிய சந்தேகம் அதிகமாகும்'' என்ற அந்தப் பெண் குரல் ''பயமுறுத்தல்தான் நமது நோக்கமே தவிர கொல்வது நோக்கமில்லை. தவிர இவனைக் கொல்வதும் அவ்வளவு சுலபமல்லவென்று நினைக்கிறேன்'' என்றும் கூறிற்று.

''ஏன் சுலபமல்ல? அத்தனை பெரிய வீரனா அவன்?'' என்று வினவியது முதலில் பேசிய ஆண் குரல்.


உடனடியாகப் பெண் குரல் ஒலிக்கவில்லை. நீண்ட மௌனத்துக்குப் பிறகு பேசிய போது அதன் குரலில் ஒரு கௌரவம் தெரிந்தது. ''உள்ளே படுத்திருப்பவன் இங்கு வந்து இரண்டு நாளாயிற்று. இரண்டு நாளும்



இந்தக் கோவிலிலேயே படுத்திருக்கிறுன். அவன் தைரியத்துக்குச் சான்று இதுவே போதும். அவன் வீரனு அல்லவாவென் பதை அறியக் கோவிலுக்குள்ளே போக வேண்டும். அப்படிப் போவது உசிதமில்லை யென்றுநினைக்கிறேன்'' என்று அந்தப்பெண் குரல் கூறிற்று. அடுத்து ஒலி ஏதுமில்லை. நள்ளிரவில் சற்றுமுன்பு ஒலித்த சங்கீதம் மீண்டும் ஒலித்தது வெளியே.

அதற்குமேல் காத்திருப்பதில் அர்த்த மில்லை என்று முடிவு செய்த கௌதமிபுத்ரன் எழுந்திருந்து வாளைக் கச்சையில் கட்டிக் கொண்டு மெதுவாகப் புறப்பட்டுக் கோவி லின் உட்புறத்தைவிட்டு வெளியே வந்தான் மிகுந்த எச்சரிக்கையுடன். அன்று மேக மூட்டம் எதுவுமில்லாததன் காரணமாக, ஐந் தாம் பக்ஷத்து சந்திரன் தனது மங்கலான ஒளியை எங்கும் பரப்பிக் கொண்டிருந்த தால், அந்த மலைக்காடு ஆங்காங்கு மரங் களின் இடைவெளிகளில் காணப்பட்ட நிலாத்தட்டுகளுடன் இருளும் ஒளியும் கலந்த சூழ்நிலையை சிருஷ்டித்திருந்தது. இத்தலை யிலும் தாபிலேசுவரர் ஆலயத்தின் அமைப் பின் காரணமாக அதற்குள்ளே அப்பொழு தும் காரிருள் சூழ்ந்து கிடந்ததைக் கண்ட கௌதமிபுத்ரன் ''தாபிலேசுவரர் தமது பிசாச பூத கணங்களுக்காகவே இந்த இடத்தை இப்படி அமைத்திருக்கிறுர் போலும்!'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான்.

இந்த எண்ணங்களுடன் வெளியே வந்த சாதவாகன அரசகுமாரன் கோவிலுக்கு வெளியே யாருமில்லாததையும் வெளிப் புறம் வெறித்துக் கிடந்ததையும் கவனித்துக் கோயிற்படிகளை விட்டிறங்கித் தரையில் காலடிகளைப் பார்வையிட்டான். அங்கிருந்த பாறைகளின் வழவழப்பில் காலடிச் சுவடு கள் ஏதும் தெரியாமல் போகவே சற்றுத் தலை நிமிர்ந்து பார்த்த அந்த வாலிபன் தூரத்தே மரங்களுக்கிடையிலிருந்த பாறை மீது வெளேரென்ற ஓர் உருவம் தெரியவே அதை நோக்கி ஓசைப்படாமல் மெள்ள நடந்தான். ஆனுல் அந்த உருவம் பழையபடி மெல்லிய குரலில் இனிமையான இசையை எழுப்பியது. சித்தத்தைச் சுரக்கும் அதே சித்த ரஞ்சனி! ஏழு ஸ்வரங்களை விட்டு—அப் புறமோ இப்புறமோ அசையாமல் அந்த சப்தஸ்வரங்களுக்குள்ளேயே புரண்ட சுழல் கீதம், திரும்பத் திரும்ப அலைகளாக அவன் காதில் விழுந்தது! அந்தச் சங்கீதத்தால் சித்தம் கலங்கிய அந்த மகாவீரன், தனது வீரத்தை மறந்தான், வந்த காரியத்தை மறந் தான், வெண்ணிலவில் இன்னொரு வெண் ணிலவாக நின்ற அந்த வெண்ணிற ஜோதி யைப் பார்த்துக் கொண்டு சொப்பனத்தில் நடப்பது போல் நடந்தான். அவன் அப்படி நடந்து கொண்டே இருக்கையில் அந்த உருவம் மெதுவாகத் தரையில் இறங்கிக் கொண்டிருந்தது. முழுதும் மறையுமுன்பு அதைப் பிடிக்க முயன்று வேகமாக நடந்த கௌதமிபுத்ரன் அந்தப் பாறையை அணுகு வதற்கு முன்பாக அந்த மோகினி மறைந்து விட்டாள் மலைப்பாறைக்குள். ஓடி அந்தப் பாறையை நோக்கிய அந்த வாலிபன் பாறைக்கு அருகில் சுரங்கமோ வழியோ இருப்பதற்கான அறிகுறிகள் எதையும் காணு திருக்கவே அந்த சூக்ஷ்மத்தை எப்படியும் மறு நாள் கண்டுபிடித்துவிடுவதென்ற உறுதி யுடன் — திரும்பிக் கோயிலை நோக்கி நடந் தான். கோயிலை அவன் கிட்டுமுன்பே விண் ணில் மேகங்கள் சூழ்ந்தன. மதி மறைந் தான், காரிருள் எங்கும் மண்டியது. ''இது கர்ப்போட்ட காலம். இப்படித்தான் அடிக் கடி மேகங்கள் வரும் போகும். இதில் எந்த மந்திரமோ ஜால வித்தையோ இல்லை'' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட கௌதமிபுத்ரன் கோயிலை நோக்கி நடந் தவன் திடீரென்று கடற்கரையை நோக்கித் திரும்பினுன். அதுவரை எங்கோ மறைந்து கொண்டிருந்த அவன் புரவியும் அவனைத் தொடர்ந்து சென்றது. இப்படி சாதவாகன மன்னனும் புரவியும் நடந்து ஒரு அடர்ந்த மரக்கூட்டத்தருகே வந்ததும் புரவி பெரி தாகக் கனைத்தது. அடுத்த விநாடி இரண்டு வாட்களின் நுனிகள் கௌதமிபுத்ரன் கழுத் தில் ஊன்றப்பட்டன. ''உன் வாளைத் தொட் டால் பிணமாகி விடுவாய்'' என்ற எச்ச ரிக்கைக் குரலொன்று பக்கத்திலிருந்து ஒலித் தது. கௌதமிபுத்ரன் பதிலுக்குப் பெரிதாக நகைத்தான். அந்த நகைப்பையொட்டி அவன் பின்னுல் யாரோ பெரிதாக அலறினுர்கள். அந்த அலறல் எழுந்த அதே சமயத்தில் சரே லென்று தனது கட்டாரியை எடுத்துப் பக்க வாட்டில்வீசிய கௌதமிபுத்ரன் அதன் விளை வைப் பற்றிச் சந்தேகப்படாமல் தன் கழுத் தில் ஊன்றிய வாளொன்று அகன்று விடவே இன்னொரு வாளின் பிடி மீதும்



''பள்ளிக்கூடத்தின் மேல் இடி விழுந் தும் ஒரு உயிர்ச் சேதம் கூட இல்லை யாம்...

''அது எப்படிங்க சாத்தியம்?''

''அன்னிக்கு விடுமுறையாச்சே!''

தனது கையை நீட்டி இழுத்தான். பிறகு துரித மான செயல்கள் மின்னல் வேகத்தில் விளைந் தன. வாட்களை உருவிய இருவரில் ஒருவன் அலறிக் கொண்டு ஓடிவிட இன்னொருவன் மீது வாளை வீசினன் கௌதமிபுத்ரன். அடுத்து யாரும் போரிடக் காணேம். யாரோ தட்டென்று தரையில் விழும் அரவம் கேட் டது. இன்னொருவன் வேகமாக ஓடும் காலடி ஓசையும் கேட்டது.

தன்னைப்பிடிக்க வந்த இருவரில் ஒருவன் ஓடிவிட்டதையும் இன்னொருவன் விழ்ந்து விட்டதையும் உணர்ந்த கௌதமிபுத்ரன் திரும்பி விழுந்தது யாரென்று பார்த்தான். விழுந்தவன் சடலம் அசையவில்லை. அவன் கழுத்தின் பின்புறத்தில் புரவியின் பற்கள் அழுந்தியிருப்பதைப் பார்த்து அது தனது புரவியின் வேலையாயிருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அடுத்து அங்கு நிற்காமல் புரவி மீது ஏறிக் கொண்டு புரவியை மலைச் சரிவில் இறங்கும்படி செலுத்திக் கடற் கரைக்கு வந்து சேர்ந்தான். கடல் அன்றும் முதல் நாள் போலவே கொந்தளித்து அலை களைப் பெரிதாகப் பாறைகள் மீது மோதிக் கொண்டிருந்தது. அங்கு வந்ததும் புரவியிலி ருந்து இறங்கிய கௌதமிபுத்ரன் ஆகாயத்தை நோக்கினன். ஆகாயத்தில் சந்திரன் மேகக் கூட்டத்தில் பூர்ணமாக மறைந்து விட்டது. எங்கும் இருள் சூழ்ந்ததாலும் பேய்க் காற்று லும் பயங்கரமான சூழ்நிலை உருவாகி இருந்த தாலும் சற்று எட்ட மறைவாயிருந்த பாறை யொன்றில் உட்கார்ந்து கொண்ட கௌதமி புத்ரன் வாசிஷ்டி நதியின் முகத்துவாரத்தில் படகு ஒன்று வேகமாக வந்து கொண் டிருந்ததையும் கவனித்தான். சங்கமத்துறை யில் அந்தப் படகிலிருந்து இறங்கிய பூர்ண ஆயுதம் தரித்த பெரிய வீரனொருவன் தனது இடையிலிருந்த சிறு குழலை எடுத்து மெது வாக ஊதிவிட்டுச் சிறிதுநேரம் படகின் அருகிலேயே தயங்கி நின்றதையும் பார்த் தான். அவன் முகத்தில் ஏதோ பெரும் குழப் பம் ஏற்பட்டதைக் கண்ட கௌதமிபுத்ரன், "இவன் மோகினியைத்தான் எதிர்பார்க்கி றான்" என்று தனக்குள் கூறிக் கொண்ட துடன் "இங்கு நடப்பது எனக்குப் புரி கிறது" என்றும் சொல்லிக் கொண்டான். இத்தகைய சிந்தனையில் அவன் இறங்கியிருக் கையிலேயே கடற்கரை அலைகளில் அந்த வெண்ணிற மோகினி நடந்து வந்தாள். அவளைச் சந்தித்துத் தடுத்து விடுவது என்று தீர்மானித்து எழுந்த கௌதமிபுத்ரன் எந்த செயலிலும் இறங்கவில்லை. அடுத்து நடந்த, அவன் முற்றும் எதிர்பாராத, நிகழ்ச்சியால், கௌதமிபுத்ரன் சிலையென நின்றுவிட்டான் பல விநாடிகள். அவன் கண்முன்னே நடந் தது ஒரு விபரீதம்.

(தொடரும்)

தேவேந்திரா சாரீஸ்

(மிக மிக உயர்ந்த பட்டும் நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது)

H.O. 27, ஏலா கந்தப்பன் தெரு, (முதல் மாடியில்)
வால்டாக்ஸ் ரோடு, (ப்ளூ ஸ்டார் இன்டர் நேஷனல் ஹோட்டல் அருகில்)

சென்னை-600003. போன்: 33113

எங்களுடைய கிளை ஷோ-ரூம் கீழ்க்கண்ட விலாசத்திலும் செயல் படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடை எண் 7, ராம்ஸ் பஜார்

(பனகல் பார்க் எதிரில்)

பிரகாசம் ரோடு, தியாகராய நகர்,

சென்னை - 600 017

தேவேந்திரா புடவைகள் கிடைக்குமிடங்கள்:

''கிருஹலக்ஷ்மி மாதர்கள் கூட்டுறவு அமைப்பு, C-79, விகாஸ்புரி (போடெல்லார்) புதுடெல்லி-110018. * திருமதி உமா சுப்பிரமணியம், II-A, 97-B, லஜ்பத் நகர் II, புதுடெல்லி-110024. போன்: 616552. * திருமதி விமலா ராகவன், 6/66, W. E. A., கரோல்பாக், புதுடெல்லி-110005. * பங்கஜம் சுந்தரராஜன், C-6/A, D. D. A. Flats, முனிர்கா, புதுடெல்லி-67. * M/S. சாரதா, 16/449, வீரம் பில்டிங், மாதுங்கா, பம்பாய்-19. * சுசீலாமணி, 22, காந்தி மஹால், தேஜோ கோயோ பார்க், வின்செண்ட் ரோடு, மாதுங்கா, பம்பாய்-19. * லக்ஷ்மி நாராயணன், 5, வாணி கோ-ஆபரேடிவ் ஹவுஸிங் சொஸைட்டி, வல்லபாக் ரோடு, காட்கோபர், (கிழக்கு) பம்பாய்-77. * நல்லீஸ் சில்க் சாரீஸ் சென்டர், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்--19 * சௌத் இந்தியன் கன்ஸர்ன், 401, டெலாங் ரோடு, மாதுங்கா,

பம்பாய்—19. * லதா கிருஷ்ணன், பிளாட் நெ. 20, காமதேனு கோ—ஆப். பெஸ்டம் சாகர், செம்பூர், பம்பாய்—89, (கிளாஸ் பாக்டரி அருகில்). * ஜெயஸ்ரீ, 2—A, தேசப்பிரியா ரோடு, கல்கத்தா—26. * S. பொன்னப்பன், 8—3—282, 2—வது பஜார், செகந்திராபாத், போன்: 559562. * திருமதி. T. S. சகுந்தலா சீனிவாசன், 18/1—A, லால்பாக் போர்ட் ரோடு, (மினர்வா & பஸப்பா சர்க்கிள் மத்தியில்) பெங்களூர்—4, போன்: 224357. * திருமதி. துர்காம்பாள், 5—A, ராமசந்திரபுரம், தென்னூர், திருச்சி. * திரு. S. சேதுராமன், 9, பாணு துரை சன்னதி தெரு, கும்பகோணம்—612001. போன்: 972. * ராணி சில்க், 13, மஹால் 4வது தெரு, மதுரை—1. போன்: 26295. * திருமதி. S. லெட்சுமி, 24, சீனிவாசா தெரு, சேலம்—1. (ரயில்வே ஸ்டேஷன் அருகில்). * ஸ்ரீ காமேஸ்வரி ஏஜென்சீஸ், 6/175, திருச்சி ரோடு, (ஆல் இந்தியா ரேடியோ அருகில்) ராமநாதபுரம், கோயம்புத்தூர்—641018. * மஹாலட்சுமி சில்க் சென்டர், தீன் பில்டிங், (உள்புறம்) 175/11, மேல வீதி, சிதம்பரம். * ஹேமாவதி ஏஜென்சீஸ், 2711, நாணயக்கார செட்டி தெரு, தஞ்சாவூர். * பாகீரதி மூர்த்தி, 100, ஸ்ரீ வராஹபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி. * S. சுந்தரம், 9, சாத்தான் கோவில் தெரு, வடிவீச்வரம், நாகர் கோவில்—2. * திருமதி. K. சீதாலட்சுமி, 41, 4—வது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தைவெளிப்பாக்கம், சென்னை—28. போன்: 73244. * திருமதி சாவித்திரி பால சுப்பிரமணியம், 2, 7—வது தெரு, நங்கநல்லூர், சென்னை—61, (பிள்ளையார் கோவில் அருகில்). போன்: 433737. * திருமதி. சரோஜா கிருஷ்ணமூர்த்தி, A—9/386, புதிய குடியிருப்பு, (முதல் மாடி), குடிசை மாற்று வாரியம், திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு, சென்னை—600107. (திருமங்கலம் பஸ் நிலையம் அருகில்). * M/S. பாலாஜி கிளாத் சென்டர், 29, வெங்கடேச செளத்ரி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை—45.

குறிப்பு: சென்னை நகரில் எந்தக் கடைகளுக்கும் எங்கள் புடவைகள் சப்ளை கிடையாது. மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

4. நீலியின் மீது காதல்!

சந்திரசூடனின் அறை ஒரு சத்திரம் மாதிரி. கதவுக்குத் தாழே கிடையாது. அங்கு யார் வேண்டுமானாலும் போகலாம். திருடு போய் விடுமோ என்கிற பயமும் கிடையாது. திருடுவதற்கு அங்கு எதுவும் இல்லை. அவர் எழுதிப் போட்டிருக்கும் தாள்களும், நோட்டுப் புத்தகங்களுந்தாமிருக்கும். அவருக்கு வேண்டிய சௌகரியங்களை அந்த வளவில் உள்ளவர்கள் அவர் கேட்காமலேயே செய்து கொடுத்து விடுவார்கள்.

அன்று காலையில் விழித்ததும் கட்டிலில் அமர்ந்தபடியே வெற்றிலை போட்டுக் கொண்டார். காலையில் டீயைக் கடையிலிருந்து தினமும் வாங்கி வந்து கொடுக்கும் கடமையைப் பரணி ஏற்றிருந்தான்.

இன்னும் அவன் டீ கொண்டு வரவில்லை. அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்த போதே அவன் டீக்கோப்பையுடன் அறைக்குள் நுழைந்தான்.

அவன் விவேகானந்தரின் பக்தன். அவருடைய கம்பீரத் தோற்றம், துணிவு, சிகாகோ பிரசங்கம், போதனைகள் எல்லாவற்றிலும் அவனுக்கு ஆழ்ந்த ஈடுபாடு. அவரை மறுத்து யார் பேசினாலும் சண்டைக்குப் போய் விடுவான். ஒரு சமயம்.....

சந்திரசூடன் சொன்னார்: "அவருக்குப் பிடித்தமான பாதையில் சென்றிருக்கிறார். அந்தப் பாதைதான் எல்லாருக்கும் ஏற்றது என்று அவர் சொல்லவில்லையே, வேறு எத்

உணர்வுகள் உறங்குவதில்லை

ர.சு. நல்லபெருமாள்



தனையோ பாதைகள் வாழ்க்கைக்கு இருக்கின்றன.''

''எனக்கு அவருடைய பாதைதான் பிடித்திருக்கிறது.''

''ஓ. பேஷா அவருடைய பாதையிலேயே போ. ஆனால், பாதி வழி போனதும் திசை தெரியாமல் திண்டாட மட்டும் கூடாது.''

''ஏன்? அவர் போகவில்லையா?''

''அவர் விவேகானந்தர். போக முடிந்தது. நீ பரணியல்லவா?'' என்று கூறிச் சிரித்தார்.

''நானும் போய்க் காட்டுகிறேன்'' என்றான் பரணி வீராப்புடன்.


வாசலில் காலடி ஓசை கேட்கவே இருவரும் திரும்பினர். கீழ் வீட்டுப் பார்வதியின் குழந்தை சாரதா படியேறி வந்து கொண்டிருந்தாள். அறைக்குள்ளே எட்டிப் பார்த்து விட்டுச் சிரித்தாள். கையில் கிழிந்து போன செய்தித்தாள் இருந்தது. அதை நீட்டியபடியே சந்திரசூடனை நெருங்கினாள்.


''சாரதா அம்மையார் எங்கே வந்தாள்?'' என்றவாறே குழந்தையைத் தூக்கி மடி மீது வைத்துக் கொண்டார்.

குழந்தை தாளை நீட்டியவாறு, ''கப்பல்'' என்றாள்.

சந்திரசூடன் அவளுக்குக் கப்பல் செய்து கொடுப்பதில் முனைந்தார். அந்தக் குழந்தை வந்துவிட்டால் அவருக்கு மற்றவை எல்லாம் மறந்துவிடும். குழந்தையோடு ஒன்றிப் போய் விடுவார்.

திருமணம் அவசியந்தானா என்னும் கேள்விக்கு அந்தக் குழந்தை ஒரு சவாலாகத் தோன்றும். திருமணம், இப்படி 'ஒரு குழந்தையைப் பெறுவதற்காவது தேவைதானே...





குழந்தை அடிக்கடி அவருடைய அறைக்கு வந்துவிடும். அவளுடைய தோழர் அவர் தாம். அவளுடைய கேள்விகளுக்கெல்லாம் சளைக்காமல் பதில் சொல்வார். அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது, சந்திரசூடனின் கட்டில். அதில் படுத்து மெத்தையில் புரளுவது அவளுக்கு விளையாட்டு.

சந்திரசூடன் கப்பல் செய்வதைப் பார்த்தவாறே கட்டை விரலைச் சப்பிக் கொண்டிருந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். அறையில் தொங்கிக் கொண்டிருந்த விவேகானந்தரின் படத்தைக் காட்டி, "இவர் ஏன் மொட்டை அடித்திருக்கிறார்?" என்று கேட்டாள்.

சந்திரசூடன் திரும்பிப் படத்தைப் பார்த்துவிட்டு, "ஓ! இந்தப் படம் இங்கே எப்போது வந்தது? நான் கவனிக்கவில்லையே" என்றார்.

"நேற்று சாயங்காலம் மாட்டி வைத்தேன். எவ்வளவு கம்பீரம் பார்த்தீர்களா?" என்றான் பரணி.

"கையிலே ஏன் கம்பு?" என்று குழந்தை கேட்டது. "அடிக்கவா?" என்றது.

சந்திரசூடன் சிரித்தார். பரணியிடம் திரும்பி, "பதில் சொல், குழந்தை கேட்கிறாள்" என்றார்.

பரணி படத்தை ஊன்றிப் பார்த்தான். விவேகானந்தர் ஒரு பெரிய கம்பைப் பற்றியவாறு நின்று கொண்டிருந்தார். பரணிக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

"சும்மா கம்பு வைத்திருக்கிறார்" என்றான்.

"ஏன் சும்மா கம்பு? தாத்தா மாதிரி இவரும் கீழே விழுந்துவிடுவாரா?" என்று கேட்டது குழந்தை.

குழந்தையின் கேள்வி சந்திரசூடனுக்குச் சிரிப்பை மூட்டியது. "வாயாடி, நீ. உன் கேள்விகளுக்குப் பதில் சொல்ல என்ஸைக்ளோபிடியாவே வேணும்" என்றார். பிறகு, "கம்பு மேய்ப்பதற்கு" என்றார்.

"மாடு மேய்ப்பாரா?" குழந்தை கேட்டது.

"மனுஷர்களை மேய்ப்பார்."

குழந்தைக்குப் புரியவில்லை. "மனுஷர்கள் மாடுகளா?"

"ஆமாம் மாடுகள். கெடு கெட்ட மாடுகள். இந்தா கப்பல்" என்று கப்பலைக் கொடுத்தார். குழந்தை, ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டது.

"சாரதா இருக்கிறாளா?" என்று உள்ளே எட்டிப் பார்த்தாள், பார்வதி.

"இதோ இங்கே இருக்கிறாள்" என்றார் சந்திரசூடன்.

"குளிக்க வெந்நீர் எடுத்து வைத்தேன். அதற்குள் இங்கே வந்துவிட்டாள். வாடி வா."

குழந்தை கட்டிலிலிருந்து இறங்க மறுத்தது.

"போய்க் குளித்துவிட்டு வா. ஏரோப்ளேன் செய்து தருகிறேன்" என்று சந்திரசூடன் சொன்னதும், அதற்குச் சம்மதித்துச் சாரதா, கட்டிலிலிருந்து இறங்கி, பார்வதியிடம் சென்றாள்.

"சும்மா, சும்மா இங்கே வந்து தொந்தரவு செய்யக் கூடாது" என்று குழந்தையைக் கடிந்தபடியே தூக்கி, இடுப்பில் இருத்திக் கொண்டாள் பார்வதி.

"எனக்கு ஒரு தொந்தரவும் இல்லை. இவள் வந்தால் எனக்குப் பொழுது போகும்" என்றார் சந்திரசூடன்.

பார்வதி புன்னகைத்தாள். அவளுடைய புன்னகையில் அவருக்கு ஒரு லயிப்பு. சிலருக்குச் சில கவர்ச்சிகள் இருப்பதுண்டு. பார்வதியின் சிரிப்பு, அல்லி மலர்வது போலிருக்கும். அதற்காகவே சந்திரசூடன் ஏதாவது பேசி அவளைச் சிரிக்க வைப்பார். மந்தகாசமான புன்னகையின் ஊடே மெல்லிய புகை மூட்டம் மாதிரி சோகம் படர்ந்திருக்கும் சாந்தமான முகம். நல்ல அழகு.

"மேற்கொண்டு எழுதிவிட்டீர்களா? நகல் எடுத்துத் தருகிறேன்" என்றாள் பார்வதி.

"இரவில் கொஞ்சம் எழுதினேன். உனக்கு நேரமிருக்கிறதா?"

"வேலை இல்லாதபோது எழுதிவிடுவேனே!"

சந்திரசூடன் ஒரு நோட்டுப் புத்தகத்தையும், கொஞ்சம் தாள்களையும் எடுத்து அவளிடம் கொடுத்தார். "உனக்கு மை செலவு" என்றார்.

பார்வதி புன்னகை புரிந்தாள். "பெரிய எழுத்தாளருடைய எழுத்துக்களை நகல் எடுக்

"ஸ்கூட்டர்ல போகும் போது என் வீட்டுக்காரரை போலீஸ் மடக்கிப் பிடிச்சுட்டாங்க..."

"ஹெல்மெட் இல்லாம போனாராக்கும்?"

"ஹெல்மெட் இருந்தது. ஆனா ஸ்கூட்டர்தான் அவருடையதில்லேன்னு பிடிச்சுட்டாங்க!"


விவரமறிந்தோர் நாடுவது
ஆஸ்ப்ரோ ஆறுதல்
இப்போது 2 வித வீரிய வகைகளில் வருகிறது.
ஆஸ்ப்ரோ , ஆஸ்ப்ரோ 600
சாதாரண தலைவலிக்கு
மண்டை பிளக்கும் கடுமையான தலைவலிக்கு
ASPRO
ASPRO 600
ஆஸ்ப்ரோ
எக்ஸ்ட்ரா ஸ்ட்ரெங்த்
ஆஸ்ப்ரோ 600

கும் பெருமை எனக்குக் கிடைக்கிறதே'' என்று கூறியபடியே வாசலை நோக்கி நடந்தாள். சட்டென்று திரும்பி, ''இதில் எனக்கு இன்னொரு பெருமையும் இருக்கிறது. உங்கள் எழுத்தை நான்தானே முதலில் படிக்கிறேன்'' என்றாள், பெருமிதத்துடன். பிறகு, படியிறங்கிச் சென்றாள்.

சந்திரசூடனுக்கு சட்டென்று ராதாவின் நினைவு வந்தது — அந்த வளவில் இரண்டு தாமரைகள். ஆனால், இரண்டுமே கூம்பிப் போய்..... இவனுடைய கதிரவன் மறைந்தே போய்விட்டான். ஆனால், ராதாவிற்கு அவளுடைய கதிரவன் இருந்தும் கரு மேகங்களுக்குள் மூழ்கி இருண்டு கிடக்கிறதே. இரண்டு தாமரைகளும் வாடி வதங்கிப் போய்.....

சமுதாயத்தில் பெண்களின் நிலையை எண்ணும் போதெல்லாம் சந்திரசூடனுக்குக் கோபம் வரும்.

''என்ன சார், ஒரே சிந்தனையில் மூழ்கி விட்டீர்கள்?'' என்ற பரணியின் குரல் கேட்டுச் சிந்தனை கலைந்தவராய்க் கட்டிலிலிருந்து எழுந்தார்.

''மாலையில் ஒரு பரத நாட்டிய அரங்கேற்றம் இருக்கிறது. பெரிய அதிகாரி ஒருவருடைய மகள் ஆடுகிறாள். வருகிறாயா?''

''ஊஹூம். நீங்கள் விமர்சனம் எழுத வேண்டும். அதற்காகப் போக வேண்டியது தான்.''

''ஏன் நீயும் வந்தால் என்ன?''

''பெண்கள் ஆடுவதை நான் பார்ப்பதில்லை.''

''பீஷ்மர் மாதிரி ஒதுங்கியே இருந்தால் எப்படி? சும்மா என் கூட வா. இந்த நாட்டியத்தைப் பார்ப்பதால் உன் பிரும்மச்சரியம் கெட்டுவிடாது.''

பரணி சிரித்தான். ''அதற்கில்லை. மனம் கெடும் விஷயங்களில் ஈடுபடக்கூடாது'' என்றான்.

''நாட்டியத்தைப் பார்த்து மனம் கெடுகிறதா பார்க்கலாமே. மாலையில் ஆறு மணிக்குத் தயாராக இரு. நான் அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்றார் சந்திரசூடன்.

பரணி சரியென்று தலையை ஆட்டியவாறு டீக்கோப்பையை எடுத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தவன் திரும்பி, ''உங்கள் சைக்கிளில் காற்று இறங்கியிருந்தது. காற்றடித்து விட்டேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

''நேற்று முழுவதும் சைக்கிளை மறந்தே போனேன்'' என்று முனகியபடியே சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். திண்ணையில் அவருடைய சைக்கிள் ஒய்யாரமாக நின்று கொண்டிருந்தது.

சந்திரசூடனுக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள் இரண்டு. ஒன்று வெற்றிலை. மற்றொன்று அவருடைய சைக்கிள். அவரும் சைக்கிளும் இணை பிரியாத நண்பர்கள். அவரைக் காரில் அழைத்துச் செல்லப் பலர் விரும்பி முன் வருவார்கள். ''என்னுடைய ரோல்ஸ்ராய்ஸிற்கு ஈடு எதுவும் கிடையாது'' என்று தம் சைக்கிளைக் காட்டி காரில் ஏற மறுத்துவிடுவார். சைக்கிளில் செல்வது அவருக்கு ஓர் இனிமையான அனுபவம். அவருடைய சிறந்த கற்பனைகள் எல்லாம் சைக்கிளில் செல்லும்போதுதான் சிறகடித்துப் பறக்கும்.

காலை ஒன்பதரை மணிக்குத் தம்முடைய ''ரோல்ஸ் ராய்''ஸில் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தார். சட்டைப் பையிலிருந்த கைதியின் கடிதம் நினைவில் வந்தது —

ஏதோ சந்தர்ப்பக் கோளாறினால் சிறையில் இருக்கிறானாம். என்ன சந்தர்ப்பமோ! ஒரு வேளை, செய்யாத குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்கிறானோ?


ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. அவருடைய எழுத்துக்களை ரசிக்கிறான். அதனால் ரசனையில் தரமும் சிந்திக்கும் திறனும் உள்ள ஒரு மேம்பட்ட இலக்கிய ரசிகன் என்பது தெரிகிறது. இப்படிப்பட்டவன் சிறையில் இருப்பது விசித்திரம்தான். இவனைப் போன்ற அறிவு ஜீவிகளைச் சிறையில் அடைப்பதைவிட வேறு வகையில் திருத்த முடியாதா?

கன்னி அம்மன் கோயில் அருகே சென்றதும் அவருடைய சிந்தனை தடைப்பட்டது. கோயில் வாசல் திண்ணையில் சக்தி சிவம்—ஊரில் அவரை அப்படித்தான் கூப்பிட்டார்கள்—பத்மாசனத்தில் அமர்ந்தவாறு, சுற்றி நின்ற சிறுவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு நாற்பது வயதிருக்கும். தலையில் சடை விழுந்திருந்தது. முகத்தில் மழிக்கப்படாத ஒரு வாரத்து முடி. கண்களில் ஒளி. மனத்தை அள்ளும் குழந்தைச் சிரிப்பு. ஊரில் எல்லாரும் அவரைப் பைத்தியம் என்று வேடிக்கை பார்க்கும்போது, சந்திரசூடன் மட்டும் அவரை நன்கு புரிந்திருந்தார்.

ஒருவகையில் அவர் ஒரு பைத்தியந்தான். காதல் பைத்தியம். அம்மன் மீதே காதல்! யாராவது அவரிடம் "உம்முடைய பெண்டாட்டி எங்கே?'' என்று கேட்டால், ஒரு குழந்தையைப் போல் சிரித்துக் கொண்டே' கோயிலுக்குள் எட்டிப் பார்த்தபடி கர்ப்பக் கிருஹத்திலிருக்கும் அம்மன் சிலையைச் சுட்டிக் காட்டுவார்.

(தொடரும்)



மின்னி மிளிரும் மேனி...
என்னுளும் உங்கள்
பொன்னுன கனவு...நிறைவேற
வரமளிப்பது ரெக்ஸோனு.

சரளம், கருவா, கிராம்பு,
ஹபுஷா (தேவதாரம்) ஆகிய
நாலு வகை இயற்கைத்
தைலங்களின் கற்கலவை
யான ரெக்ஸோனு...சருமப்
பராமரிப்பிற்கு இயல்பான
வழியாகும்.

ரெக்ஸோனு உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RX 84 2012 TM

சுயதரிசனம் காட்டும் தர்மஸ்தலா

தமிழக மக்களுக்கு முருகன் எப்படியோ அப்படியே கன்னடக்காரர்களுக்கு ஸ்ரீ மஞ்சுநாதர். இந்த மண்ணுக்குச் சொந்தமான மலைக் கடவுள். மேற்குத் தொடர்ச்சி மலைகளிடையே இந்தக் கோயில் அமைந்திருக்கும் இடம்தான் தர்மஸ்தலா. பெங்களூரிலிருந்து பஸ் மூலம் சுமார் எட்டு மணி நேரம்.

தர்மஸ்தலாவுக்குப் போகும் பஸ்களில் கவலை நிரம்பிய முகங்களையும், அங்கிருந்து திரும்பும் பஸ்களில் நிறைய மொட்டைத் தலைகளையும் காணலாம் — பாரம் நீங்கியதன் அடையாளம்! தீராத நோய்கள், துன்பங்களைத் தீர்க்கும் சக்தி வாய்ந்த கடவுளாக மஞ்சுநாதர் கருதப்படுகிறார். அச்சுறுத்தும் பந்தா, பத்ததிகள் இந்தக் கோயிலில் கிடையாதென்பதாலும், கன்னட மண்ணில் பிறந்தவர்களால் போஷிக்கப்படுவதாலும் மஞ்சுநாதரின்மேல் கன்னடக்காரர்களுக்குத் தனி அன்பு. தினசரி ஆயிரக்கணக்கில் மக்கள் இங்கே வந்து குவிந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இங்கே லாட்ஜ் தரகர்கள், போலி கைடுகள் கிடையாது. கூலிகள் கிடையாது. பிச்சைக்காரர்கள் கிடையாது. காரணம் மிகச் சுலபமானது; கோயிலில் தினசரி வருபவர்களுக்கெல்லாம் சாப்பாடு போடப்படுகிறது. எனவே 'சாண் வயிற்றுக்காக' வேண்டி இங்கு யாரும் யாரிடமும் கையேந்த வேண்டாம். கூலிக்குறுக வேண்டாம். இந்தச் சாப்பாட்டுக்காக வேண்டியே இங்கே வந்து தங்குகிறவர்கள் உண்டு — ருசிக்காக இல்லை, அருளுக்காக, மனச்சாந்திக்காக. சாப்பாடும் ஒரு வழிபாடு!

'மதம் காலியான வயிறுகளுக்கு அல்ல' என்று சொன்ன விவேகானந்தர் தர்மஸ்தலாவுக்கு வந்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பார். 'அனைத்துலக மதம்' பற்றிக் கனவு கண்ட விவேகானந்தரை மகிழ்வித்திருக்கக் கூடிய இன்னொர் அம்சம்: இங்குள்ள சாமி, சிவன் (லிங்கம்); அர்ச்சகர்கள், வைஷ்ணவர்கள்; கோயிலை ஸ்தாபித்து அதனைப் பராமரிப்பது, ஒரு ஜைனர் குடும்பம்!

கோயிலின் முகப்பும், பொதுவான கட்டிட அமைப்பும் ஜைன சம்பிரதாயம், பழைய மங்களூர் சம்பிரதாயம் இரண்டின் கலவையாகத் தோன்றுகின்றன. தமிழகக் கோயில்களோடு பழக்கப்பட்டவர்களுக்கு இது கோயிலாகவே தோன்றாது. ஆனால் சம்பிரதாயம் வேறாயிருந்தாலும் ஏதோ ஒரு நியமப்படி இங்கும் பூஜை, அர்ச்சனை, உற்சவங்கள், தேர்த்திருவிழா ஆகியவை நிகழ்ந்துதான் வருகின்றன.

தசரா மற்றும் கார்த்திகையின் போது நடக்கிற உற்சவங்கள் விசேஷமானவை. பணம் கட்டி, சீட்டு வாங்கிக் கொள்கிறவர்களுக்கு, திருப்பதி பாணியில் பிளாஸ்டிக் பைக்குள் பிரசாதம். ஆனால் இங்கே ஒரு போனஸும் உண்டு: ஒரு பாட்டில் நேத்திராவதி நதி தீர்த்தம். சாதாரண நாட்களில் கூட கோயிலின் உட்பிராகாரத்தில் குவிந்து கிடக்கும் பிரசாதப் பொட்டலங்களும் தீர்த்தப் பாட்டில்களும், பக்தர்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்ற 'வாழும் கோயில்' இது எனப் பறைசாற்றுகின்றன. அங்கங்கே யாரும் சீந்தாமல் இறைந்து கிடக்கும் காசுகள், ரூபாய் நோட்டுகள்!

காலையில் நேத்திராவதி நதியில் குளித்துவிட்டுக் கோயிலுக்குள் 'தர்மதரிசன' நேரத்தில் நுழைபவர்கள் இறைவனை மட்டுமின்றி ஸ்ரீ வீரேந்திர ஹெக்டேயையும் தரிசிக்க

* ஹெக்டே.

* மஞ்சுநாதேஸ்வரர் கோயில்.




லாம். ஹெக்டேதான் கோயிலின இப்போதைய தர்மாதிகாரி; ஐந்நூறு ஆண்டுகள் பழைமையான பரம்பரையின் வாரிசு. இவருடைய முன்னோர்களில் ஒருவரான பிர்மண்ண ஹெக்டேதான், பதினைலாம் நூற்றாண்டில் மஞ்சுநாதரின் சிலையை கதிரி என்ற இடத்திலிருந்து (அதற்கும் முன் காசியிலிருந்ததாம்) இங்கே கொண்டு வந்து ஸ்தாபித்தவர். இதற்கடுத்த தலைமுறையில் உடுப்பி ஸ்வாமிகள் இங்கே விஜயம் செய்து, லிங்கத்தை சாஸ்திரோக்தமாக மறு பிரதிஷ்டை செய்து, இந்த இடத்துக்கும் 'தர்மஸ்தலா' என்று பெயரிட்டாராம்.

மூன்றே அடியுள்ள லிங்கத்தின் மீது படம் விரித்திருக்கும் நாகம் செதுக்கப்பட்டிருக்கிறது. லிங்கத்தை சிம்மாசனத்தில் பொருத்தியிருக்கிறது. மஞ்சுநாதர் சந்நிதிக்கு எதிரேயே ஒரு திண்ணையில் திரு ஹெக்டே அமர்ந்து வருபவர்களின் பிரச்னைகள், மனக்குறைகளைக் கேட்டுக் கொண்டு ஒவ்வொருவரிடமும் ஆறுதலாகச் சில வார்த்தைகள் பேசுகிறார். இந்தப் பரிமாற்றம் இங்கே ஒரு புதுமை.

கோயிலும் அதன் சொத்துக்களும் முழுக்க முழுக்க ஒரு தனி மனிதனின் உடைமைகள். டிரஸ்ட்டி, கமிட்டிகள், எதுவும் கிடையாது. கோயிலை ஒட்டினாற்போல் ஹெக்டே குடும்பத்தினரின் வீடு. இதன் மாடியில் பல தலைமுறைகளாய்ச் சேகரிக்கப்பட்ட கலைப்பொருள்களின் கண்காட்சி.

மஞ்சுநாதர் பெற்றுத் தரும் வருவாயெல்லாம் தர்ம காரியங்களுக்கும் கல்விப் பணிகளுக்குமே செலவிடப்படுகிறது — நாலு ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், இரண்டு ஹைஸ்கூல்கள், பத்து கல்லூரிகள் (உஜிரே, உடுப்பி, தார்வாட், மங்களூர் ஆகிய பல இடங்களில்) தர்மஸ்தலாவின் நிதியுதவி கொண்டு நடத்தப்படுகின்றன. தவிர, கலைகள், கைத்தொழில்கள் பயிற்சிக் கூடங்கள் இரண்டையும் யட்சகான பயிற்சிக்கூடம் ஒன்றையும் 'தர்மஸ்தலா' பராமரித்து வருகிறது. வருடா வருடம் சர்வதர்ம சம்மேளனங்கள், ஏழைகளின் கூட்டுத் திருமணம்.

தர்மஸ்தலா குன்று ஒன்றின் மீது அண்மையில் 'பஹுபலி'யின் சிலை ஒன்றையும் ஹெக்டே நிறுவியிருக்கிறார். சிரவணபெள்கொள கோமடேச்வரரின் சிறிய (39 அடி) பதிப்பு. மேற்குத் தொடர்ச்சி மலைகளிடையே தூய மனித விழைவுகள், விலங்கியற்கையைக் கட்டுப்படுத்தி உயர்நிலையெய்துகிற ஆர்வங்கள், அமரநிலை பெறும் ஏக்கம், ஆகிய பலவற்றின் உருவகமாய் பாஹுபலி மேகங்களிடையே உயர்ந்து நிற்கிறார்.



* மஞ்சுநாதேஸ்வர ஸ்வாமி

தர்மஸ்தலாவுக்கு வரும்போதும் திரும்பிப் போகும்போதும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் விளிம்பில் வளைந்து வளைந்து செல்லும் குறுகிய பாதையில் பஸ் செல்லும் போது ஏற்படுகிற கிலியும் பரவசமும் கலந்த உணர்வுகள் — மலைக்கு மேலே நம் பஸ் செல்கிற போதே அடிவாரத்தில் சிறு பொம்மை போல ஊர்கிற இன்னொரு பஸ்ஸைப் பார்த்து பிரபஞ்சத்தில் ஊசலாடுகிற ஒரு சிறு துகளாக உணருகிற அந்தத் தூய கணம் —

இவைதான், இந்த சுயதரிசனங்கள்தான், ஆன்மீக அனுபவங்களோ, என்று சிலர் சந்தேகப்படக்கூடும். இந்த சந்தேகம் தோன்றி விட்டால் உங்களுக்கு எந்த மஞ்சுநாதரும் தேவையில்லை. ஆனால் சந்தேகங்களற்ற அந்தச் சாதாரண மக்களின் நம்பிக்கையில் நம்மைக் கரைத்துக் கொண்டு அதன் ஒரு பகுதியாய் ஒன்றி விடுவதிலும் ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது. முழுமையின் அழகு.

ஹெக்டே இந்த முழுமையில் திளைக்கிற அதிர்ஷ்டசாலி!

— ஆதவன்

* நேத்திராவதி நதி.



புதிய திட்டங்கள்

எல்.ஐ.ஸி. வழங்கும் புதிய 'இரட்டை காப்பு' திட்டங்கள்.

'ஜீவன் சாத்தி'
(உயிர் துணை)

இத்திட்டம் குறிப்பாக வேலைக்குச் செல்லும் தம்பதிகளை மனதில் கொண்டு அக் குடும்பங்களின் முழுமையான ஆயுள்



பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. புனித திருமண உறவு ஒரு தொடர் பந்தம் என்பதற்கு எடுத்துக்காட்டு இத்திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் கணவனும் மனைவியும் ஒருங்கிணைந்துதான் பாலிஸி எடுத்துக்கொள்ள முடியும்.

பாலிஸி காலம் நிறைவானதும் அடிப்படை காப்புத் தொகையுடன் போனசும் அளிக்கப்படும்.

பாலிஸி காலத்தில் தம்பதியரில் ஒருவர் காலமாகி விட்டால் அடிப்படை காப்புத் தொகை எஞ்சியவருக்கு அளிக்கப்படுவதுடன் அவர் மேலும் பிரீமியம் ஏதும் கட்டவேண்டியதில்லை.

பாலிஸி கெடு முடிவடைந்ததும் மீண்டும் ஒரு முறை அடிப்படை காப்புத் தொகையும் போனசும் வழங்கப்படும்.

பாலிஸி கெடு முடியும் முன் தம்பதியில் எஞ்சியவரும் இறந்துபடின் அவரது வாரிசுக்கு இத்தொகைகள் அளிக்கப்படும்.

'ஜீவன் மித்ர'
(உயிர் நண்பன்)

ஒரு குடும்பத்தின் மிகச்சீரிய ஆயுள் பாதுகாப்பிற்காக உருவாக்கப் பட்டிருப்பது இத்திட்டம்.



அமுலில் இருக்கும் ஆயுள் காப்புத்திட்டங்கள் போல், இதிலும் பாலிஸி கெடு முடிவடைந்ததும் அடிப்படை காப்புத்தொகையும் போனசும் அளிக்கப்படுகிறது.

எதிர்பாராமல் கெடு காலம் முடிவடையும் முன்பு பாலிஸிதாரர் இறந்துபடில் அவரது வாரிசிற்கு இரட்டை அடிப்படை காப்புத் தொகையும், அடிப்படை காப்பிற்கு உண்டான போனசும் வழங்கப்படும்.

சிறிது அதிக பிரீமியம் செலுத்துவதால் விபத்தில் பாலிஸிதாரர் உயிர் நீத்தால் அதிக காப்புத் தொகையும் பெற முடியும்.

இந்த 'இரட்டை காப்புத் திட்டங்கள்' பற்றி மேலும் அறிய உங்களது முகவரையோ அல்லது அண்மையில் உள்ள எல். ஐ. ஸி. அலுவலகத்தையோ அணுகுங்கள்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

daCunha/LIC/166/85/TM

அன்புக்கு நன்றி

ஷைலஜா

விபரீதம் இன்றைக்கு வெடித்து விட்டது. காலை எழுந்ததுமே ஆபீஸ் போவதற்கு முன்பு ராம்நாத் எல்லோருக்கும் கேட்கிற மாதிரி சொல்லி விட்டான். ''நானும், மாலதியும் எல்லார் சௌகர்யத்தையும் முன்னிட்டுத் தனிக் குடித்தனம் போறோம்!''

மகாதேவன் பார்த்துக்கொண்டேதான் இருந்தார். கூடத்திலிருந்து உள் அறைக்குப் போகிற வழியில் வேண்டுமென்றே சக்கர நாற்காலியைக் கொண்டு நிறுத்திக் கொண்டார். நடக்கிற வழிக்கு அது இடைஞ்சலாகத்தான் இருந்தது. 'இருக்கட்டும்..... இதையும் மீறிக் கொண்டு இவள் என்ன செய்கிறாள் பார்ப்போம்....' மகாதேவன், தன் சின்ன மருமகள் மாலதியை, புழுவைப் பார்ப்பது போல் பார்த்தார். மாலதி, மாமனாரை லட்சியமே செய்யாமல் நடக்கிற வழியில் சக்கர நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த அவரைச் சுற்றிக் கொண்டே அறைக்குள் போவதும் ஒவ்வொரு சாமானாய் வெளியே கொண்டு வருவதுமாய் இருந்தாள். ரேடியோ, மேஜை, அலாரம் டைம் பீஸ் என்று எல்லாவற்றையும் கூடத்தில் பரத்தினாள். நடுவில் ராம்நாத் தயக்கமாய், ''மாலதி! அலாரம் டைம்பீஸை வேணா இங்கே விட்டுடேன் ...மன்னிக்குக் காலை எழுந்திருக்க சௌகர்யமாயிருக்கும்....'' என இழுத்தான்.

''அப்பமன்னா தனிக் குடித்தனம் போனதும் நான் காலையில் எழுந்திருக்க என்ன செய்யறது? இந்த அலாரம் டைம் பீஸைக் கொண்டு போகலாம்... இது நீங்க வாங்கிக் கொடுத்ததுதானே?''

'இது நீங்க வாங்கிக் கொடுத்ததுதானே?' இந்த வார்த்தையை மாலதி தனக்குக் கல்யாணமாகி வந்த இம்மூன்று மாதத்திற்குள் முந்நூறு தடவை சொல்லி இருப்பாள். வாஸ்தவம். ராம்நாத் அந்த வீட்டிற்குத் தனக்குத் திருமணமாகிற வரை நிறைய சாமான்கள் வாங்கிப் போட்டிருக்கிறான். ராம்நாத்தின் அண்ணா சாரங்கனுக்குச் சாதாரண உத்தியோகம்தான். மூன்று குழந்தைகள், கால்களை இழந்த வயதான தகப்பனார் என்று பெரிய குடும்பம். கஷ்டப்பட்டுத் தம்பி ராம்நாத்தை நன்றாகப் படிக்க வைத்ததுதான் அவர் செய்த சாதனை. இதில் பெரும் பங்கு அவர் மனைவி சாந்தாவைத்தான் சாரும். மகாதேவன் அடிக்கடி ராம்நாத்திடம் சொல்வார். ''சாந்தா உன் மன்னி இல்லேடா? தாயார். உன்னை ஏழு வயசிலிருந்து சாதத்தோடு, பாசத்தையும் சேர்த்து ஊட்டி வருகிறாள். அவளிடம் நீ செய்நன்றி மறக்கக் கூடாது...'' மகாதேவன், தம் மூத்த மருமகளின் சாந்தமான பொறுமையான குணத்தில் பல சமயம் நெஞ்சு நெகிழ்ந்திருக்கிறார். ராம்நாத் கை நிறைய சம்பாதித்து வீடு நிறைய சாமான்களை வாங்கிப் போட்டதும் அந்த வீட்டில் அத்தனை பேர் மனங்களும் நிறைந்துதான் போனது. ஆனால் எல்லாம், மாலதி வரும்வரைதான்.

மாலதி வீட்டிற்குள் நுழைந்த அன்றே கூடத்திலிருந்த அந்த டீப்பாயைப் பார்த்து, ''நன்னாக இருக்கே, எங்கே வாங்கினது?'' என்றாள் சாந்தாவிடம்.

சாந்தா பெருமையுடன், ''எல்லாம் ராம்நாத் வாங்கினதுதான் .... எங்க ராமு 'ஸெலக்ஷன்' எப்பவுமே பிரமாதமாயிருக்கும்...'' என்று மைத்துனனை ஆகாயத்தில் தூக்கி வைத்தாள். ராம்நாத்தின் முக்கிய ஸெலக்ஷனைப்பற்றி அப்போது சாந்தாவிற்குத்



தெரிய நியாயமில்லை. அவளின் அப்பாவித்தனத்துக்கு மாலதியின் கிண்டல் கேள்விகள் எதுவுமே புரிபடாமல் போயின. ஆனால் மகாதேவன், மாலதியின் போக்கை ஆரம்பத்திலிருந்தே கவனித்து வந்தார். ராம்நாத்தும் தன் மனைவி விஷயத்தில் அதிகம் கண்டு கொள்ளாமல் இருப்பதிலிருந்தே விஷயம் ஒரு நாள் விபரீதமாகும் என எதிர்பார்த்திருந்தார்.

விபரீதம் இன்றைக்கு வெடித்துவிட்டது. காலை எழுந்ததுமே ஆபீஸ்போவதற்குமுன்பு ராம்நாத் எல்லோருக்கும் கேட்கிற மாதிரி சொல்லிவிட்டான். "நானும், மாலதியும் எல்லார் சௌகர்யத்தையும் முன்னிட்டுத் தனிக் குடித்தனம் போறோம்!"

மகாதேவன் வயிற்றில் கத்தி பாய்ந்தாற் போல் கூவினார்.

"டேய் ராமு! என்னடா .... என்னடா சொல்றே?"

அதற்குள் மாலதி குறுக்கிட்டாள். "உங்க பிள்ளை என்ன ஃப்ரெஞ்சிலயா பேசறார்? புரியாத மாதிரி கூச்சல் போடாதீங்க..." பிறகு கணவன் பக்கம் திரும்பி, "சரி....சரி... உங்களுக்கு ஆபீசுக்கு டயமாச்சி.... நீங்க வரதுக்குள்ள நம்ம சாமான்களை நான் 'பாக்' பண்ணிடறேன்..." என்றாள்.

சமையலறைக்குப் போய், எப்போதோ ராம்நாத் சாந்தாவுக்கு வாங்கித் தந்த அந்தப் பழைய குக்கரைக் கூட 'பாக்' செய்தாள். "மன்னி! இந்தப் பீங்கான் தட்டு 'அவர்' வாங்கித் தந்ததுதானே?"

சாந்தாவிற்கு நெஞ்சு அடைத்தது. மௌனமாய்த் தலை ஆட்டினாள். மகாதேவனுக்குக் கால் மட்டும் இருந்திருந்தால் ஓடி வந்து மாலதியின் தலையில் அந்தப் பீங்கான தட்டுக்களைப் போட்டு நசுக்கி இருப்பார்.

கடைசியாய், மாலதி கூடத்து நடுச் சுவரில் மாட்டி இருந்த கண்ணாடியில் கை வைத்த போது, சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு வந்து, "அதைத் தொடாதே!" என்று கத்தினார்.

மாலதி குழப்பமாய்க் கணவன் பக்கம் திரும்பினாள். ராம்நாத் சங்கடமாய்த் தலை குனிந்தான். சாந்தாவிற்கு மாமனாரின் கத்தல் நெஞ்சைப் பிசைந்தது. அவளுக்குத் தெரியும், மகாதேவனுக்கு அந்தக் கண்ணாடி தான் ஜன்னல் என்று. கூடத்தில் அவர் வழக்கமாய் உட்காரும் இடத்திலிருந்து அந்தக் கண்ணாடி வழியே வாசல் திண்ணை, வெளியே சாலை வரை அவர் கால் போக முடியாத தூரத்திற்குக் கண் போய்விடும். வாசலில் யாராவது காலடி வைக்கும்போதே கண்ணாடி வழியே பார்த்துச் சாந்தாவை அழைத்து விடுவார். அந்தக் கண்ணாடி மூலமாய் அந்த வீட்டிற்குத் தான் காவலாய் இருப்பதாய் நினைத்துக் கொள்வார். சம்பாதிக்கத் தொடங்கியதும் முதன் முதலில் அப்பாவிற்காகவே ராம்நாத் வாங்கி வந்து மாட்டிய பெல்ஜியம் கண்ணாடி. அதில் மாலதி கை வைத்ததில் மகாதேவன் சீறிவிட்டார்.

"போடி... வெளியே... அற்பப்பத்ரே! உன் புருஷன் இந்த வீட்டுக்குக் கொடுத்ததை எல்லாம் திருப்பி எடுத்திட்டுப் போவதற்கு முன், அவனுக்கு ஏழு வயசிலிருந்து அன்பையும், பாசத்தையும் அள்ளி அள்ளிக் கொடுத்து ஆளாக்கினவளுக்கு எதைத் திருப்பித் தரப் போகிறோம்னு யோசனை செய்யுங்கள். அடேய் ராமு! உன் பெண்டாட்டி நடுவில் வந்தவள். அவளுக்கு நன்றி பற்றித் தெரியாமல் போகலாம். ஆனா.... ஆனா.... நீ செய்நன்றி மறக்கலாமாடா? மகாபாபி ஆயிட்டியேடா...."

"அப்பா .... மன்னிச்சிடுங்க ...." என்று ராம்நாத் கதறிவிட்டான்.

"மன்னிக்க வேண்டியது உன் மன்னி தான். நான் இல்லை." மகாதேவன், நாத் தழுதழுக்கத் தன் மூத்த மருமகளைப் பார்த்தார்.

சாந்தா, பெயருக்கு ஏற்றவளாய் அமைதியாய் வந்து மைத்துனரின் தலையைக் கோதி விட்டாள்.


அருள் வாக்கு

நமது ஆத்ம வித்யையை (லௌகீகம் என்று தோன்றுகிற வித்யைகள் கூட நம் தேசத்தில் ஆத்மாபி விருத்திக்கே ஸாதனமாக இருப்பதால்—நம்முடைய அர்த்த சாஸ்திரம்—எகனமிக்ஸ்—நாட்டிய சாஸ்திரம் உள்பட எல்லாம் ஆத்ம வித்யைதான்) இதர தேசத்தார் பாராட்டுகிறார்கள்; தேடித் தேடி எடுத்துக் கொண்டு போய் நம் சாஸ்திரங்களைத் தர்ஜுமா (டிரான்ஸ்லேட்) பண்ணி வைத்துக் கொள்கிறார்கள். எனவே லோகத்தில் நமக்கு ஒரு கௌரவம் வேண்டுமானால், அது எதனால் நமக்குத் தன்னால் பிறரது மரியாதை கிடைக்கிறதோ, அந்த சாஸ்திரங்களில் நம் அறிவை விருத்தி பண்ணிக் கொள்வதால்தான் ஏற்படும். ஸயன்ஸிலும் டெக்னலஜியிலும் மற்றவர்களுக்கு மேல் நாம் பண்ணிக் கௌரவம் பெற முடியாது. அப்படியே இரண்டொருத்தர் நம்மில் நோபெல்ப்ரைஸ்வாங்கினாலும்இதனால் நாம் பூரிக்கலாமே தவிர லோகம் பூரிக்காது. "ஸயன்ஸும் டெக்னலஜியும் நிறைவு தரவில்லை என்று நாம் ஹிந்துக்களிடம் போனால், இவர்கள் ஃபிலாஸஃபியை விட்டு இதில் வந்து விழுந்திருக்கிறார்களே" என்றுதான் நினைக்கிறார்கள். இந்தியாவில்தான் மற்ற அத்தனை தேசங்களின் மகான்களைக் கூட்டினாலும் அதை விட ஜாஸ்தியான மஹான்கள் தோன்றி ஆத்மானந்தத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதுதான் நம் பெருமை. அதற்கு ஆதாரமாக அவர்கள் கொடுத்துப் போயிருக்கிற சாஸ்திரங்களை நாம் தெரிந்து கொள்ளாமலிருப்பது ரொம்பக் குறைவான காரியம்.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

NEW!

POWER PACKED SURF



புதிய பவர் பேக்டு ஸர்ஃப்.

பூரிக்குது இதன் புத்தமைப்பு சக்தி, பொங்குது இதுவரை இல்லாத ஏற்றமான ஆற்றல்: ஆழ ஊடுருவித் துப்புரவாக்குகிறது—உங்கள் வெள்ளைத் துணிகள் எல்லாம் ஒப்பற்ற வெள்ளை-வெளேர், வர்ணத் துணிகளோ உன்னத ஒளிமயம்.

அதே சமயம், துணிகளின் புதுமை காத்து நெடுநாள் வாழ்விக்கிறது: வெளுக்கும் ஒவ்வொரு சட்டையும் ஒவ்வோர் ஆடையும் வெண்மை மிடுக்கு. புதுமைக் கருக்கு ..புத்தாடைபோல் வெளுப்பு...

சலவைக்கு சலவை பொலியும் புதுமை!

புதுமை தவழும் புதுமணம்: கமழ்ந்த வண்ணம் இருக்கும் உங்கள் துணிகள்மீது—சுத்தம் தவழும் புத்தம் புதுமை, பக்கத்தில் இருப்பதே இனிமை.

ஜோரான புதிய பேக்: சக்திச் சுரங்கமான இத் தயாரிப்புக்கு உற்ற பொருத்தம்.

வாரீர் இன்றே வாங்கிக்கொள்வீர் பவர் பேக்டு ஸர்ஃப்.

ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!

LINTAS-SU-325-2416 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.






நல்லவரைப் பிரியும் சோகம்!

எங்கள் அலுவலக மேலதிகாரியின் மாற்றலுக்காக நடந்த 'பிரிவு உபசார விழா'க் கூட்டம். என்னைப் பேச அழைத்தபோது உடலே சில்லிட்டுப் போனது! மேடையில் நின்றதும் நாக்கு உலர்ந்து, கை கால்களெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிட்டன. "நான்.... நான்..." இதற்குமேல்எனக்குவார்த்தைகளே வரவில்லை. அவையோர் சிரிக்க ஆரம்பித்துவிட்டனர். ஒரு மாதிரியாக மீண்டும் சமாளித்து, "ஒரு நல்ல அதிகாரியைப் பிரிய நேரிடும் போது ஏற்படும் — உணர்ச்சி — அதனால்தான் எனக்குப் பேசுவதற்கு வார்த்தைகள் கூடக்கிடைக்கவில்லை!" என்று பேசி அவையோரின் கரகோஷத்தோடு அமர்ந்தேன். இதுதான் எனது முதல் மேடை அனுபவம்!

ஆர். வைத்யநாதன், திருச்சி — 14.

அவரை ஏன் விட்டுவிட்டீர்?

"அன்புள்ள சகோதர, சகோதரிகளே....." என்று ஆரம்பித்ததும்தான் தாமதம், 'கொல்'லென்ற கேலிச் சிரிப்புக்



கிளம்பிவிட்டது. காரணம் அது மகளிர் கல்லூரி! ஒரேயொரு கணத்தில் நான் சமாளித்து அருகில் மைக்கைப் பொருத்திக் கொண்டிருந்த ஆண் மகனைச் சுட்டிக்காட்டி, "இந்த ஆண் மகனை நான் சகோதரராக அழைக்கக் கூடாதா?" என்று கேட்டேன். ஒரே கைதட்டல். அப்புறமென்ன, அந்த ஆண்டின் தமிழ் மன்றச் செயலாளராக நானே தேர்ந்தெடுக்கப்பட்டேன்!

பொன். கமலா, சென்னை — 61.

அக்காலப் பெண்களுக்கென்ன?

பட்டி மன்றத் தலைப்பு: வீரத்தில் சிறந்தவர்கள் அக்காலப் பெண்களா? இக்காலப் பெண்களா? என்பது. சீனியர் மாணவியான என்னைத் தலைமை தாங்கச் சொன்னார்கள். அதுவரை மேடையேறி அறியாத நான் கை கால் நடுங்க, பயத்தில் வியர்த்துக் கொட்ட எழுந்து, "அக்காலப் பெண்களுக்கு இம்மாதிரி மேடையேற வேண்டிய அனுபவம் இருந்திருக்காது. இருந்திருந்தால் அவர்களுடைய வீரத்தைப் பரிசோதித்திருக்கலாம்!" என்று சமாளித்தேன்!

டி. ஆர். கமலா, திருச்சி — 8.

உண்மையைத்தான் சொன்னேன்!

நான் அப்போது எட்டாம் வகுப்பு மாணவன். மாணவர் மன்றப் பேச்சுப் போட்டி தலைவராக எங்கள் தமிழாசிரியர். முதன் முதலாக மேடையேறிய நான், "சூரியனைப் போல் வீற்றிருக்கும் ஆசிரியப் பெருந்தகை அவர்களே, சுற்றிலும் விண் மீன்கள் போல் சூழ்ந்திருக்கும் மாணவத் தோழர்களே!" என்று உரையைத் துவக்கியபோது சலசலப்பு எழுந்துவிட்டது. உடனே நான், "சூரியன் இருக்கும்போது விண்மீன்கள் இருப்பதில்லை. நாமும் ஆசிரியர் பாடம் நடத்தும்போது வகுப்பறையில் மனமுவந்து இருப்பதில்லை. எனவேதான் அப்படிக் கூறினேன்!" என்று சமாளித்ததை மறக்கவே முடியாது!

கே. முத்துகிருஷ்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

மாணவர்களின் தர்ம சங்கடம்!

முதன் முதலில் கெமிக்கல் எஞ்ஜினியரிங் நான்காமாண்டு மாணவ (மூன்று மாணவி

களும்)ர்களுக்குத் தியரி எடுப்பதற்காகச் சென்றேன். அவர்களும் ஒருவிதமான ஆவலோடு காத்திருந்தனர். எனக்கோ 'சாக்பீஸ்' புழுதியால் அலர்ஜி ஏற்பட்டுத் தும்மல் மேல் தும்மலாய் வந்துவிட்டது. ஒரு நிமிடம் கூடத் தும்மலில்லாமல் நடத்த முடியவில்லை. மாணவர்களுக்கோ வாய்விட்டுச் சிரிக்க முடியாத நிலை. கடைசியில் நானே அவர்களிடம் "ஸாரி" சொல்லிவிட்டு அவசரம் அவசரமாய் முடித்துக் கொண்டு வந்துவிட்டேன்.

ஜே. கணேஷ், டோம்பிவ்லி.

மறக்கத் தெரிந்த மனமே!

அப்போது நான் ஆறும் வகுப்பு மாணவி. வகுப்பில் முதலாவதாக இருந்தாலும் மேடைப் பேச்சில் பழக்கமில்லை. ஆசிரியையின் வற்புறுத்துதலின் பேரில் ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டேன். பத்துப் பக்கங்களுக்குத் தயார் செய்து மனப்பாடம் செய்திருந்தாலும், மேடையில் ஏறியதும் முதன் முதலில் பேச வேண்டிய குறளை மறந்து போய்விட்டது. மற்றவையும் நினைவுக்கு வரவில்லை. அவமானத்தில் மேடையிலேயே மயக்கமுற்று விழுந்துவிட்டேன். இதுதான் எனது முதல் மேடை அனுபவம்!

ரமா ராஜகோபாலன், நிஜூபான்வல்.

தலைப்பில்லாமல் பேசினேன்!

மேடையில் ஏறியதும் தரப்படும் சீட்டிலுள்ள தலைப்புக்குத் தகுந்தபடி ஐந்து நிமிடம் பேச வேண்டிய பேச்சுப் போட்டியில் மேடை ஏறினேன். நடுவர் கையிலிருந்த சீட்டுக்களில் ஒன்றை வாங்கிப் பிரித்துப் பார்த்தபோது ஒரே அதிர்ச்சி. அதில் ஒன்றுமே எழுதப்படாமல் வெள்ளைக் காகிதமாகவே இருந்தது. சமயோசிதமாக 'ஒன்றுமில்லை' என்ற தலைப்பிலேயே பேசிவிட்டு வந்துவிட்டேன். நடுவர் குழு தன் தவறுக்கு வருந்தி, எனது சாமர்த்தியத்தைப் பாராட்டி எனக்கே முதல் பரிசு கொடுத்துவிட்டார்கள்!

கிரிஜா நந்தகோபால், திருச்சி—20.



தவறுக்கும் ஒரு பரிசு!

கல்லூரிக் கவியரங்கம்தான் நான் மேடையேறிய முதல் அனுபவம். மேடையேறியதும் ஏற்பட்ட படபடப்பில் எழுதி வைத்திருந்த கவிதைகளின் பக்கங்களை மாற்றி மாற்றிப் படித்துவிட்டேன். இதையறிந்து கொண்ட கவியரங்க நடுவர், 'பக்கம் மாறிய பாக்கள்' என்று தலைப்பிட்டு என் கவிதைக்கு ஆறுதல் பரிசு வழங்கினார்.


ப. இராஜகோபால், ஹரித்ராநதி.

பாரதியே காப்பாற்று!

எங்கள் பள்ளியில் நடந்த பாரதி விழாவில் ம. பொ. சி. தலைமை தாங்கினார். மாணவியர் தலைவி மிகவும் குறும்புக்காரியாதலால் 'நான் அறிந்த பாரதி' என்ற தலைப்பில் நான் பேசப் போகிறேன் என்று அறிவித்துவிட்டாள். இதை எதிர்பார்க்காத நான் — ஆசிரியைகளிடம் பேசும்போதே தடுமாறும் நான் — வெடவெடத்துப் போய்விட்டேன். கண்களில் நீர் முட்ட 'பாரதி என்னைக் காப்பாற்று' என்று மானசீகமாகப் பாரதியிடமே வேண்டிக்கொண்டு பேச ஆரம்பித்தேன். எப்படித்தான் வந்ததோ அந்த வேகம்.... சுமார் பத்து நிமிடங்கள் பேசி







"உனக்குத்தான் வேலை கிடைச்சுடிச்சே இன்னும் ஏண்டா கவலைப் படறே?"
"ரிடையர் ஆன பிறகு மறுபடியும் வேலையிருக்காதேன்னுதான்!"

முடித்தேன். பிறகுதான் எனக்குச் சுய நினைவே வந்தது. மாணவிகள் மட்டுமல்ல; என் பேச்சை ம.பொ.சி.யே பாராட்டிய போது மெய் சிலிர்த்துப் போனேன்!

நீரஜா மூர்த்தி, பெங்களூர்—19

பொன்னைக் கதராக்கினேன்!

'இப் பொன் மாலையைக் கதர் மாலையாக நினைத்துப் பெருந் தலைவருக்கு அணிவிக்கிறேன்!' என்றதும் பெருந்திரளான மக்கள் சிரிக்க ஆரம்பித்துவிட்டனர். நான் ஒன்றும் புரியாமல் விழித்தபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் புன்முறுவலுடன் மாலையை வாங்கிக் கொண்டு என்னை முதுகில் தட்டிக் கொடுத்தார். இன்று நினைத்தாலும் அந்த அனுபவம் என்னைப் புல்லரிக்க வைக்கிறது!

எஸ். சிவப்பிரகாசம், வேலூர் (சேலம்).

வில்லனையும் சிரிக்க வைத்தேன்!

நான் பணிபுரியும் தியேட்டரில் நடந்த ஒரு வெற்றிப் படத்தின் பரிசளிப்பு விழா. அதில் என்னைப் பேசும்படி மானேஜர் வற்புறுத்தவே நானும் அரை மனத்தோடு மேடையேறிவிட்டேன். என்னையறியாமலேயே கை, கால்கள் உதற ஆரம்பித்துவிட்டன. அதைக் கண்ட மானேஜர், "ஏம்பா கைகால் உதறுது? தைரியமாப் பேசு!" என்று சற்று உரக்கச் சொல்லவே கூட்டமே சிரித்துவிட்டது. நான் ஒரு வழியாகச் சமாளித்து, பக்கத்திலிருந்த நடிகர் அசோகனைச் சுட்டிக்காட்டி, "இதோ பக்கத்திலேயே பயங்கர மீசையும், மொட்டைத் தலையுமாக வில்லனை உட்கார வைத்துவிட்டு என்னைப் பேசச் சொன்னால் எப்படி? கைகால் உதறத்தானே செய்யும்?" என்று பேசியபோது அசோகன் உட்பட அனைவரும் வாய்விட்டுச் சிரித்துவிட்டனர். அதன் பிறகு தைரியமாகப் பேச ஆரம்பித்துவிட்டேன்.

கு. ராமமூர்த்தி, வேலூர் (வ. ஆ.)

தன்னையே நினைவு படுத்திய தலைவர்!

சென்னையில் நடந்த இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக் கழக ஆண்டு விழா. அதற்கு அண்மையில் காலஞ்சென்ற நீதிபதி ராமப்பிரசாத் ராவ் தலைமை தாங்கினார். அரங்கமே நிரம்பி வழிந்தது. நிகழ்ச்சி முடிவில் செயலாளரான நான் நன்றியுரை ஆற்றுவதற்காக மைக் முன்னால் நின்றபோது பயத்தால் வியர்த்துப் போனேன். மனப்பாடம் செய்திருந்ததில் பாதி மறந்து போனது. குறிப்பாகத் தலைமை தாங்கியவரை அடியோடு மறந்துவிட்டேன்! நீதிபதி அவர்கள் சிரித்துக்கொண்டே தம்மைத்தாமே தமது கட்டை விரலால் சுட்டிக்காட்டி நினைவுபடுத்தினார். பிறகு நான், தலைமை தாங்கியதற்கும் தவற்றைச் சுட்டிக்காட்டி நினைவுபடுத்தியதற்கும் அவருக்கு நன்றி கூறியபோது அவையின் கரவொலி கூரையைப் பிய்த்தது!


எஸ்.கே. சுப்பிரமணியன், திருநெல்வேலி

மறக்க முடியாத பேச்சு!

நாகர்கோவிலில் நடந்த தமிழரசுக் கழக மாநாடு. ம.பொ.சி., மற்றும் பல அறிஞர்கள் மேடையில் இருந்தனர். வரவேற்புரை நிகழ்த்த வேண்டிய நான், முகவுரை கூறு முன்பே வியர்த்துப் போனேன். "திருவிதாங்கூர் தமிழ் நாட்டுடன் சேர வேண்டும். அதற்கு எங்கள் தெற்கு எல்லைத் தளபதியின் கீழ் அணி வகுத்துள்ளோம்!" என்று கூறும்போது 'தளபதி' என்பதற்குப் பதில் 'தளர்பதி' என்று சொல்லிவிட்டேன். ஆனாலும் உடனே சமாளித்து, "எங்கள் தெற்கில் 'தளர்பதி' இல்லை. எதற்கும் தளராத பதிகள் தான் உண்டு!" என்று கூறிச் சமாளித்தேன். கூட்டத்தில் அமோக கரகோஷம். அதன் பிறகு நூற்றுக் கணக்கான மேடைகளில் நான் பேசிவிட்டாலும் அந்தத் 'தளர்பதி'யை என்னால் மறக்கவே முடியவில்லை!

என். ஏ. வேலாயுதம், வடிவீஸ்புரம்.

“ஸ்டேஃப்ரீ பெல்ட் இல்லாத நேப்கின்கள்-வசதிக்கு வசதி, சுகத்துக்கு சுகம், விடுதலை உணர்வுடன் விரும்பியதைச் செய்கிறேன்”



பெல்ட் இல்லை, நாடா இல்லை, கவலை இல்லை!



உரியுங்கள்... ஒட்டுங்கள்: இறுக்கமாக அணிந்துள்ள பேண்ட்டியின்மீது ஒட்டும் பகுதியை வைத்து அழுத்துங்கள்.

ஸ்டேஃப்ரீ பெல்ட் இல்லாத நேப்கின்கள் இருந்துவிட்டால், பெல்ட், நாடா, ஊசி, ஹுக் என்று எதைப்பற்றியுமே நான் கவலைப்பட வேண்டியதில்லை. முண்டு, முடிச்சு கிடையாது. வெட்டு, சிராய்ப்பு எதுவுமில்லை. எவ்விதமான அசௌகரியமும் இல்லை.

ஸ்டேஃப்ரீயில் உள்ள ஒப்பற்ற ஒட்டும்பகுதி, நேப்கினைக் கச்சிதமாகப் பொருந்த வைக்கிறது. அணிவது சுலபம், மாற்றுவதும் எளிது. சாதாரண நேப்கின்களைவிட, ஸ்டேஃப்ரீ மிகவும் வசதியானது, சுகமளிப்பது.

ஸ்டேஃப்ரீ என் உடலோடு ஒட்டி உறவாடுவதுடன், உயர்ந்த பாதுகாப்பும் அளிக்கிறது. அதை அணிந்து என் மனம் விரும்பியதைச் செய்யமுடிகிறது. விரும்பியதை அணியவும், கவலையின்றி வெளியில், விரும்பிய இடத்திற்கு செல்லவும் முடிகிறது.

அதுமட்டுமா? உங்களுக்குத் தேவையான சுகாதாரப் பாதுகாப்பு அனைத்தும் கிடைக்கிறது.

ஒரு முழு அளவு நேப்கினான ஸ்டேஃப்ரீயில் அதிக உறிஞ்சும் தன்மை கொண்ட உள்-அடுக்குகள் அமைந்துள்ளன. அத்துடன் 3-வழி சீல் நிற பிளாஸ்டிக்-லீக்ப்ரூப் இருப்பதால் கறை படியுமோ என்ற கவலை ஒருபோதும் இல்லை. மேலும் இதில் அதி மென்மையான விசேஷ ஒண்டர்ராப் அமைந்திருப்பதால் ஈர உணர்வு சிறிதுமின்றி எப்போதும் உற்சாகத்துடன் உங்களால் உலாவ முடிகிறது.

10 அல்லது 20 நேப்கின்கள் கொண்ட பாக்கெட்டுகளாக கிடைக்கின்றன



விடுதலை உணர்வுடன் விரும்பியதைச் செய்திட...ஸ்டேஃப்ரீ

Johnson & Johnson

FREE TEXT BOOKS
FOR
SCHOOL CHILDREN

The new Scheme launched by the Government of Karnataka will make children's education more affordable to lakhs of parents in the State.

*****

All boys and girls studying in Standards I to IV in Government Schools will be given text books — free of cost! Children studying in schools run by the Bangalore City Corporation are also included in this scheme. In addition, boys and girls belonging to the Scheduled Castes and Scheduled Tribes who study in private institutions will get this benefit.

The Government of Karnataka is spending Rs.3.50 crores to implement this Scheme. So that an estimated 48.03 lakh students will benefit.

Yes, the Government of Karnataka is doing all it can to make the future brighter for children. All over the State. More and more children will now be able to study. And more and more parents will now be able to send their children to school.

ಕರ್ನಾಟಕ ವಾರ್ತೆ

KARNATAKA
INFORMATION



பாக்யராஜ் பதில்கள்

ஏ. எஸ். சாகுல் அமீது. பூனா - 2.

* இந்தித் திணிப்பைப் பற்றி உங்கள் கருத்து என்ன?. (தாங்கள் ஒரு தமிழன் என நினைக்காமல், இந்தியன் என்ற முறையில் இந்தக் கேள்விக்குப் பதில் தரவும்.)

* ஸலாம் அலைக்கும் சாகிப்!

திணிப்புன்னு நீங்களே முடிவெடுத்துட்டு, எங்கிட்ட கருத்துக் கேக்கறீங்களே! சரி பரவாயில்லே; உங்களுக்கு மட்டும் புரியற மாதிரி சொல்றேன். நான் அமெரிக்கா போனப்ப, 'ஆர் யூ அன் இண்டியன்? (Are you an Indian)'ன்னு கேட்டாங்க. பெருமையா 'யெஸ்' ஸுன்னு இங்கிலீஷ்ல சொன்னேன். பம்பாய் போனப்ப 'ஆப் மதராஸி ஹை?' என்று கேட்டாங்க. 'ஹா ஜீ' என்றேன், அதே பெருமையுடன் இந்தியில்! வீட்டில என் பெண்டாட்டி கிட்ட இந்த அனுபவங்களை எல்லாம் கொங்கு தமிழ்ல ரொம்ப சந்தோஷமா சொன்னேன். புரிஞ்சதுங்களா பாய்?

டி. ஆனந்த நடேசன், சிதம்பரம் - 308 001.

* பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்வதால் ஏற்படும் டென்ஷனை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

* பரீட்சைக்காகப் படிச்சா எந்தப் பாடப் புத்தகமும் அவஸ்தையாத்தான் இருக்கும். தெரிஞ்சுக்கணும்னு படிச்சா, எல்லாப் பாடப் புத்தகமும் கதைப் புத்தகம் மாதிரி இருக்கும். நான் ரெண்டாவது ரகம். வேலையை வேலையா நினைக்கிறதில்லே!

புகைப்படம்: மனோ.

எச். ஜீலானி, சென்னை - 600 099.

* எவ்வளவுதான் அரசியல் நுணுக்கம் உடையவர்களாக இருப்பினும், அவர்களைப் புறக்கணித்து நடிகர்களையே வெற்றிக் கொடி நாட்டச் செய்யும் மக்களின் தேர்தல் போக்கு சரியானதா?

* மக்களும் முட்டாள்கள் அல்ல; நடிகனும் முட்டாள் அல்ல. ஒரு சில நடிகருக்கே மக்களின் செல்வாக்கு இருக்கிறது. ஒரு சில நடிகர்களையே அரசியலும் அங்கீகரிக்கிறது.



டி. எம். பாரதி, ஜபல்பூர்.

* கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும் வண்ணம் என்றாவது ஒருநாள், ஏதாவது ஒரு சாதனை நிகழ்த்துவீர்களா?

* விஷயம் தெரியாதுங்களா? கம்போஸ் பண்ணிக்கிட்டு இருக்காங்க. சீக்கிரமா வருது!

ஜி. கமலா, தஞ்சாவூர்.

* நடுத்தரக் குடும்பத்தையும், தாய் தந்தைக்கு ஒரே பொண்ணுமாகிய எனது தோழி, தங்களின் புகைப் படங்கள் 200—க்கும் அதிகமாக வீடு, படுக்கை அறை முதலியவற்றில் வைத்திருந்தமையால் வந்த வரன்கள் தட்டிப் போகின்றன. படங்களை எடுத்துக் கண்டிக்க முற்பட்டபோது, விஷம் சாப்பிட்டு இறந்து ஆவி உருவில் பாக்யராஜிடம் தங்கு தடங்கல் இன்றி வாழ்ந்துவிடுவேன் எனப் பயமுறுத்துகிறாள். இவளுக்கும், இவள்போல் உள்ள பெண்களுக்கும் தங்களின் பதில் ஒரு சாட்டையடியாக அமையுமா?

* என் படத்தைப் பாக்கற பொண்ணுகளோ அல்லது பொம்பளைகளோ 'பாக்யராஜ் என் பேரன்', 'பாக்யராஜ் என் மகன்,' 'பாக்யராஜ் என் அண்ணன்,' 'பாக்யராஜ் என் தம்பி' — இந்த நினைப்போட, என்னை நேசிக்கணும்னுதான் நான் கஷ்டப்படுகிறேன். இந்தப் பாசத்திலதான் இதுவரைக்கும் எனக்கு வெற்றி கிடைச்சிருக்கு. உங்க தோழி என்னோட உண்மையான ரசிகையா இருந்தா சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கிட்டு என் பொண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை பெத்துத் தயார் பண்ணச் சொல்லுங்க. (இப்ப இருக்கிற என் பொண்ணுக்கு ஏற்கெனவே பத்து மாசம் ஆயிடுச்சு; அடுத்தாப்பல பொறக்கப் போற பொண்ணுக்கு!)

சி. திருப்பதி, கரம்பக்குடி.

* டைரக்டர் டி. ராஜேந்தரிடம் உங்களுக்குப் பிடித்தமான குணம் எது?

* சிலம்பரசனுக்கு இப்பவே கலை ஆர்வத்தை ஊட்டியது.

உமார்த்தி, கோவை—43.

* நீங்கள் உருவாக்கிய பாத்திரத்திலேயே நடித்து உங்களைக் கண் கலங்கச் செய்த நடிகை யார்?

* நிலவுக்கு மறு பெயரையும், காற்றுக்கு மறு பெயரையும், தன் பெயரில் இணைத்த தெலுங்குப் பெண்மணி.



மௌனப்புயல்

முன்னால் காலடி எடுத்து வைக்க மன்மோஹன் சற்றுத் தடுமாறினான். இந்தத் தெருவும் இப்போது மௌனமாக நின்ற வீடுகளும் அன்னியமாகத் தோன்றின. இடையிடையே சில வீடுகள் கரிந்து சரிந்திருந்தன. உள்ளே இருந்த மனிதர்கள் என்ன ஆனார்கள் என்று புரியாத குழப்பத்துடன் கரிந்த ஜன்னல்கள் தெருவை நோக்கிப் படபடத்தன. வீட்டுச் சாமான்களை லூட்டி அடித்ததற்கான அறிகுறிகள் வெளியில் தெரிந்தன. ஒரு கையாலாகாத்தன சோகத்துடன் அக்கம் பக்கத்து வீடுகள் மௌனத்துடன் நின்றன. திடீரென்று ஒரு ரௌடிக் கும்பல் தாக்க வந்தால் அவைதான் என்ன செய்ய முடியும்?

வந்தவர்கள் வன்முறைகளுக்குப் பழக்கப் பட்டவர்களாக இருக்க வேண்டும். அதையே தொழிலாகக் கொண்ட வெறியர்களாக இருக்க வேண்டும். சீக்கியர்கள் எந்தெந்த வீடுகளில் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு செயல்பட்டவர்கள். எந்த ஆத்மார்த்த சோகமும் கிளப்பிவிட்ட கோபத்தின் தாக்குதலாகத் தோன்றவில்லை. இது. வன்முறை ஏற்படுத்தும் கிளுகிளுப்புக்காகவே நடந்த களியாட்டம் போல்...

நிச்சயம் இது ஒரு சின்னக் கூட்டத்தின், சமூக விரோதிகளின் செயல்,. குழப்ப நிலையை உபயோகிக்க முயலும் துரோகிகள். 'யார் இவர்களுக்கு இந்தத் துணிவைக் கொடுத்தார்கள்' என்று பதுங்கி உயிர் தப்பியிருக்கும் சீக்கியர்கள் கோபப்படுகிறார்கள். ஜோஸ்யம் சொல்கிறார்கள். 'எங்களுடைய இனத்தைப் பூண்டோடு அழிக்க இந்தத் திட்டம்; அல்லது பயமுறுத்தல்' என்று குமுறுகிறார்கள்.

'வெறிச்'சென்றிருந்த தெருவையும் கரிந்திருந்த அநாதை வீடுகளையும் அவன் ஒரு முறை சோர்வுடன் பார்த்துவிட்டுப் ''பைத்தியக்காரர்கள்'' என்று முணுமுணுத்தபடி நடந்தான்.

வன்முறையோடு நாம் வாழ ஆரம்பித்து எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டது. தீண்டாமையைச் சரளமாக ஏற்றுப் பழகிய சமூகம் இது. மதம் என்கிற பெயரில், மதத் தலைவன் என்று சொல்லிக் கொள்பவன் செய்யத் தூண்டும் படுகொலைகளைக் கூடக் கேள்வி கேட்கத் தெரியாத சமூகம். பெண்களை நடத்தும் கேவலத்தையும், போலீஸின் அடாவடித்தனத்தையும் இன்னும் எத்தனையோ அநீதிகளையும் கண்டும் காணாத மாதிரி இருக்கப் பழகியிருக்கும் சமூகம். வன்முறை இப்பொழுது ஒரு வாழ்க்கைமுறை' ஆயுதம். அதை யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் உபயோகித்துக்



வாஸந்தி

கொள்ளக் கூடிய வசதியுள்ளது. மதத் தலை வர்கள் அதை உபயோகிக்கும்போது வேலை யற்ற போக்கிரிகளும், அரசியல்வாதிகளும் உபயோகிக்க மாட்டார்களா?

மேம்பட்டவர்கள் செய்த குற்றத்துக்கு நீயும் நானும்தான் கூலி கொடுக்கப் பிறந் திருக்கிறோம். இதில் அவர்களுடைய நகத் தின் நுனி கூடச் சேதமாகாது.

ஏன் இப்படி என்று கேட்காதே. மனித சமூகம் தோன்றிய காலத்திலிருந்து பலி ஆடு கள் அதன் ஒரு அவசியமான அங்கம். இதற்கெல்லாம் காரணங்களை ஆராய முயல் வதும் காரண கர்த்தாக்களின் பெயர் பட் டியலை நீட்டுவதும் பைத்தியக்காரத்தனம்.

கொஞ்ச நாட்களில் நேற்றும் இன்றும் நடந்ததெல்லாம் எல்லாரும் மறந்து விடுவார் கள். இதெல்லாம் கொலைகள் இல்லை. வகுப் புக் கலவரங்கள் என்றுதான் சொல்லப் படும்...

நடக்க நடக்க மனசு ஒரேயடியாய்க் கனத் தது. இரும்பாகி விட்டதோ என்று பயமேற் பட்டது. இரண்டு நாட்களாகக் கிடைத்த அதிர்ச்சி வைத்தியத்தில் மனசும் மூளையும் இறுகி மரத்துப் போனாற்போல் சலனமற்று இருந்தது. மெல்லிய உணர்வெல்லாம் மடிந்து விட்ட மாதிரி வறண்டிருந்தது; உதட்டை நனைத்துக் கொள்ளக் கூட எச்சில் ஊறாத வறட்சி...

''ஏய், யாரது?''



அவன் சரேலென்று நின்றான். தற்காப் புணர்வு விழியோரத்தில் துள்ளி நின்றது.

சைக்கிளில் இரண்டு வீடு தள்ளியிருக்கும் மதராஸிப் பையன், பாஸ்கர். புலன்கள் சற்றுத் தளர்ந்து மெல்லிய புன்னகைக் கீற்று விரிந்து ''ஹலோ!'' என்று குரல் வெளிப் பட்டது.

''யார்?'' என்றான் பாஸ்கர். மறுபடி சந்தேகத்துடன். பிறகு, ''மைகாட்! மன்மோஹன் ஸிங்!'' என்று கூவி, சட்டென்று வாயைப் பொத்தி அக்கம்பக்கம் பார்த்தான். அந்த அரை க்ஷணம் ஒரு மெல்லிய அவமான உணர்வு மன்மோஹனை ஆக்கிரமித்தது.

''எனக்கு அடையாளமே தெரியல்லே 'யார்'!'' என்றான் பாஸ்கர்.

''தட் இஸ் தி ஐடியா!'' என்றான் மன்மோஹன்.

அவன் முதுகில் கைவைத்து அணைத்து ''ஓ பாட் யார்!'' என்று முணுமுணுத்தான் பாஸ்கர்.

''தட் இஸ் லைஃப்!''

மன்மோஹன் சிரிக்க முயன்றதில் கண்களில் வெட்கமில்லாமல் நீர் நிறைந்தது.

''இப்ப எங்கே கிளம்பினே?''

''வீட்டிலே அடைஞ்சு கிடக்க முடியல்லே. முடியை வெட்டினால், ஆபத்தில்லேன்னு கிளம்பிவிட்டேன்.''

பாஸ்கர் யோசனையுடன் அவனைப் பார்த்தான்.

''இப்பவும் சொல்ல முடியாது மன்மோஹன்! யாராவது உன்னை அடையாளம் கண்டு கொள்ளலாம்!''

''அடையாளம் தெரிஞ்சவன் தாக்க மாட்டான்!''

''சொல்ல முடியாது! தவிர, வெளியிலே நடக்கிறதைப் பார்த்து மனசு அதிகமாக் கஷ்டப்படும்!''

''கவலைப்படாதே! என் மனசிலே இப்ப உணர்ச்சிகளே இல்லே. எதுவும் என்னைப் பாதிக்காது...!''

''அது நிஜமில்லே 'யார்'!'' என்றான் பாஸ்கர் அனுதாபத்துடன். ''வா நானும் உன்னோடு வரேன். எங்கே போகலாம்?''

''எங்கே வேணும்னாலும். சைக்கிளில் 'டபிள்ஸ்' போக முடியுமா?''

''தெருவில் ட்ராஃபிக்கே இல்லே. எவன் பிடிக்கப் போறான்? பிடித்தால், தீன் மூர்த்தி பவனுக்குப் போகிறோம்னு சொல்லலாம்.''

''ரைட்டோ!''

அவன் உட்கார்ந்ததும் பாஸ்கர் ஓட்ட ஆரம்பித்தான்.

''இத்தனை அமர்க்களம் நடந்திருக்கு. போலீஸ் எங்கேயாவது தெரிகிறதோ பாரேன்! எல்லாம் தீன்மூர்த்தி பவனிலும் ஏர்போர்ட்டிலும் ட்யூட்டி நிற்கிறதாம்!''

''இன்றைக்கு ராணுவத்தை அழைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இனிமேல் அத்தனை வெறியாட்டம் இருக்காது. ராணுவம் அடக்கிவிடும்!''

''இதை முன்பே செய்திருக்கணும்! இட் இஸ் எ ஷேம்!''

சற்றுநேர மௌனத்திற்குப் பிறகு மன்மோஹன் மெல்லிய குரலில் சொன்னான்.

''யாரைச் சொல்லி என்ன லாபம் யார்? சீட்டுக் கட்டு உதிர்ந்து விழற மாதிரி. பிரதமர் மறைஞ்ச உடனே அரசாங்கம் நிலை குலைஞ்சு போச்சு! அந்த அமைப்பைத்தான் தப்பு சொல்லணுமே தவிர எந்தத் தனி மனிதனையும் சொல்லி லாபமில்லே. எவனுக்கும் பொறுப்பை ஏற்கத் தைரியமில்லே.''

''இட் இஸ் எ ஷேம் ஆல்ரைட்!''

''இட் இஸ்!''


''உன் உறவுக்காரர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா?''

''ஆ. ஆமாம். நான்கு பேர்கள் க்ளோஸ்!''

''காட்! உங்கம்மாவுக்கு எப்படியிருக்கும்?''

மன்மோஹன் பதில் ஏதும் சொல்லவில்லை. மூன்று நாட்களாக அம்மாவின் பார்வையே மாறியிருந்தது. பிறந்த மண்ணிலேயே பாதுகாப்பில்லை என்கிற பயம் துருத்திக் கொண்டு நின்றது.

''அகதிகள் முகாமுக்கு ராணுவம் சீக்கியர்களை அழைத்துச் செல்லுகிறதாம் மன்மோஹன்! அங்கங்கே ட்ரக் வருகிறதாமே?''



''ஆமாம்! அந்த மாதிரி ஒரு ட்ரக்குக்காகக் காத்திருக்கும் போதுதான் என் சித்தப்பா பிள்ளைகள் இரண்டு பேர் கொல்லப்பட்டார்கள்! முதலில் வந்த டிரக்கில் இடமில்லாததால் இரண்டாவதற்காகத் தெருவில் காத்திருந்தார்களாம்!''

''சொந்த தேசத்தில் அகதிகளாகப் போவது எப்படிப்பட்ட அனுபவம் பார்!''

''பயங்கரம் 'யார்'!'' என்றான் மன்மோஹன். ''உசிரோட மதிப்பு இப்பத்தான் எனக்குத் தெரிஞ்சிருக்கு. சாவோடு தோள் உரசும்போதுதான் உயிர் இருக்கிற பிரக்ஞை ஏற்படறது பாஸ்கர்! வேடிக்கையா இல்லே? வி டேக் லைஃப் ஃபார் கிராண்டட்!''

''வி நௌ டேக் வயலன்ஸ் ஆல்ஸோ ஃபார் கிராண்டட்!''

மன்மோஹன் மௌனமாகச் சுற்றுப் புறத்தைப் பார்த்தான். சாதுவாகத் தெரி

யும் இந்தத் தென் இந்தியன் எத்தனை ஆழமாகச் சிந்திக்கிறான் என்று மெல்லிய வியப்பு ஏற்பட்டது. தென்னிந்தியர்கள் பொதுவாகத் தர்ம நியாயத்துக்குப் பயப்படுபவர்கள் என்று தோன்றிற்று. இவர்களுடைய மெல்லிய உணர்வுகள் மரத்து விடவில்லை. லௌகிகத்தில் வடக்கத்தியர்கள் அளவு அமிழ்ந்து போகாததாலேயே மனிதாபிமானம் இவர்களில் மடிந்து விடவில்லை. திடீரென்று ரஞ்சனியின் நினைவு வந்தது. அவள் தன்னைப் பற்றி எத்தனை கவலைப்படுகிறாளோ என்று யோசனை ஏற்பட்டது. அவளிடம் தனக்கிருக்கும் விநோத நெருக்கத்தை நினைத்துக் கவலையேற்பட்டது. எந்தப் பெண்ணிடமும் அவனுக்கு இதுவரை ஏற்பட்டிராத நெருக்கம் அவளிடம் ஏன் ஏற்பட வேண்டும்? தன்னைப் புரிந்து கொள்கிறாள் என்கிற மெதப்பினாலா? புத்திசாலித்தனமும் பரந்த சிந்தனையும் உடையவள் என்பதாலா? தெரியவில்லை.

அவளது தோழமையை மனசு வேண்டி நிற்பது மட்டும்தான் புரிகிறது.

''பார்த்தியா இங்கே?'' என்றான் பாஸ்கர்.

கனாட்ப்ளேஸ் — போர்க்களம் மாதிரி காட்சியளித்தது. பலபெரிய கடைகள் எரிந்து, கண்ணாடிக் கதவுகள் உடைக்கப்பட்டு, சாமான்கள் சேதப்படுத்தப்பட்டு...

பேச வார்த்தைகள் இல்லை என்பது போல் இருவரும் மௌனமாக நகர்ந்தார்கள். சற்றுத் தூரம் வேகமாகச் சைக்கிளைச் செலுத்திச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ள ஒரு

> **''டேய் பாலு! நீ முதல் வகுப்பில் பாஸ் ஆனதுக்கு உன்னை எப்படிப் பாராட்டறதுன்னு தெரியலேடா...''**
> **''அதுக்கென்ன தெரிஞ்ச பிறகு பாராட்டேன்!''**

முனைத் திருப்பத்தில் பாஸ்கர் நின்றான்.

''போலீஸ் படைன்னு ஒண்ணு இருக்கா மன்மோஹன்?''

''அதைப் பற்றிக் கேள்விப்பட்ட ஞாபகம் இருக்கு லேசா, எனக்கு!''

வாயை மூடிக் கொண்டு இருவரும் தங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். ரஞ்சனி வசிக்கும் காலனிக்கருகில் வந்திருப்பதை மன்மோஹன் அப்பொழுதுதான் கவனித்தான்.

''ஏய், இங்கேதான் அடுத்த தெருவிலே ஆரம்பிக்கிற கவர்ன்மெண்ட் காலனியிலே என் ஃப்ரெண்ட் ரஞ்சனி இருக்கா. டி—1/142— லே! அங்கே போகலாம்!''

''இரு. காலையிலேந்து ஸ்மோக் பண்ணலே. ஒரு இழுப்பாவது இழுக்கணும்'' பாஸ்கர் தன் பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து மன்மோஹனிடம் நீட்டினான்.

''வேண்டாம் 'யார்'. நான் ஸ்மோக் பண்றதில்லே!''

''அட! நீ இத்தனை தீவிர சீக்கியன்னு எனக்குத் தெரியாது!''

''அதனாலே இல்லே! எங்க அப்பா அம்மாவுடைய ஸென்டிமெண்ட்ஸை நான் அலட்சியப்படுத்த முடியாது. இத்தனை நாள் நான் தலை முடியை வெட்டாததற்கும் அதான் காரணம். இப்ப வேறே வழியில்லேன்னு...!''

சரசரவென்று பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. அவர்கள் சட்டென்ற விழிப்புடன் திரும்பிய போது நான்கைந்து பேர்கள் அவர்களை நோக்கி நகர்ந்து வருவது தெரிந்தது.

''அரே! சர்தார்ஜி! யாரை ஏமாத்தப் பாக்கறே?''

விருக்கென்று பாஸ்கர் சிகரெட்டைக் கீழே போட்டுத் தேய்த்துச் சைக்கிளில் உட்கார்ந்தான்.

மன்மோஹன் பின்னால் உட்கார்ந்ததும் கிளம்ப எத்தனிக்கையில் அந்தப் போக்கிரிகள் கிட்ட நெருங்கி விட்டார்கள்.

''டேய் அவனுக்கு நீயும் உள் கையா?''

கையிலிருந்த தடியால் அவர்கள் இருவரையும் மாற்றி மாற்றி அடிக்க ஆரம்பித்தார்கள். நெற்றிப் பொட்டிலிருந்து பெருகிய ரத்தத்தின் சூடு கன்னத்தில் பட்டுக் கழுத்துக்கு இறங்கிற்று.

''எத்தனை நேரம் அடிக்கிறது? கெரஸின் எங்கே?''

''வருகிறது!''

''ஏய், எங்களை விடுங்கள்! நாங்கள் ஹிந்துக்கள்!''

அரைகுறை மயக்கத்தில் மன்மோஹன் கண்களை மூடிக் கொண்டான். முடிந்தது என் சரித்திரம்... அதோடு என் கனவுகள், லட்சியங்கள், ஏமாற்றங்கள்...

கெரஸின் வந்துவிட்டதா என்று பார்க்க அவன் கண்களைத் திறந்த போது சுற்றி நின்றிருந்தவர்கள் சரேலென்று எதிர்பாராமல் கலைந்து ஓடித் தெருச் சந்தில் மறைந்து போனார்கள். தெருவில் ராணுவ ஜீப் ஒன்று வருவதை மன்மோஹன் கவனித்தான்.

ரத்தம்வழிந்ததிலிருந்து மண்டையில் நல்ல காயம் என்று புரிந்தது. பாஸ்கரின் முழங்கையிலிருந்து ரத்தம் வழிந்தது.

ராணுவ ஜீப் அருகில் வந்து நின்றது.

''யார் செய்தது இப்படி? என்ன கலாட்டா?'' என்றார் ஒருத்தர்.

''யாரோ அடித்துப் போட்டு விட்டார்கள். இவன் சீக் என்ற அனுமானத்தில்!''

''எங்கே அவர்கள்?''

''ஓடி விட்டார்கள்!''

ஒரு விநாடி யோசித்து, ''ஏறிக் கொள்ளுங்கள். ஆஸ்பத்திரியில் கொண்டு விடுகிறோம்'' என்றார் அவர்.

''வேண்டாம். இங்கேதான் பக்கத்தில் வீடு இருக்கிறது. இவனை அழைத்துக்கொண்டு போங்கள். நான் சைக்கிளில் போகிறேன்'' என்றான் பாஸ்கர்.

''சரி, நீ முதலில் கிளம்பு!'' பாஸ்கர் கிளம்பிச் சற்று தொலைவு சென்றதும் ஜீப் தொடர்ந்தது. ''வீட்டின் நம்பர் டி — 1/142'' என்றான் மன்மோஹன்.

(தொடரும்)


“உங்கள் 6 நாளேடுக
13 சஞ்சிகைக
7 மொழிகளை
செய்வதெ
சொல்ல

மற்றும்
ன் என்ன
று
ங்களேன்?”



நீங்கள் கோடுக்கும் பணத்திற்கு மிக மதிப்பு.

டைம்ஸ் குரூப், வாசகர் விருப்ப வகைகளை நிறைவு செய்யும் வண்ணம் விரிவான முறையில் ஏராளமான வெளியீடுகளை வழங்குகிறது. அவற்றிலே: செய்தி, வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் சினிமா மற்றும் கலை, பொது விஷயங்கள், தொழில் மற்றும் வேலை வாய்ப்பு, விஞ்ஞானம் மற்றும் பொது அறிவு, பெண வாசகர்களுக்கு பிடித்தமான விஷயங்கள், கதை கட்டுரைகள், பொழுதுபோக்கு விஷயங்கள், நாட்டில், ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி ஆகிய வாசகர்களை பெரிய அளவில், டைம்ஸ் குரூப் திருப்திப்படுத்துகிறது. ஆகவே, உண்மையிலே மக்கள் தொடர்பு சாதன மனிதர் ஒருவரின் கனவு—டைம்ஸ் குரூப்!

ஆகவே, 6 நாளேடுகள், 13 சஞ்சிகைகள் மற்றும் 7 மொழிகள் —உங்கள் மக்கள் தொடர்பு திட்டத்தின் முதுகெலும்பாகும்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா குரூப் வெளியீடுகள்

4
சித்ர ஜாலமும் ''ஜல க்ரீடை''யும்

> நிரந்தரமா யெங்கு நின்றுவிளை
> யாடினதைப்
> பரமதுவே யென்னப் பதமறியேன்
> பூரணமே!
>
> — பட்டினத்தார்.

ஸ்வாமியைப் படம் பிடிக்க அது வேற்று தெய்வ மூர்த்தியாகப் பதிவாகியுள்ள ஸந்தர்ப்பங்கள் பல. அவற்றில் என்னால் மறக்க முடியாத ஒன்று அர்த்த நாரீச்வரத் திருக்கோலம்; அதிலே முகம் ஸ்வாமியுடையதேதான். இன்னொன்றில் அவரது நிழல் தத்ரூபம் ஆஞ்ஜநேயராக விழுந்திருக்கிறது. அடக்க உருவான அந்த மஹா பராக்ரமசாலி, தானே தெய்வமாகத் தெரியாமல் தெய்வத்தின் காலடியில் நிலத்தேதான் கிடப்பேனென்று காட்டுவதாகத் தோன்றிற்று.

நிழல் என்றதும் இன்னொன்று நினைவு வருகிறது. தேவருக்கு நிழல் விழாது என்பார்கள். நேரிலும், படத்திலும் ஸ்வாமிக்கு நிழல் விழுவது மட்டுமில்லை — சில படங்களில் அவருடனுள்ள ஏனையோரின் நிழலும், சுற்றுப்புறக் கட்டிடம் முதலியவற்றின் நிழலும் சிறிது தூரமே பரவியிருக்க ஸ்வாமியின் நிழலோ நீள நெடுக ஓடியிருக்கிறது! ''குளிர் தருவே, தருநிழலே, நிழல்கனிந்த கனியே!'' என அடியார்க்கு விளங்குபவரல்லவா?

ப்ரசாந்தி நிலய உச்சியில் ஸ்வாமி இருக்கும்போது அவரைச் சேர்த்து அந்த மந்திரத்தின் முழு 'வ்யூ'வை வெள்ளையர் ஒருவர் படமெடுத்தார். அதில் மந்திரத்தை அடைத்துக் கொண்டு பின்னணியில் நிழற்படமாக ஸ்வாமியுடைய திருமுகத்தின் பக்கத் தோற்றம் பதிவாகியுள்ளது.

''லீலாசுக ப்ரியே!'' என்று ச்யாமளா தண்டகம் அம்பிகையை அழைக்கும். விளையாடும் கிள்ளையிடம் அன்பு கொண்டவளைப் பொருள். ஸாயி மாதாவோ ஒரு கிளியிடம் அன்பு புரிகையில், தானே விளையாடியிருக்கிறார்! அவரது தூக்கிய முழங்கையில் அமர்ந்து கொண்டு உரிமையுடன் ஒய்யாரமாக அவரது முகத்தை இடிப்பது போல நெருங்கிப் பார்த்துக் கொண்டிருந்தது சுகம். நேரே நின்று ஃபோட்டோ எடுப்பவரின் பார்வைக்கு ஸ்வாமியின் முகத்தில் ஒரு பெரும் பகுதி தெரியாமல் கிளி குறுக்கிட்டது. என்றாலும் அந்த இனிய காட்சி வந்த மட்டும் வரட்டும் என்று பித்தானை அழுத்தினர். 'டெவலப்' செய்து பார்த்தால் படத்தில் ஸ்வாமியின் நாசி, வாய், வலது கன்னம் முதலியவற்றைக் கிளி மறைக்கத்தான் செய்தது. ஆனாலும் கிளியை அங்கையில் ஏந்தும் அங்கயற்கண்ணிக்கு முக்யம் கண்தானே? அதை நினைவூட்டுவதாக கிளியின் கழுத்து வழியாகவே அதற்குப் பின்னுள்ள ஸ்வாமியின் வலக்கண் நன்கு பதிவாகியிருந்தது!

ஸ்தூலத்தில் ஸ்வாமி எழுந்தருளாதிருக்கும்போதே சில ஸத்ஸங்கங்களில் எடுத்த படங்களில் அவர் நடுநாயகமாகக் காட்சி தரும் படங்களுண்டு. இதற்கு மறுமுனையில் அவரோடு சிலர் எடுத்துக் கொண்ட படங்களில் அவர் மட்டும் காமிராவுக்கு டிமிக்கி கொடுத்திருப்பதுமுண்டு.

அவர் வேண்டாமென்று கூறிய போது புகைப்படம் எடுத்தால் நிச்சயம் அதில் புகை மட்டுந்தான் பதிவாகியிருக்கும்! ஸ்வாமியை அருமை அருமையாக எவ்வளவோ படங்கள் எடுத்துள்ள மேஜர் ஜெனரல் மஹாதேவன் தமக்கே இவ்வாறு நேர்ந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். 1972—ல் வைட்ஃபீல்டில் ஸ்வாமி வேண்டாமென்ற போது ஆசை முகத்தின் ஆகர்ஷணத்தில் அவர் ஆறு படம் தட்டிவிட்டாராம். அத்தனையும் 'தட்டி'ப் போகும்படி திருவிளையாடல் செய்துவிட்டாராம் ஆசை முகத்தர்!

தீராத விளையாட்டு ஸாயி



"கிளியின் கழுத்து வழியாகவே
வலக் கண்..

அவரிடம்நம்பிக்கையற்றஒருஃபோடோக் ராஃபர் எடுத்த படங்களில் விழாமலிருந்தே நம்பிக்கை ஊட்டியும் விளையாடியிருக்கிறார்!

காலஞ்சென்ற மாதுஸ்ரீ நாகமணி பூர்ணையா கூறுவதில் இரண்டு: ஒன்று — ஒரு முறை ஸ்வாமியை உடனிருந்த பக்தருடன் ஒரு ஃபோட்டோக்ராபர் படங்கள் பிடித்தவுடன் ஸ்வாமி காமிராவைக் கேட்டு வாங்கிக் கொண்டார். உடனேயே அவர் அதைத் திறக்க ஆரம்பித்தவுடன் ஃபோட்டோக்ராஃபர், ''டெவலப் செய்யுமுன் திறந்தால் இம்ப்ரஷன் போய்விடும் ஸ்வாமி'' என்று அலறினார். ஸ்வாமியோ அதைக் காதில் வாங்கிக்கொண்டதாகவே காட்டாமல், காமிராவைத் திறந்து ஃபிலிம்களை எடுத்தார். அவை யாவும் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு நன்றாக டெவலப் ஆகி வெளிவந்தன! ''அலறினாயே! உனக்கு எப்படி வேலையைக் குறைத்திருக்கிறேன் பார்த்தாயா?'' என்று முறுவலித்தார் ஸ்வாமி. அவர் ஸங்கல்பித்து விட்டால் ஸதாநந்த முழுக்காட்டிப் பல ஜன்ம 'டெவலப்மெண்டை' க்ஷணத்தில் உண்டாக்க முடியாதோ?

இரண்டு — பெங்களூரில் ஒரு பக்தரில்லத்துக்கு ஸ்வாமி சென்றிருந்தபோது அவர்கள் நரஸிம்ஹப் பெருமானுக்குப் பூஜை நடத்தினார்கள். பிறகு ஸ்வாமியுடன் படம் பிடித்துக் கொண்டார்கள். ஊஹிக்க முடிகிறதல்லவா? ஆம், நம்முடைய தண்கண் தங்கம், படத்தில் 'செங்கண் சிங்க'மாக உருக்கொண்டிருந்தது!

மாறு படப்பல வேறு வடிவொடு
தோன்றுவாள் — எங்கள்
பைரவி...!

******

யாஸ்மின் ஸிபல் தமது இல்லத்தில் ஸ்வாமியின் பூஜையறையை எத்தனையோ விதத்தில் மாற்றி மாற்றி அமைத்திருக்கிறார். எதுவுமே அவருக்கு த்ருப்தியளிக்கவில்லை. 'ஸ்வாமி! நீங்கள்தான் த்ருப்திகரமாகப் பூஜாக்ருஹம் அமைக்க வழிகாட்ட வேண்டும். ஸிம்பிளாக உள்ள போதே உள்ளத்தை உயர்த்துவதாகவும் இருக்குமாறு ஓர் அமைப்புக் காட்டி அருளுங்கள்' என்று வேண்டினார்.

அன்று புத்தக ஷெல்ஃபை ஒழித்துக் கொண்டிருந்தார் ஸிபல். ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்த போது, கையிலே ஒரு புகைப்படமும் வந்தது. பார்த்தார். வேறென்னவாயிருக்கும்? 'காயமே கோயிலாக்கி மன மணி லிங்கமாக்க'ச் சொல்லும் பூஜாமூர்த்தி, ஸிபல் விரும்பிய விதமே அமைந்த ஒரு பூஜாக்ருஹத்தின் புகைப்படத்தைப் புத்தகங்களிடையே வித்தகமாக அருளியிருந்தார்!

அதன் அமைப்பையும்தான் பார்த்து விடுங்களேன்! பின்னணியாக ஓர் இளம் ஆரஞ்சுக் கர்ட்டன். அதன் மத்தியில் மென்னகை பூத்த அழகு முகம் மட்டுமே காட்டும் ஸ்வாமி படம். படத்துக்கு வெள்ளை வெளேரென்று ஒரு மாலை மட்டும் சார்த்தியிருக்கிறது. கர்ட்டனின் மேல் பச்சையிலைச் சரம் தோரணம்போல் விரித்திருக்கிறது. படத்தின் கீழ் வேலைப்பாடு இல்லாத, கை வைத்த ஒரு நாற்காலி. ஸ்வாமி அமர்ந்திருப்பதாக பாவிப்பதற்காக. பாவனையை மெய்யாக்கும் திறனும் அவருக்குண்டுதான்! அத்திறனை அவர் காட்டும் வரை நம்மளவில் பாவனைக்கு மெய்ம்மையூட்டிக் கொள்வதற்காக நாற்காலியில் அவர் அணிவது போன்ற ஒரு செவ்வங்கி சார்த்தியுள்ளது. நாற்காலிக்குக் கீழே, அதில் அமரும் அமரரின் பூம்பாதம் படக்கூடிய இடத்தில் ஒரு மெத்துக் குஷன். நாற்காலியின் இரு புறமும் இரு குட்டி மேஜைகள். ஒன்றில் தீபமும் தூபமும். மற்றதில் இளமஞ்சள் மலர்கள் நிறைந்த பூக்கூடை. குஷனுக்கு முன்னுள்ள ஜாலராவும், தூபக்காலிலிருந்து எழும் அகர்பத்திப் புகையும், 'இதோ பஜனை ஆரம்பிக்கப் போகிறது' என்று ச்ருதி சேர்ப்பது போலிருக்கிறது!


******

ஸ்வாமி படங்களிலிருந்து விபூதி, தேன் முதலியன ஒரு சொட்டு அல்லது சொட்டிலிருந்து தொடங்கிச் சாக்குச் சாக்காகவும், குடம் குடமாகவும் பெருகுவது தெரிந்த விஷயமே. இவற்றிலே வெகு சுவையான ஒரு க்ரீடை:

ஃபிஜி கடற்கரையில் களித்துக் கொண்டிருந்த ரமண்லால் பாலா எதற்காகவோ பர்ஸை எடுத்தார். அப்போது அதிலிருந்து ஸாயி விபூதிப் பொட்டலம் கீழே விழுந்தது. இதிலேயே 'மிரகிள்' இருப்பதாக எண்ணிவிடாதீர்கள்! அது ஏற்கெனவே பாலாவின் தாயார் அவருக்குக் கொடுத்திருந்ததுதான்!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஸ்வாமியைப் பற்றிக் கேட்டறிந்தவற்றிலிருந்து, 'இவரும் ஒரு மஹானாயிருக்கலாம்' என்று எண்ணி வந்தார். ஐந்தாண்டுகளுக்குப் பின் அவர் இந்தியா சென்று பம்பாயில் ஸ்வாமியைக் கண்டபின், 'மஹான்கள் பலரில் இவரும் ஒருவர்' என்ற அபிப்பிராயம் அடியோடு மாறிற்று. எப்படிப்பட்ட மாறுதல் என்றால், 'இவரையா மஹான்களுக்கும் மேற்பட்ட அவதாரமாகச் சொல்கிறார்கள்? போலிகள் பலரில் இவரும் ஒருவர். அவ்வளவே' என்று எண்ணலானார். ஆயினும் தாயின் உணர்வை அவமதிக்கலாகாதுஎன்றே திருநீற்றுப் பொட்டலத்தை வாங்கி, நெற்றியில் அணியாமல் பர்ஸிலே போட்டு வைத்தார். அப்புறம் அதை மறந்தும் விட்டார். அதுதான் இப்போது கடற்காற்று வாங்க வெளியே வந்தது!

'கடற்காற்று என்ன? கடலிலேயே அது நீராடித் திளைக்கட்டுமே!' என்று கருணை கொண்டார் பாலா. தமக்கு ஒரு ப்ரயோஜனமும் இல்லாத அந்தப் பொட்டலத்தை, என்னதானிருந்தாலும் அதையும் பூஜிப்பவர் பலர் இருந்தால், எவரும் காலால் மிதித்துவிடும்படியாக எங்கேயோ தெருவிலே எறியாமல் பஸிஃபிக் மாகடலில் அமிழ்ந்து ஸ்நானம் செய்ய விட்டுவிடலாமென எண்ணினார்.



வைட்டமின்கள்

தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை



பால் நுரை வாயொன்றால் பனிக்ஃபிக் தேவதை பாபா விபூதியைப் போஜனம் செய்தது!

வீடு திரும்பி பாலா போஜனம் செய்கையில், அவரது மனைவி, "இதென்ன விபூதி மணம்! எங்கிருந்து வருகிறது?" என்றார்.

"விபூதியுமில்லை, மணமுமில்லை. உன் மனம்தான்! எனக்குக் கறி மஸாலா மணந்தான் தெரிகிறது" என்றார் பாலா.

மனைவி சொன்னதை மெய்யாக்கிக் காட்டினார் மஹிமாவதாரி. பாலாவின் வீட்டுப் படங்களிலிருந்தெல்லாம் விபூதியை வர்ஷிக்கலானார்!

இதை விடவும் விநோதம்! இத்தனை பஸ்மத்தையும் கரைப்பதற்குப் பாலா கடலைத் தேடிப் போக வேண்டாமே என்றும் கருணை கொண்டார் போலும்! பாலாவின் அவநம்பிக்கை பஸ்மமாக வேண்டுமென்றுதான்! பூஜை அறைப் படங்களிலிருந்து — குறிப்பாக, பாலாவின் மனங் கவர்ந்த இயேசு நாதன் சிலுவையிலிருந்து — ஜலம் பெருகத் தொடங்கியது.

வைவஸ்வத மநு தர்ப்பணம் செய்கையில், கையிலெடுத்த நீரில் ஒரு மீன் குஞ்சைக் கண்டான். அதைத் தீர்த்த பாத்ரத்தில் போட்டான். உடனே அது பாத்ரம் கொள்ளாத அளவுக்கு வளர்ந்தது. உடனே அதைக் கொண்டு போய் ஒரு நீர் நிலையில் இட்டான். நீர் நிலையும் போதாததாக அது நொடியில் நெடிதே வளர்ந்தது. அப்புறம் அதை ஸமுத்ரத்திலேயே சேர்ப்பித்தான். அதுதான் மத்ஸ்யாவதார மீனாயிற்று — இது பாகவதக் கதை.

அப்போது மீன் வளர்ந்தது. இப்போது மீன் வளரும் நீர் வளர்ந்தது! உலகைப் பாலிக்க ரத்தம் சிந்திய சிலுவையிலிருந்து பாலாவுக்காக நீர் சிந்தத் தொடங்கியவுடன் அவர் சிலுவையை ஒரு டம்ளருக்குள் வைத்தார். நிமிஷத்தில் டம்ளர் விளிம்பில் சிரிப்பு முட்டச் சிலிர்த்து வழியத் தயாராயிற்று நீர்! அன்புப் பிச்சை பெறுவதற்காக ஸ்வாமி ரொம்பவும் 'வழிவார்'! எட்டு அங்குலவிட்டமும் ஐந்தங்குல உயரமும் கொண்ட ஒரு பேஸினில் பாலா டம்ளரை வைத்தார். பலர் காண, டம்ளர் ஜலம் பெருகிப் பெருகி பேஸின் விளிம்பைப் நக்கலாயிற்று. உடனே அவரவரும் தங்களுக்கென அதிலிருந்து மொண்டு கொள்ள, அவர்களோடு பந்தயம் கட்டிக் கொண்டு நீரும் பொங்கிக் கொண்டேயிருந்தது. தரையெல்லாம் வடிந்த நீரில் அங்கப்ரதக்ஷிணம் செய்தவர்களும் உண்டு!

இந்தக் கூட்டத்தை எப்படி ஸரிக் கட்டி, இந்த வீட்டில் எப்படி அமைதியாக வாழ்வது?' என்று பாலா விலவிலத்த போது குறும்பரும் விளையாட்டை நிறுத்தினார்.

******

"என்ன ஸார் விளையாட்டு? இதுவா ஆஸ்திகம்? இதுவா ஆத்மிகம்?" என்ற முனகல் மீண்டும் கேட்கிறது.

(தொடரும்)

கண்ணிற்குத் தெரியாத கோடு

அன்னம்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1985.
ரூ 250/- மூன்றும் பரிசுக் கதை - 2.

செல்வந்தர்கள் பலர் கூடி அமைத்த ஒரு நிறுவனத்தின் சார்பில் இலவச மகப்பேறு இல்லம் அது. எல்லாவித நவீன வசதிகளும் பொருந்தியது. யாரிடமும் பணம் வாங்குவதில்லை. பணம் படைத்தவர்கள் நன்கொடையாக ஏராளமாகக் கொடுத்தார்கள்.

''கஸ்தூரி நர்ஸிங் ஹோம்'' — பிரபலமானது. அதன் பிரத்யேகக் கவனிப்பிற்குப் பெயர் போனது. அங்கு சேர விரும்புபவர்கள் முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். மொத்தம் நாற்பது படுக்கைகள்தான். இடம் கிடைப்பது மிகவும் சிரமம்.

டாக்டர் நர்மதா தான் நோயாளிகளைச் சேர்க்கும் பிரிவின் தலைவி. ஏழைக் குடும்பத்தில் பிறந்து தன் முயற்சியினால் முன்னுக்கு வந்தவள். ஊரில் அவள் தாயும் தம்பியும் மட்டும் இருந்தனர். தம்பி படித்துவிட்டு வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தான்.

அன்று —

நர்ஸிங் ஹோமில் ஒரே ஒரு இடம்தான் காலி.


ஒரு ரிக்ஷாவில் பேறு நிலையை அடைந்து விட்ட பெண்ணை அழைத்து வந்தாள் ஒரு கிழவி. பின்னாலேயே வந்தவன் அவள் கணவன் கங்கையா.

நர்மதாவிற்குக் கங்கையாவைத் தெரியும். அவள் குடியிருந்த வீட்டின் பக்கம் நகரசபையால்நியமிக்கப்பட்ட துப்புரவுத்தொழிலாளி.

நர்மதாவைப் பார்த்துக் கங்கையா பெரிய கும்பிடு போட்டான்.

நர்மதா பதிவு செய்யும் புஸ்தகத்தை எடுத்துப் பிரித்தாள்.

''உங்க வீட்டுக்காரர் பெயர் என்ன?'' என்று விசாரித்தபடி எழுதத் தொடங்கினாள்.



நர்ஸிங் ஹோம் வாசலில் பெரிய கார் ஒன்று வந்து நின்றது.

அந்தக் காரும் அதிலிருந்து இறங்கிய நபரும் நர்மதாவிற்குப் பழக்கப்பட்டவர்கள் தான். அவர்தான் முகுந்தன். அவள் தம் பிக்காகச் சிபாரிசு செய்யும் பெரிய புள்ளி. பிரசவத்திற்குச் சேர்க்க வந்திருப்பது அவர் மூத்த மகளை. முதல் பிரசவம்.

நர்மதா எழுந்து அவரை வரவேற்றாள்.

அவர் சொன்ன விவரங்களைப் பதிவேட்டில் குறித்துக் கொண்டாள். மணி அடித்து நர்ஸுகளை வரவழைத்தாள். அந்தப் பெண் காலியாக இருந்த ஒரே ஒரு இடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டாள்.

பின்னர்தான் கங்கையாவின் ஞாபகம் நர்மதாவிற்கு வந்தது.

''அடடா! இப்போது என்ன செய்யட்டும்? இடம் இல்லையே!'' என்றாள்.

''பார்த்துக் கொடுங்க அம்மா! கட்டில் வேண்டாம். அறை வேண்டாம்! ஏதாவது ஒரு மூலையில்....''


அப்படி அனுமதிப்பதற்கு அங்கே வழி



டான்டெக்ஸ்®

எகானமி

சிறப்புத்தரம்... உங்களுக்கு ஏற்ற விலையில்



ImageadsM - 1797 Tam

இல்லே. யாராக இருந்தாலும் ஒரே மாதிரிக் கவனிப்புத்தான்.

கங்கையாவின் மனைவி துடித்துக் கொண்டிருந்தாள்.

''நேரத்தை வீணுக்காமல் வேறு எங்கேயாவது கூட்டிப் போ!'' என்முன் நர்மதா. கங்கையாவிற்குச் சற்றுக் கோபம் வந்தது.

''என்னங்க அம்மா! முன்னுலே வந்தது நாங்க.... அப்புறம் வந்தவங்களேச் சேர்த்துக் கிட்டீங்க. என்னேப் போகச் சொல்றீங்க!''

இக்கட்டான கேள்விதான். இந்தக் கங்கையா புகார் எழுதிப் போட்டால் ஏகப்பட்ட கேள்விகள் கேட்பார்கள்... விசாரணை நடக்கும்.

''நான் என்ன செய்யட்டும்? கங்கையா! அவர்கள் டெலிபோன் செய்துவிட்டு வந்தார்கள்... இதோ குறித்து வைத்திருக்கிறேன் பார்!'' என்று ஆங்கிலத்தில் எழுதிய எதையோ காண்பித்தாள்.

அந்த ஏழை — சூது தெரியாத மனம் — நம்பினுன். தன் மனேவியை மீண்டும் ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு பெரிய ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டான்.

* * * * *

நர்மதா கங்கைய்யாவை மறுபடி ஒரு மாதத்திற்குப் பிறகுதான் பார்த்தாள்.

''என்ன கங்கைய்யா? என்ன குழந்தை?'' என விசாரித்தாள்.

அவன் கண் கலங்கினுன். ''இல்லீங்க அம்மா... எனக்குக் கொடுப்பினே இல்லே. அவளுக்கு ஜன்னி கண்டு போயிட்டா... குழந்தையும் தக்கலே!'' என்முன்.

நர்மதாவிற்குச் 'சுருக்' எனக் குத்தியது. நியாயமாக அந்தப் பெண்தானே சேர்க்கப் பட்டிருக்க வேண்டும்? சேர்க்கப்பட்டிருந்தால் பிழைத்திருப்பாளோ? 'போக வேண்டியது அவள் விதி. எங்கு சேர்த்திருந்தாலும் போயிருப்பாள்!' என்று மனத்தைத் திடப் படுத்திக் கொண்டாள்.

* * * * *

இன்னுமொரு மாதம்.

நர்மதாவிற்கு ஒரு தந்தி வந்தது. அவள் தம்பிதான் அடித்திருந்தான். ''அம்மாவிற்கு அபாயம்—உடன் புறப்படு!'' என்பது அதன் வாசகம்.

நர்மதா ரயில்வே ஸ்டேஷனுக்கு விரைந்தாள்,

எல்லா ரயில்களிலும் இடம் இல்லே. பாண்டியனில் மட்டும் ஓர் இடம் காலி.

அவசரம் அவசரமாக விண்ணப்பத்தை எழுதி நீட்டினுள்.

அந்தக்குமாஸ்தா அவள் விண்ணப்பத்தை வாங்குவதற்கும் உள்ளே வேறு ஒருவர் வருவதற்கும் சரியாக இருந்தது.



அர்த்தமுள்ள கோபம்!

போட்டி: 17

கோபப்படுவது மனித இயல்பு. தனி நபர் என்றில்லே, மக்கள் மீது, சமுதாயத்தின் மீது, அரசியல்வாதிகள் மீது கோபம் வரத்தான் செய்கிறது. உங்களுக்கு ஏற்பட்ட அர்த்தமுள்ள கோபத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டு சூடு தணியுங்களேன்! இடம் வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்பவும். பிரசுரமானுல் பரிசு. தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் விலே யுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ்! உறையின் மீது ''அர்த்தமுள்ள கோபம்'' என்று அவசியம் குறிப்பிடவும்.

முடிவு*தேதி: 9.9.85

இன்னும் 36 வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் பரிசுகளாக வழங்கப்படக் காத்திருக்கின்றன. வாரம் தவருமல் போட்டிகளில் பங்கேற்று ஒன்றைத் தட்டிச் செல்ல முயற்சி செய்யுங்கள்!

என் பெயர்: ....
விலாசம்: ....
....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்



மிகப் புதியதான காஸ்கட்
ரிலீஸ் ஸிஸ்டம்
MAJESTIC
இந்தியாவின் 100% பாதுகாப்பான பிரஷர் குக்கரை உருவாக்குகிறது
உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.
உணவின் மணமும், ருசியும் மாறாமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாதுகாக்கப்படுகிறது.
3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் சில்வரில் கிடைக்கின்றன.
MAJESTIC
PRESSURE COOKER
G.R. System
எங்கள் மற்றைய பிரபலமான விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.
IS:1660
ISI
19000
ரைஸ் குக்கர், மில்க் பாய்லர் இட்லி குக்கர் பிரஷர் பான்
DISTRIBUTORS FOR TAMILNADU
Naik BROTHERS
56, Purushwalkam High Road, 1st floor, MADRAS-7 Phone: 662965 661034

அந்த நபர் கொடுத்த விண்ணப்பத்தை வாங்கிப் பதிவு செய்தார் குமாஸ்தா.

நர்மதா கொடுத்த விண்ணப்பத்தைத் திருப்பி "ஸாரி மேடம்! இடமில்லே!" என்றார்.

நர்மதாவிற்குக் கோபம் வந்தது.

"நான்தானே முதலில் வந்தேன்.... எனக்கில்லாமல்...."

"இவர் என்னிடம் முன்னாடியே டெலிபோனில் கேட்டிருந்தார். தனியாகக் குறித்து வைத்திருந்தேன். எக்ஸ்கியூஸ் மீ!" என்றார் அந்தக் குமாஸ்தா.

நர்மதாவிற்கு உறைத்தது. தெய்வம் எப்படிப் பழி வாங்குகிறது?

நர்மதா வெளியே நடந்தாள்... இனி ஏதாவது பஸ்ஸைப் பிடித்து எப்படியாவது போக வேண்டுமே...

"கும்பிடறேன், டாக்டரம்மா!" — கங்கையாவின் பரிச்சயமான குரல்.

அவனைப் பற்றி நினைத்ததும், அவன் அங்கே வந்ததும் பெரிய அதிர்ச்சி. நர்மதா அதை வெளிக்காட்டாமல் மெலிதாகப் புன்னகை புரிந்தாள்.

"எங்க ஆபீஸ் மானேஜர் வீட்டு அம்மா ஊருக்குப் போக வாங்கின டிக்கெட். அவுங்க போகலேயாம். இருப்பிக் கொடுத்துப் பணம் வாங்கிக்கிட்டு வரச் சொன்னாங்க! எங்கேம்மா போய்க் கேட்கணும்?"

நர்மதா அந்த டிக்கெட்டை வாங்கிப் பார்த்தாள். அன்று பாண்டியனில் அவள் போக வேண்டிய ஊருக்கு ஒரு டிக்கெட். அந்தப் பெண் வயதும் நர்மதாவின் வயதும் கிட்டத்தட்ட ஒன்றே. அந்த டிக்கெட்டை அவள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

"நீ எங்கேயும் போக வேண்டாம். நானே வாங்கிக் கொள்கிறேன்!" என்று அவன் கரங்களில் ஐம்பது ரூபாய் நோட்டைத் திணித்தாள்.

தர்மம் என்பது கண்ணுக்குத் தெரியாத கோடுதான். கடக்கும்போது பின் விளைவுகள் தெரிய நியாயம் இல்லே. நர்மதா தன் வாழ்நாளில் அந்தக் கோட்டைத் தாண்ட மாட்டாள்.

ஸ்பாட் லைட்



என்னைப் பார்த்துச் சும்மா கத்தாதீர்கள். எனக்கும் உங்களை (இ. காங்கிரஸ் எம். பிக்கள்.)ப் பார்த்துச் சத்தம் போடத் தெரியும்!

—ராஜ்ய சபையில் ஜெயலலிதா.

'புதிய சிந்தனைகள்' என்ற நூலை எழுதியதற்காக ஆர். எம். வீரப்பன் அவர்களுக்கு டாக்டர் பட்டம் கிடைக்க வேண்டும்.

—ம. பொ. சி.

'ஙகொப்புரான சத்தியமா' தமிழக ஆட்சியைப் பிடித்துக் காங்கிரஸிடம் தருவேன்.

—சிவாஜி கணேசன்.

டெலிபோனில் ஒருவர் பேசுவதை ஒட்டுக் கேட்பதோ, அதை ஒலிப்பதிவு செய்வதோ சட்டப்படி குற்றம். இப்படிச் செய்வது புளூ பிலிம் எடுத்து மிரட்டுவதற்கு ஒப்பாகும். இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய — மாநில அரசுகளின் பொறுப்பாகும்.

—சபாநாயகர் பி. ஹெச். பாண்டியன்.

டேப்பில் பதிவு செய்வது குற்றமென்றால் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அடிக்கடி தி. மு. கழகத் தலைவர்களையும், மற்றவர்களையும் பற்றிப் பேசும்போது, 'டேப் என்னிடமிருக்கிறது' என்று கூறுவாரே, அப்படிக் கூறிய எம். ஜி. ஆர். மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சபாநாயகர் நினைக்கிறாரோ? அவர் விருப்பப்படி எம். ஜி. ஆர். மீதும் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமென்று நம்புகிறேன்.

—சோ.

அமைச்சரை 'மடக்க' ஐம்பது பேர்!

பத்மவியூகா

* பெங்களூர் டீ. வி. யில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி. 'பத்ம வியூகா'. மாதம் ஒருமுறை கர்நாடக அமைச்சர் யாராவது ஒருவர் பொது மக்களின் கேள்விகளைப் பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்பது ஐம்பது பிரதிநிதிகளுடன் உரையாடுகிறார். அர்ஜுனன் பத்ம வியூகத்திலிருந்து தப்பி வெளியே வந்த சாகசத்தை நினைவூட்டுகிற மாதிரி இந்த நிகழ்ச்சிக்கும் 'பத்மவியூகா' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்!



இலவசப் பயணம்

* பன்னிரண்டு வயது வரையிலான எல்லாப் பள்ளிக் குழந்தைகளுக்கும் பஸ் கட்டணம் இலவசம். இரண்டு ரூபாய் விலையில் குழந்தைகளின் படம் ஒட்டி 'இலவசம்' என்று முத்திரையிட்ட அடையாள அட்டை வழங்குகிறார்கள். பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு, சலுகைக் கட்டணம். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆறு ரூபாய் மட்டுமே செலுத்த வேண்டும்.



கத்தரிக்காய் நன்கொடை


* காபிடேஷன் கட்டணமோ வேறு எந்த நன்கொடையோ பள்ளி, கல்லூரிகளில் வசூலிக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்தது கர்நாடக அரசு. கல்விக்கூடத்துப் பேர்வழிகள் நீதிமன்றம் போய் 'ஸ்டே' வாங்கி விட்டார்கள். கட்டட நன்கொடை கத்தரிக்காய்நன்கொடைஎன்றுரசீதுதந்தோ, தராமலோ 'தாராளமாக' வசூல் நடக்கிறது. ஐயாயிரம் ரூபாய் வாங்குகிற பள்ளிகள் உண்டு.

சுடுகாட்டுப் பூ

* அண்மையில் காலமான பிரபல திரைப் பட இயக்குநர் புட்டண்ணா கணகால் எடுத்த 'ஸ்மஸானத ஹூவு' - "சுடு காட்டுப் பூ" என்ற இந்தப் படம் இன்னும் முடிவடையவில்லை.

சென்ஸார் வெட்டு!

* நம்முடைய சுஜாதா எழுதிய இருபத்து நாலு ரூபாய்த் தீவு கதையைக் கன்னடத்தில் படமாக்கினார்கள். 'ஒண்டித் வனி' என்கிற தலைப்பில் வெளியான இந்தப் படம் சீக்கிரமே காணாமல் போய் விட்டது. இத்தனைக்கும் பிரபல இயக்குநர் டி. எஸ். நாகாபரணா இயக்கிய படம். தோல்விக்குக் காரணம் அபரிமிதமான சென்ஸார் வெட்டு. இதே



நாகாபரணா எடுத்த ஆர். கே. நாராயணனின் 'பைனான்ஷியல் எக்ஸ்பர்ட்' கன்னடத்தில் 'பாங்கர் மார்கய்யா'வாக வந்து போடு போடு என்று போட்டது.

ஹிந்திப் படங்களுக்கு ஆதரவு

* கன்னட மொழிப் படங்கள் எல்லாமே ஐம்பது சதவீதம் வரி விலக்குப் பெறுகின்றன. கூர்கி, கொங்கணி மொழிகளில் தயாரான ஒன்றிரண்டு படங்கள் உட்படக் கன்னடப் படங்கள் தயாரிப்புக்கு அரசு உதவித் தொகை தருகிறது. கன்னடப் படங்களும் உயர்வான தரமுடையனவாகவே வருகின்றன. இருந்தாலும் ஹிந்திப் படங்களுக்கே அமோகமான மக்கள் வரவேற்பு இருக்கிறது.

வித்தியாச முதல்வர்

* ஹெக்டே ஒவ்வொரு ஆண்டும் பிரபல இலக்கியவாதியான மாஸ்தியின் இல்லத்


துக்கு நேரே சென்று, அவருடைய பிறந்த நாளின் போது மாலை அணிவித்து வாழ்த்துப் பெற்று வருகிறார். இதேபோல், பல துறை அறிஞர்களின் பிறந்த நாட்களை மறவாமல் வாழ்த்து அனுப்பியோ, மலர்க் கொத்து அனுப்பியோ தம்மை ஒரு வித்தியாசமான முதலமைச்சராக நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்.

மயன் மாளிகை

* விதான் சௌதா — சட்டமன்றக் கட்டிடம், தலைமைச் செயலகம் எல்லாம் இதில்தான். மயன் மாளிகை என்கிற கற்பனையை நிஜமாக்கிவிடும் அற்புதம் இது! ஒரு தும்பு தூசு இல்லாமல் பராமரிக்கிறார்கள்.

கன்னடம் தெரியுமா?

* விதான் சௌதாவுக்குள் நுழைய வேண்டுமானால் கன்னட மொழியைப் படிக்கத் தெரிந்திருந்தால் தப்பினீர்கள். இல்லாவிட்டால் எதுஎது எந்த அமைச்சர் அறை,எந்தத்துறை என்று உங்களால்படித்துத்தெரிந்துகொள்ள முடியாது. எல்லா அறிவிப்பும் கன்னட மொழியில்.



மகேசன் தொண்டு!

* 'Government Service Is Gods Service' —இப்படியொரு வாசகம் மட்டும் (ஆங்கிலத்தில்) விதான் சௌதா முகப்பில் உள்ளது. தமிழ் நாட்டில் கூட 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று ஒரு காலத்தில் பேசப்பட்டது நினைவு வரும்.

கியூவே கிடையாது!


* 'க்யூ'வே இல்லாத இடம் ரேஷன் கடை! எல்லாப் பொருள்களுமே வெகு தாராளமாகக் கிடைக்கின்றன. ஒரு ரேஷன் கடைக்கு நானூறு கார்டுகள்தான் என்கிற மாதிரி குறைத்து விட்டார்கள்.

கூச்சமற்ற பெண்கள்

* பெங்களூர் நகர பஸ்களில் 'பெண்கள்' என்று எழுதப்பட்ட இடங்களில் ஒன்றும் கட்டுப்பாடு இல்லை. யார் வேண்டுமானாலும் அமர்ந்து கொள்வார்கள். உங்கள் பக்கத்தில் ஓர் இடம் காலியாக இருந்தால் எந்தப் பெண்ணாவது வந்து அமர்ந்து கொள்வார், கூச்சப்படமாட்டார்.

இனிய காட்சி

* ஹூப்ளி, கார்வார், பெல்காம் பக்கங்களில் காலை நேரங்களில் கண்ணுக்கு மிகவும் இனிமையான காட்சி: அழகான குதிரை



வண்டிகளில் முன்னும் பின்னும் இரண்டிரண்டு வரிசைகளில் நண்டும் சிண்டுமாகக் குழந்தை மலர்கள் கம்பீரமாக அமர்ந்து பள்ளிக்கூடம் போவது.

அது 'பெல்காம்' இல்லை!


* நாமெல்லாம் பெல்காம் என்று சொல்



கிற ஊரின் பெயரை கன்னட மொழிக்காரர்கள் 'பௌகாம்' என்றுதான் உச்சரிக்கிறார்கள்.

தொகுப்பு: **யெஸ்பால்.**

ரேஷன் கடையில் கியூ இல்லை!



இப்போது!
கோயம்புத்தூர்,
சென்னை வாசிகளுக்கு
ஓர் நிம்மதியான செய்தி
சக்தி ஃபைனான்ஸ்
அளிக்கும்
பாதுகாப்புப் பெட்டக
வசதி
உங்கள் பெருமதிப்புள்ள பொருட்கள்
வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்க
ஏர்-கண்டிஷன் வசதியோடு பாதுகாப்புப்
பெட்டகங்களை தமது, கோயம்புத்தூர்
(டி.பி. ரோடு, ஆர்.எஸ். புரம்) சென்னை
(தி.நகர்) கிளையிலும் அமைத்துள்ளது
— சக்தி ஃபைனான்ஸ்
விவரங்களுக்கு :
சக்தி ஃபைனான்ஸ்
லிமிடெட்
475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641 018.
டி. பி. ரோடு, ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-641 002.
76, தியாகராயா சாலை, தி. நகர், சென்னை-600 017.
சக்தி - உங்கள் நலனையே தனதென போற்றிப் பேணி
வரும் நிதி நிறுவனம்!

ரொம்பத்தான் துணிச்சல் நந்தினிக்கு!



ஒரு காலில் வெள்ளை ஷூ. இன்னொரு காலில் சிவப்பு ஷூ. கிழே சூரிதாரின் டைட்டான பாட்டம். மேலே ஒரு கையை முழுசாயும் மற்றதை மடக்கி விட்டுக் கொண்டும் சட்டை; காலில் அணிந்து கொள்கிற ஸ்டாக்கிங்ஸ் தலைமுடியில். தலையில் வைத்துக் கொள்கிற கிளிப் கைகளில்; தடிதடியாய் இரண்டு வளையல்கள்; கழுத்தில் அடுக்கடுக்காய் மணிகள், சங்கிலிகள்; பின்களைக் கோத்துத் தலையிலிருந்து காது வரை மாட்டல்; இதெல்லாம் போதாதென்று முகத்தில் ஒரு பாதியில் மட்டும் அப்பிவிட்ட பவுடர். மேல் உதட்டிலும் கிழ் உதட்டிலும் பாதிக்கு மட்டும் லிப்ஸ்டிக்; கன்னங்களில் உதட்டுச் சாயப் பட்டைகள். பெரிசாய்க் கறுப்புக் கண்ணாடி.

மொத்தத்தில் பார்த்தால் சென்னை பத்திலிருந்து தப்பித்து வந்துவிட்ட கேஸ் போன்ற தோற்றம்.

இப்படித்தான் அன்று காலேஜுக்கு வந்தார் மிஸ். நந்தினி சேதுராமன். கல்லூரியில் சிநேகிதிகளுடன் ஜாலியாய் அரட்டை அடித்துக் கொண்டிருந்த போது, 'காலேஜுக்கு சும்மா வந்து க்ளாஸ் அட்டெண்ட் பண்ணிவிட்டுப் போவதில் ஒரு த்ரில்லே இல்லேப்பா' என்று யாரோ ஆரம்பிக்க, என்ன செய்யலாம் என்பது பற்றி சீரியஸாய்ப் பேச, கடைசியாய், 'மிகவும் வித்தியாசமாய் டிரஸ் செய்து கொண்டு காலேஜ் வர முடியுமா?' என்ற கேள்வி எழ, 'ஓ.கே. நான் வருகிறேன்' என்று கட்டை விரலை உயர்த்தினார் நந்தினி. கூடவே சேர்ந்து கொண்டார் ஸ்ரீலதா. மறுநாள் இவர்கள் இப்படி வரப் போவது பற்றி இந்தச் சில சிநேகிதிகளைத் தவிர காலேஜில் வேறு ஒருவருக்கும் தெரியாது.

நந்தினி சொன்னார்: ''நந்தனத்தில் உள்ள வீட்டிலிருந்து அடையாறு கேட் ஹோட்டல் வரை நடந்து போகும் போது எல்லோரும் ஒரு மாதிரியாய்ப் பார்த்தனர். ஸ்கூல் போகிற சின்னக் குழந்தைகள் ''ஏய்! அந்த அக்காவைப் பாரேன்!'' என்றார்கள். மெலிதாய்ச் சிரித்தார்கள். 23— பஸ்ஸில் ஏறினதும் நீட்டிய சீசன் டிக்கெட்டைப் பஞ்ச் பண்ணவும் மறந்து கண்டக்டர் ஆச்சர்யமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். பஸ்ஸில் எல்லோரும் அருகிலிருந்த நண்பர்களிடம் கிசுகிசுத்தனர். ஒரு லேடி, ''என்ன, காலேஜில் மாறுவேடப் போட்டியா?'' என்று கேட்டார். பஸ்ஸை விட்டு இறங்கினவர்கள் கூட ஒரு முறை ஜன்னல் வழியே என்னைப் பார்த்து விட்டுப் போனார்கள். நானும் எல்லாவற்றையும் கூலாகவே எடுத்துக் கொண்டேன்.

''நான் காலேஜ் போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஸ்ரீலதாவும் வந்துவிட்டாள். வீட்டிலிருந்து நேராக காலேஜுக்கு அவள் காரில் வந்ததால் அவளுக்கு, என் அனுபவங்கள் ஏற்படவில்லை.''



அலங்கோலமாகக் கல்லூரி சென்று பரபரப்பு ஏற்படுத்திய மாணவிகள் — ஸ்ரீலதா; நந்தினி.

அன்று முழுவதும் காலேஜில் இவர்கள் செய்கைதான் பரபரப்பாய்ப் பேசப்பட்டது. தோழிகள் சூசன், ரூபா நாயர் இருவருடன் இவர்கள் கல்லூரியைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். சில நூறு தடவைகளாவது, 'என்ன இப்படி?' என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தாலும், அதுவும் ஜாலியாய்த்தான் இருந்தது. கூடவே காமிரா கொண்டு போய் நிறைய போட்டோக்கள் எடுத்துக் கொண்டனர்.

லெக்சரர்கள் சிலர் ஸ்டாஃப் ரூமில், ''இந்தப் பெண்கள் என்ன இப்படி வந்திருக்கிறார்களே?'' என்று பேசிக் கொண்டாலும், வேறு சிலர் ஸ்போர்டிவாய் எடுத்துக் கொண்டார்கள். எப்போதும் சீரியஸான ஒரு லெக்சரர், வகுப்பில் நுழைந்து இவர்களைப் பார்த்ததும் சிரிப்பு வந்தாலும் அதை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டது நன்றாகத் தெரிந்தது.

நந்தினியின் பெற்றோர்கள் ஜாம்பியாவில் இருக்கிறார்கள். நந்தினியின் பாட்டி, நந்தினியின் உடை அலங்காரத்தை ரொம்ப ரசித்துவிட்டு, 'ஃபேன்ஸி டிரஸ் காம்படிஷன் வெச்சா முதல் பிரைஸ் உனக்குத்தான்' என்றார்.

இவர்கள் எந்தக் கல்லூரி என்கிறீர்களா? நான் படிக்கிற கல்லூரிதான். நான் எந்தக் கல்லூரி தெரியுமா? நந்தினியும், ஸ்ரீலதாவும் படிக்கிற கல்லூரிதான்!

— உஷா மூர்த்தி.

* படத்தில் நந்தினி; போட்டோ: தாமு.

காலையில் உங்களுக்கு புத்துணர்ச்சி கொடுக்க ஒரு புது முறையின் அறிமுகம்...



ட்ரஸ்ட்

ஒரு புதிய பற்பசை
உங்களுக்கு புத்துணர்ச்சியும், உறுதி கொண்ட புன்சிரிப்பும் கொடுக்க.

காலை கதிரவனின் புத்துணர்ச்சியைப் போன்ற
புன்சிரிப்புடன் உங்கள் நன்னாட்களை
ஆரம்பியுங்கள். உங்கள் பற்களை
ட்ரஸ்ட் (மார்னிங்) பற்பசையினால்
துலக்குங்கள். ட்ரஸ்ட் பற்பசையில
அடங்கியுள்ள வீரியமான
கலவைப் பொருட்கள் உங்கள்





பற்களை முற்றிலும் சுத்தப்படுத்தி,
பளிச்சிட்டுப் பிரகாசிக்க செய்கின்றன
ட்ரஸ்ட் பற்பசையில் அடங்கியுள்ள
அபூர்வமான இனிய வாசம் வாயில்
துர்நாற்றத்தைப் போக்கி, உங்கள் சுவாசத்தை
குளிர்ச்சியுடனும், புத்துணர்ச்சியுடனும் மிளிரச்
செய்கின்றது. ட்ரஸ்ட்டுடன் பல் துலக்கும்
நற்பழக்கத்தை உடன் கொள்ளுங்கள்.

ட்ரஸ்ட்...ஒரு விசேஷமான பற்பசை.

பற்களை பாதுகாக்க ஒரு நற்பழக்கத்தின் அறிமுகம்...



ட்ரஸ்ட்

பற்சிதைவு உண்டாக்கும் கிருமிகளிடமிருந்து இரவு முழுவதும் உங்கள் பற்களை பாதுகாக்க ஒரு விசேஷமான பற்பசை.

நீங்கள் உறங்கும்பொழுது உங்கள் பற்களினிடையே சிக்கி இருக்கும் உணவுப் பண்டங்களின் மீதங்கள் வாய் கிருமிகளை பெருகச் செய்து 'ப்ளாக்' என்ற மெல்லிய மேற்பூச்சை படரச் செய்கின்றன. அதிலிருந்து சில அமிலங்கள் உண்டாகி பற்சிதைவு, பற்குழிகள் ஏற்படுத்துகின்றன.

உங்கள் பற்களைப் பாதுகாக்க இரவில் உறங்கு முன் ட்ரஸ்ட் (நைட்) பற்பசையினால் பல் துலக்குங்கள்



அதில் இருக்கும் ஒரு பிரத்தியேக கலவைப் பொருள் பல மணி நேரம் வாயில் தங்கி பற்களைக் கெடுக்கும் கிருமிகளை கொல்லுகின்றது. ட்ரஸ்ட் (நைட்) மூலம் இரவில் பல் துலக்கும் பழக்கத்தை உடன் மேற்கொள்ளுங்கள் – உங்கள் பற்களின் ஆரோக்கியத்திற்காக.

ட்ரஸ்ட்... ஒரு விசேஷமான பற்பசை.

A PASSAGE TO INDIA



'காந்தி'க்குப் பிறகு, இந்தியாவை மறுபடி மேற்கே அறிமுகப்படுத்தும் அற்புத முயற்சி என்று சுருக்கமான விமர்சனம் எழுதிவிடலாம். டேவிட் லீனுக்கு முதலில் பாராட்டுக்கள்....

அமெரிக்க ஆங்கிலம் போலன்றி பிரிட்டிஷ் ஆங்கிலம் நமக்கு எளிதில் புரிவது கூடுதல் வசதி.

டாக்டர் அஸீஸ் ஓர் அப்பாவி. இந்தியாவுக்கு வந்திருக்கும் மிஸஸ் மூர், மிஸ் அடெலா இருவரையும் மாரபார் குகைகளுக்கு அழைத்துப் போய்விட்டு, மிஸ் அடெலாவிடம் 'தப்பாக நடந்து கொண்டார் என்ற பழிக்கு ஆளாகி, கைதாகி, சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, எப்படி மாறிவிடுகிறார்! விடுதலையான பின் 'நீங்கள்—ஆங்கிலேயர்கள்—எல்லாம் ஒரே மாதிரிதான்! உங்கள் சகவாசமே வேண்டாம்!' என்று பேராசிரிய நண்பர் ஃபீல்டிங்கிடம் சீறித்துடிக்கிறாரே! விக்டர் பானர்ஜிக்கு டாக்டர் அஸீஸ் பாத்திரம் கச்சிதமாய்ப் பொருந்துகிறது. (ஆனால் அப்பாவி என்பதற்காக ஆரம்பத்தில் அத்தனை கோமாளித்தனமாக இருக்க வேண்டுமா?)

மைதுனச் சிற்பங்களைத் தன்னந்தனியே, பசுமையான வயல்கள் வழியாகப் போய்ப் பார்த்துவிட்டு, குரங்குகள் துரத்த, சைக்கிளில் திரும்பும் போதாகட்டும்; மாரபார் குகைகள் ஒன்றில், அஸீஸ் வருமுன் நுழைந்து அவர் தேடத் தேட.. தீக்குச்சியை உரசிவிட்டு, அந்த அரையிருட்டில் ஒரு கணம் மனக் குழம்பிப்போய், அடித்துப் பிடித்துக் கொண்டு பீதியுடன் ஓடி வருவதிலாகட்டும்; அஸீஸ் மீது அபாண்டமாகச் சுமத்திய பழியை 'வாபஸ் வாங்குகிறேன்' என்று கோர்ட்டில் நிதானமாக, எல்லோரும் அதிர்ச்சியடையச் சொல்லும் போதாகட்டும்—ஜூடி டேவிஸ் நடிப்பு, நடிப்பு மாதிரியா இருக்கிறது? அப்புறம் அவளை அம்போ என்று எல்லோரும்—அவள் வருங்காலக் கணவன் ரோனி (நீகல் ஹேவர்ஸ்) உட்பட—கோர்ட் வாசலிலேயே கொட்டும் மழையில் விட்டுவிட்டுப் போகிறார்களே! எத்தனை உருக்கமாகச் செய்திருக்கிறார்!

புரொபசர் காட்போல் என்று பெயர் வைத்துக் கொண்டு, நெற்றியில் கோபிச் சந்தனம் இட்டுக் கொண்டு எப்பொழுதும் எதையாவது வாயில் போட்டு அரைத்துக் கொண்டு ஒரிந்து தத்துவங்கள் பேசுகிறார் அலெக் கின்னஸ்.

ஸ்ரீநகரையும், பனி படர்ந்த இமாலயத்தை





யும், யானையையும், பொட்டுப்பொட்டென்று கண்ணாடியில் விழுந்து, பெரிதாகக் கொட்டும் மழையையும், ரயில் ஓட்டத்தையும் படம் எடுத்திருக்கிறார்கள். ஃப்ரேமுக்கு ஃப்ரேம் அற்புத ஓவியம் மாதிரி அல்லவா இருக்கிறது!

1924ல் வெளி வந்த (ஈ. எம். ஃபார்ஸ்டரின்) நாவலை, இந்த 1985லும் ரசிக்கும்படியாகப் படமாக்கி, இரண்டு ஆஸ்கார் பரிசுகளையும் தட்டிக் கொண்டு விட்டார்கள். படமெடுத்த ஆற்றல் ஒருபுறமிருக்க, அதிலுள்ள ஆங்கிலேயரைப் பற்றிய சுய விமர்சனத்துக்கு அஞ்சாத போக்கையும் பாராட்டுகிறோம்.

— சாருகேசி.

குடிகார கமலஹாசன் சீட்டும் கையுமாக சவால் விடும்போதே, 'இதோ ஸ்டண்ட் ஸீன்', 'இதோ ஸ்டண்ட் ஸீன்' என்று பராக் சொல்லிவிடுகிறார்கள். அப்படித் தொடங்கும் படம் இடைவேளை வரை காதல், நட்பு, பாசம், நேசம், வீரம், ஹாஸ்யம் என்று ஒரே ரஸக்கலவையாகத்தான் பிய்த்துக் கொண்டு ஓடுகிறது, ரேஸ் குதிரை கணக்காக.

கமலஹாஸன் ஹாஸ்யம் முயன்றிருக்கிறார். ஹெ, ஹெ, ஹே என்று முதலில் சிரிக்கும்போது வித்தியாசம். இரண்டாவது முறை பரவாயில்லை. அப்புறம் அப்புறம் என்று அடுத்தடுத்து அவர் அப்படியே சிரிப்பது அலுப்பு.

ராதாரவிக்கு சரியான பச்சோந்தி வேஷம். ஒரு நிமிஷம் உத்தம சிகாமணி. அடுத்த நிமிஷம் கூட இருந்தே குழி பறிக்கும் வில்லன். அதற்கடுத்த நிமிஷம் சப்ஜாடாய் பல்டியடித்து மறுபடி உத்தமசிகாமணி.

அம்பிகா என்ன சாதித்து இருக்கிறார் என்று கேட்டால் — அம்பேல்!

கமலஹாஸன் படம் முழுக்க பாட்டிலும், சிகரெட்டும், சீட்டுமாய் ஓடியாடுவது உறுத்தல். அவரைத் திருத்த அம்பிகா முனைவது வசந்த மாளிகையை நினைக்க வைக்கிறது. அவ்வளவுக்கா கதைப் பஞ்சம்?

பப்பர, பப்பர என்று ஒருபாட்டு. தகஜூம் தகஜூம் என்று ஒரு பாட்டு. இளையராஜா கஜகர்ணம் போட்டெல்லாம் பாட்டுக்கு இசை அமைத்திருக்கிறார். ஆனால் பாருங்கள் — சத்தான, முத்தான கதை இருந்தால் தானே பாட்டெல்லாம் எடுபடும்.

இடைவேளைக்கு அப்புறம், ஏழை கமல். ஆட்டோ சேஸ் அட்டகாசம்! படப்பிடிப்பை இந்த இடத்திற்காக மெச்சிக் கொள்ளலாம்.

கண்ணீர், கைகலப்பு என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் கலந்து கட்டியதில் — மொத்தக் கல்யாணச் சாப்பாட்டையும் ஒன்றாகக் கலந்து கவளம் கவளமாய் கையில் போடுகிறாற்போல் இருக்கிறது.

— ஜெயமன்மதன்.

உயர்ந்த உள்ளம்

தன்னிகரில்லாப் பொன்னகராம்
புதுவை சுற்றுலாப் பயணிகளுக்கு
ஒரு சொர்க்க பூமி

* சென்னையிலிருந்து தெற்கே 160 கி. மீ. தொலைவில் உள்ள புதுவை என்றும் பண்பாட்டு வளங் கொழிக்கும் பொன்னகரம். பிரெஞ்சுப் பண்பாட்டின் அழியாச் சின்னம்.

* ஆன்மீகப் பெருஞ்சுடர் ஸ்ரீ அரவிந்தர் இணையற்ற கவிஞர்கள். மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மற்றும் தத்துவ ஞானிகளை வளர்த்த புதுவை ஓர் அமைதியின் சின்னம்.

* புதுமைப் பொலிவோடு வளர்ந்து வரும் ''ஆரோ''வில் மனிதனின் ஆன்மீக வளர்ச்சியைத் தூண்டக் கூடிய ஓர் உதய நகரம்.

* வேதப் புகழ் பாடி வந்து தவழும் வளம்சார் கடலலைகளைக் கொண்ட புதுவை, நாள் தோறும் சுற்றுலாப் பயணிகளைத் தன்பால் கவர்ந்தீர்க்கும் ஒரு சுந்தர பூமி.

* புதுவையில் உல்லாசப் பயணிகள் குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன் தங்கக் கூடிய சுற்றுலா இல்லங்கள் மற்றும் சுற்றுலாக் குழு மையங்கள்.

* சோலை நகரில் அமைந்துள்ள இளைஞர் விடுதி இளைஞர்களுக்கேற்ற ஒரு கடற்கரைக் கனவுச் சோலை.

* எழில் கொஞ்சும் சோலைகளைக் கொண்ட சுற்றுலாப் பகுதிகளைக் கண்டு மகிழ குறைந்த கட்டணத்தில் ஒரு சிறிய சுற்றுலாப் பேருந்து ஆகிய பல சுற்றுலா வசதிகளுடன் உங்களை மகிழ்வோடு அழைக்கிறது இந்த சொர்க்க பூமி.

தங்கும் வசதி மற்றும் பிற விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

இயக்குநர்,
செய்தி, விளம்பரம் மற்றும் சுற்றுலா இயக்ககம்,
19, குபேர் சாலை,
புதுவை—605 001.
தொலைபேசி எண்: 4398, 4575, 4278.

வெளியீடு: செய்தி, விளம்பரம் மற்றும் சுற்றுலா இயக்ககம், புதுவை அரசு.

இது இருதய நோய்க்கான அறுவைச் சிகிச்சையில் அதிசயமான புதிய திருப்பம்! பாரதத்தில் நடந்த முதல் பலூன் சிகிச்சை!

மே 17 ல் ஹைதராபாத் நிஜாம் ஆஸ்பத்திரியில் 4வது வார்டில், 17 வது கட்டிலருகே ஒரு ஸ்டூலில் அமர்ந்திருந்த, பாலையா திடீரென்று மார்பைத் தடவிக் கொண்டார். எங்கோ ஆழமாக வலி! இதய சிகிச்சை பெறும் தனது உறவினர் ஒருவருக்கு உதவிக்காக கரிம்நகரிலிருந்து வந்திருந்தார் பாலையா. 'என்னடா இது, உதவ வந்த இடத்தில் உபத்திரவமா?' என்று அவர் மலைத்தபோது, பரிசோதித்த டாக்டர் அவருக்கு 'இருதயத் தாக்குதல்' என்று கூறினார். அவசரமாக ஐ ஸி ஸி வார்டில் சேர்க்கப்பட்டார். அங்கு எலக்ட்ரானிக் கருவிகள் அவரது இருதய ஓட்டத்தை அலைகளாய் அளந்தன.

இதயத்திலிருந்து மற்ற அவயவங்களுக்கு ரத்தம் எடுத்துச் செல்லும் நாளங்கள் போல இதயத்தின் தசைகளுக்கு ரத்தம் வழங்கும் ரத்த நாளங்கள் உண்டு. இவற்றை காரோனரி ஆர்ட்டரி என்பர். இதில் ஒன்றில் அடைப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைபட்டிருக்கிறது. இந்தத் தடுப்பை நீக்கி இரத்த ஓட்டத்தைச் சீர் செய்யாவிட்டால் இருதயம் செயலிழக்க, நோயாளி உயிரிழப்பது நிச்சயம்.

டாக்டர் பி. சோமராஜு பாலையாவைப் பரிசோதித்தார். அவர் சமீபத்தில் அமெரிக்கா சென்று பாஸ்டனில் உள்ள ஹார்வேர்டு மெடிக்கல் கல்லூரியில் பலூன் காரோனரி ஆஞ்சியோ பிளாஸ்டி என்ற நூதன மருத்துவ முறையில் ஆறுமாதம் பயிற்சி பெற்றுத் திரும்பியவர். அங்கு பலூன் முறையில் ரத்தக் குழாய் சுத்தப்படுத்தப்படுவதைக் கண்டிருக்கிறார். இம்முறையில் ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக ஆதியில் இத்தகைய சிகிச்சை முறையை தோற்றுவித்த டாக்டர். ANDRE GRUENTIZ ஐ சந்திப்பதற்கு அட்லாண்டா சென்று அவரிடம் நேரில் இந்த டெக்னிக்கைக் கற்றுக் கொண்டார்.

இந்த அனுபவப் பின்னணியில் பாலையாவைப் பரிசோதித்தபோது அவருக்கு பலூன் முறை சிகிச்சைதான் சிறந்தது என முடிவு செய்தார். உடனே காரியங்கள் மளமளவென்று நடைபெற்றன. ஆஸ்பத்திரி தலைமை டாக்டர் வேணுகோபால் நாயுடு தலைமையில் நிபுணர்கள் குழு ஆபரேஷனுக்குத் தயாராகியது.

தொடை அருகிலுள்ள ஒரு ரத்தக் குழாய் மூலம் 100 — 115 செ. மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் குழாயை (CATHETER) செலுத்துகிறார்கள். அந்தக் குழாய் ரத்த நாளத்தில் இரத்தம் உறைந்துள்ள (Clot) இடம் வரை செல்கிறது. பிறகு அந்த பிளாஸ்டிக் ட்யூபின் தலைப் பக்க முனை ஊதப்பட்டுப் பலூன் போல விரிவடைகிறது. அப்போது ரத்த நாளமும் விரிவடைய, அதுவரை இறுக்கமாக அடைத்துக் கொண்டிருக்கும் ரத்தத் திட்டுக்கள் தளர்ந்து கலைகின்றன. மீண்டும்

பலூன் மருத்துவம்



* பாலையாவுடன் டாக்டர்கள் குழு



• டாக்டர் சோமராஜு

ரத்த ஓட்டம் சீராகி இதயம் சரியான முறையில் இயங்க வழி ஏற்படுகிறது. பிறகு நுழைக்கப்பட்ட பிளாஸ்டிக் குழாய் வெளியே எடுக்கப்படுகிறது. இந்த சிகிச்சையின் மூலம் நெஞ்சிலே அறுவை சிகிச்சை தவிர்க்கப்படுகிறது. நேரடியாக இருதயத்தை ஸர்ஜன் அணுக வேண்டிய அவசியமில்லாது போகிறது. தொடை அருகே மரத்துப் போகும் ஊசி போட்டால் போதுமானது. நோயாளி தனக்கு நடைபெறும் ஆபரேஷனை ஒரு டி.வி. மூலம் பார்க்கலாம்! 33 சதம் கேஸ்களில் இந்தச் சிகிச்சை மூலம் குணமளித்துவிடலாம். இது பயன் அளிக்காவிடில் இருதயத்தை நேரடியாக அணுகும் ஓப்பன்—ஹார்ட்—சர்ஜரி அவசியப்படும். என். டி. ஆரும், ஜெயில் சிங்கும் செய்து கொண்ட பை—பாஸ் சர்ஜரி கையாளப்படும்.

இந்த முறையில் காலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ரத்த நாளத்தை இதயத்தின் ரத்த நாளத்தில் அடைப்பு இருக்கும் பகுதிக்கு மேலும் கீழுமாக இணைத்து ரத்தம் பாய ஒரு புதிய பாதையை உருவாக்கி விடுகிறார்கள். நகரின் நெரிசலைத் தவிர்க்க ஒரு பை—பாஸ் சாலை அமைக்கப்படுவது போல்தான் இதுவும்: தத்துவம் எளிதானாலும் ஆபரேஷன் சிக்கலானது. ஆனால் இந்தப் புதிய பலூன் மருத்துவம் மிகவும் எளிது. ஆபத்து குறைவு.

பாலையாவிற்கு பலூன் பிளாஸ்டி சிகிச்சை தர டாக்டர்கள் முடிவு செய்தனர். உடனே QUOKINASE என்ற சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சமய சஞ்சீவி ஒன்றை அவருக்கு ஊசி மூலம் ஏற்றினர். இந்த அபூர்வ இன்ஜக்ஷன் இதயக்குழாய்களில் ஏற்பட்ட இரத்த உறைவை ஓரளவுக்குக் கரைத்து (முழுக்க அல்ல) உயிர்களைக் காப்பாற்றுகிறது. இந்த மருந்து எல்லா ஊர்களிலும் கிடைப்பதில்லை. நிஜாம் ஆஸ்பத்திரியில் ''ஸ்டாக் இல்லை'' என்று பார்மஸிஸ்ட் கையை விரித்தார். டாக்டர் ராஜு கவலையில் ஆழ்ந்தார். ஆபரேஷன் நடந்து முடியும்வரை பாலையா தாங்க வேண்டுமே!

இந்த இக்கட்டான நேரத்தில் பையும் கையுமாக ஒரு மருத்துவ விற்பனைப் பிரதிநிதி வியர்க்க வியர்க்க உள்ளே நுழைந்தார். நல்லவேளையாக அவரிடம் மூன்று பாட்டில்கள் இருந்தன. ஒன்றின் விலை ரூ 600/—. டாக்டர் ராஜு தலைமை டாக்டரை அணுகினார். அவர் ஆஸ்பத்திரி விதிமுறைகளைத் தளர்த்தி உடனே அந்த மருந்துகளை வாங்க ஏற்பாடு செய்தார். டாக்டர் சோமராஜு உடனே பாலையாவிற்கு Quokinase மருந்தை இன்ஜக்ட் செய்தார். உறைந்த ரத்தம் சற்றே கலைந்து பாலையாவிற்குத் தெம்பு அளித்தது. தொடர்ந்து ஆபரேஷன் தியேட்டரில் பலூன் மருத்துவ சிகிச்சை பெற்றார் பாலையா. ரத்த உறைவுத் திட்டுக்கள் நீங்கின. இந்தியாவின் முதல் Anglio Plasty சர்ஜரியை வெற்றிகரமாக முடித்த பெருமிதத்துடன் டாக்டர் சோமராஜு குழு தியேட்டரிலிருந்து மலர்ந்த முகத்துடன் திரும்பினர்.

இதன் பின்னால் இன்னொரு மனிதாபிமானக் கதை இருக்கிறது. டாக்டர் ராஜு பயிற்சி முடிந்து அமெரிக்காவிலிருந்து திரும்பிய போது வட அமெரிக்க தெலுங்குக் கேந்திரம் ஒரு நல்ல காரியம் செய்தது. அதன் தலைவர் டாக்டர் சாந்தி குமார்-காந்தியும் (மகாத்மாவின் கொள்ளுப் பேரன்) இதர உறுப்பினர்களும் சேர்ந்து பாரதத்திற்குப் பேருதவி புரிந்தனர். ஒன்று ரூ 2000/— விலையுள்ள 40 பலூன் குழாய்களை நிஜாம் ஆஸ்பத்திரி இருதய நோயாளிகளுக்குப் பயன்பட அன்பளிப்பாக வழங்கினர்.

அமெரிக்கா சென்று பை—பாஸ் ஆபரேஷன் செய்து கொண்டு திரும்பிய ஆந்திர முதல்வர் இந்த முதல் சாதனையில் பங்கு கொண்ட டாக்டர் குழுவிற்கு அட்வான்ஸ் சம்பள உயர்வு அளித்து ஊக்குவித்து இருக்கிறார்.

''பயனுள்ள இந்த ஆபரேஷனுக்கு எவ்வளவு செலவாகும்?''

''அமெரிக்காவில் ரூ 60,000 ஆகும். பாரதத்தில் தனியார் ஆஸ்பத்திரியில் ரூ 10,000 தேவைப்படும். ஆனால் நிஜாம் மருத்துவ மனையில் பாலையாவிற்கு இந்த சிகிச்சை இலவசமாகவே அளிக்க முடிந்தது'' என்கிறார் டாக்டர் சோமராஜு.

— சுபஸ்ரீ.

மேல் அட்டையில்:

மேலே:
மைசூர் சாமுண்டீசுவரி குன்றில் நந்தி; மகிஷாசுரன்.
வண்ணப் படங்கள்: உத்ரா

கீழே:
விதான சௌதா எதிரே அதிகாலையில் ஓட்டம் பயின்ற பெண்கள் ஃபோட்டோவுக்காக நின்ற போது......
வண்ணப்படம்: யோகா

அத்லெடிக் அஸோஸியேஷனில் போலீஸார் நடத்திய கலாட்டா!


தேவாரம்.


ஜி. லக்ஷ்மணன்.

கடந்த 14.7.85 அன்று காலை 9.30 மணி அளவில் பெரம்பூர் ரயில்வே ஸ்டேடியத்தில் உள்ள தமிழ்நாடு அதலெடிக் அஸோஸியேஷன் அலுவலகம் முன்பு, மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் குழுமியிருந்தனர். அன்று தலைவர், உப தலைவர், செயலாளர் பதவிக்கான தேர்தலும் கூட்டமும் நடைபெறுவதாக இருந்ததால், அந்த இடம் பரபரப்பாக இருந்தது.

சற்று நேரத்தில் எட்டு அம்பாஸிடர் கார்கள், இரண்டு தனியார் பஸ்கள் ஆகியவற்றில் மஃப்டி உடையில் போலீஸார் வந்திறங்கினர். நேராகக் கூட்டம் நடைபெறுவதாக இருந்த இடத்துக்குச் சென்று அமர்ந்து கொண்டு கலாட்டா செய்தனர்.

இந்தக் கலாட்டாவுக்கெல்லாம் காரண கர்த்தா யார் என்று அதலெடிக் அஸோஸியேஷன் செயலாளர் லக்ஷ்மணனைக் கேட்ட போது சற்று விரிவாகவே சொன்னார்...

''மூன்று வருடங்களுக்கொரு முறை மாவட்ட மற்றும் நகரத்திலுள்ள பிரதிநிதிகள் ஒன்று கூடி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பது வழக்கம்.

''தேர்தல் நடைபெறும் தேதியை அறிவித்து, வோட்டு போடுவதற்காகத் தகுதியைக் குறிப்பிட்டு இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே மாவட்ட கவுன்ஸில்களுக்கு எழுதினோம். ஐந்து கிளப்புகளுக்கு ஒரு ஓட்டு என்ற விதத்தில் ஓட்டுரிமை உண்டு. மே மாதம் 31–ம் தேதிக்குள் வோட்டு போடத் தகுதியானவர் பட்டியலை அனுப்பும்படி மாவட்ட கவுன்ஸில்களைக் கேட்டுக் கொண்டோம்.

''ஆனால், மதுரை, கன்னியாகுமரி, திருச்சி, தஞ்சாவூர், கோயமுத்தூர் ஆகிய மாவட்டக் கவுன்ஸில்கள் மட்டும்தான் பதிலளித்தன. மற்ற மாவட்டங்களிலிருந்து பதிலில்லை.

''தலைவர் பதவிக்கு டி. ஐ. ஜி. தேவாரம் அவர்களும், செயலாளர் பதவிக்கு நானும் போட்டியிட்டோம். என்னை எதிர்த்து போலீஸ் டெபுடி கமிஷனர் சுப்பராயன் என்பவரும், ருக்மாங்கதன் என்பவரும் போட்டியிட்டனர். தேர்தல் நடந்த அன்று சுப்பராயனைத் தொடர்ந்துதான் போலீஸ் காரர்கள் வந்தார்கள். அவர்கள் ராஜீவ் காந்தியின் வருகையை ஒட்டிப் பாதுகாப்புக்காகப் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள். இந்தப் போலீஸ் காரர்கள் ஒவ்வொருவரும் 'நான் புதுக்கோட்டையைச் சேர்ந்தவன்,' 'பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தவன்' என்று ஒவ்வொரு மாவட்டத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு கூட்டம் நடக்கும் ஹாலுக்குள் ஓடினர். 'மே 31–ம் தேதிக்குள் அனுப்பச் சொன்ன லிஸ்ட் உங்கள் மாவட்டத்திலிருந்து வரவில்லையே?' என்று நான் கேட்ட போது, 'நாங்கள் அனுப்பி விட்டோமே!' என்று பொய் சொன்னார்கள். பல முறை வேண்டுகோள் விடுத்தும் அவர்கள் அந்த இடத்தை விட்டு நகருவதாக இல்லை. 'தேர்தலை உடனே நடத்து'' அது, இது, என்று காட்டுத்தனமாகக் கூச்சலிட்டார்கள். அவர்கள் நடந்து கொண்டதைப் பார்த்தால் ஏதோ திட்டமிட்டுத்தான் வந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது. வேறு வழியின்றித் தலைமையேற்று நடத்திய திரு. ரெட்டி அவர்கள் சலித்துப் போய்க் கூட்டத்தையே ஒத்தி வைத்தார்.

''பிறகு சுப்பராயன், ருக்மாங்கதன் ஆகியோர் ஒன்று கூடி, தங்களுக்குள் தனியாகப் பேசிக் கொண்டு ருக்மாங்கதன் அவர்களைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தார்களாம். சட்டப்படி அது செல்லுபடி ஆகாது!'' என்றார்.

டி. ஐ. ஜி. தேவாரம் அவர்களிடம் கேட்ட போது, ''என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால், அது சம்பந்தமாக எனக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. தேர்தலின் போது நடந்த கலாட்டா பற்றிப் பின்னர்தான் கேள்விப் பட்டேன். நேரில் பார்க்காததால் ஒன்றும் சொல்வதற்கில்லை!'' என்று அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். ஆனால் அது நமக்கு ஆச்சரியக் குறியாக அமைகிறது. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய போலீஸ்காரர்களே இப்படியெல்லாம் முறைகேடாக நடந்து கொள்வதா என்பது கேள்விக் குறியாகவும் விளங்குகிறது!

—நமது நிருபர்.

நன்ன ஜனகளு

—சித்தலிங்கையா—

[சித்தலிங்கையாவின் 'நன்ன ஜனகளு' என்கிற கவிதையை முதலில் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்தபோது அது என்னைக் கவரவில்லை. நண்பர் கார்லோஸ் (தமிழவன்) மூலம் அதன் கன்னட வடிவத்தில் அதைப் படித்த போது இந்த எளிய பாடலை ஏன் 'தலித்' இயக்கத்தின் முன்னோடிக் கவிதை என்று சொல்கிறார்கள் எனப் புரிந்தது.

என் தமிழ் மொழிபெயர்ப்பில் மூலக் கவிதையின் சந்தத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று எனக்குப் பட்டது.

—சுஜாதா.]



பசியினால் செத்தவர் பாறாங்கல் சுமந்தவர்
இசைவு கொண்டு இருப்பவர் என் ஜனங்களே.

காலுகை பிடிப்பவர் கைகள் கட்டி வாழ்பவர்
பக்தராப்பா பக்தரே என் ஜனங்களே.

வயலிலே உழைப்பவர் அறுவடை வியர்ப்பவர்
வெயிலிலே காய்பவர் என் ஜனங்களே.

வெறும் கையில் வந்தவர் அலுப்பினால் நொந்தவர்
வயிற்றிலே துண்டுகட்டி என் ஜனங்க!

மாளிகை எழுப்பினோர் பங்களாக்கள் கட்டினோர்
மாளிகைகள் அடியிலுள்ள என் ஜனங்களே.

வீதியில் இரிந்தவர் குரலிலாதிருந்தவர்
நெஞ்சிலே குமைபவர் என் ஜனங்களே.

வட்டி தந்து மாய்ந்தவர் பேச்செனும் நெருப்பிலே
எரிந்து சாம்பலானவர் என் ஜனங்களே.

பரமாத்மன் பெயர் சொல்லி வயிறாரத் தின்பவர்க்கு
பாதரட்சை தைப்பவர் என் ஜனங்களே!

தங்கம் தோண்டுகின்றவர் சோறு கண்டிராதவர்
ஆடை நெய்வர், வெற்றுடம்பில் சுற்றுவோர்

சொன்னதெல்லாம் கேட்பவர் என் ஜனங்களே.
சொப்பனத்தில் வாழ்பவர் என் ஜனங்களே.

—கன்னடத்திலிருந்து தமிழில்:
—சுஜாதா.




Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032· (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

எச்எம்டி கைகடிகாரங்கள்.

மூன்று கோடி முறைகளுக்கு மேலாக தரம் சோதிக்கப்பட்டவை



எச்எம்டி அணிந்திருக்கும் ஒருவரைக் கேளுங்கள் —
அவர்கள் மூன்றுகோடிக்கும் மேல் இருக்கிறார்கள்!

தரத்தை நிலைநிறுத்தியுள்ள கைகடிகாரங்கள் எச்எம்டி. இதை உபயோகிக்கும் மூன்று கோடிக்கும் மேலான மக்கள் இன்று உத்தரவாதத்துடன் கூறுவது இதையே. இன்னும் என்ன வேண்டும்? உபயோகிக்கும் ஒவ்வொருவரும் இதனுடைய தரத்திற்கு நற்சான்று பகர்ந்துள்ளனர்.

நாடு முழுவதும் நற்பெயரை எச்எம்டி கைகடிகாரங்கள் பெற்றிருப்பதின் ரகசியம்தான் என்ன?

இதனை வாங்குவோர், மிகச் சிறந்ததை பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு, கடுமையான தரக்கட்டுப்பாட்டுக்குடன்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. இந்த உறுதியில் நாங்கள் தளராது கடந்த 20 ஆண்டுகளாக பணியாற்றுகிறோம். மூலப் பொருளிலிருந்து முடிவு பெறும்வரை, ஒவ்வொரு நிலையிலும் கடுமையான தரக் கட்டுப்பாடை அளிப்பது என்ற உறுதிமொழியை தொடர்ந்து காப்பாற்றி வருகிறோம்.

உத்தரவாதம் கொடுக்கப்பட்ட தரமுடைய கைகடிகாரங்கள் எச்எம்டி. மூன்று கோடி மக்களின் வாக்கு தவறாக இருக்கமுடியாது.

hmt கைகடிகாரங்கள்

சோதனை வென்று சாதனை படைத்தல் — அதுதான் உத்தரவாதம்

வாட்ச் டிவிஷன்
hmt
நாட்டிற்கு நல்ல நேரம் காட்டுவோர்
தொழிற்கூடங்கள்: பெங்களூர் (I&II) ஸ்ரீநகர், தும்கூர், ரானிபாக்.



REGISTERED No. 4392
Registered as a Newspaper in Sri Lanka
[illegible] 1/75

